# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 197 வைகாசி 28ஆம் நாள் திங்கட்கிழமை 11 ஜூன் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# நாடாளுமன்றத்தை கலைக்கத் தயார்!

## அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11
தற்போது நாடாளுமன்றத்தை அரச தலைவரால் கலைக்க முடியாது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்துடனேயே அதனைக் கலைக்கலாம். நாடாளுமன்றம் இப்போதிருக்கின்ற நிலையிலேயே இணைந்து செயற்படுவதே சரியானதாகும். உள்ளக ரீதியில் அனைத்துக் கட்சிகளுக்கும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இது நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும். நாட்டை நேசிக்கும் அனைவரும் அந்த நெருக்கடிகளை மறந்து நாட்டுக்காக இணைந்து செயற்பட முன்வரவேண்டும். நாடாளுமன்றத்தைக் கலைப்பது என்றால் பெரும் >> 06

*யாழ்ப்பாணத்தில்*

## இன்று கடையடைப்பும் கண்டனப் பேரணியும்

யாழ்ப்பாணம், ஜூன் 11
வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்ட மீனவர்கள் தங்கி நின்று கடலட்டை பிடிப்பதற்கு எதிராக, யாழ்ப்பாணத்தில் இன்று மதியம் 12 மணி வரை கடையடைப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன், இன்று காலை 8.30 மணிக்கு, யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் முன்பாக ஆரம்பமாகும் கண்டனப் பேரணி, யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் வரையில் செல்லும். >> 25



## இராணுவக் கேணலுக்காக கண்கலங்கிய முல்லை மக்கள்

(விரிவு - பக்:12)

*சேலை வாங்கித் தரவில்லை:*

## மாணவி தவறான முடிவு எடுத்து உயிர்மாய்ப்பு

கொடிகாமத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
ஆலயத் தேர்த் திருவிழாவுக்குச் சேலை வாங்கித் தராததால் மனமுடைந்த 18 வயது பாடசாலை மாணவி தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் கொடிகாமம் எருவனில் நேற்று இடம்பெற்றுள்ளது. >> 06

## ரணில் - மைத்திரி சந்தித்துப் பேச்சு

முரண்பாடு முடிவுக்கு வரும் சாத்தியம்?

கொழும்பு, ஜூன் 11
அரச தலைவர் மைத்திரிபாலவுக்கும், தலைமை அமைச்சர் ரணிலுக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்ட மோதல்கள், இரண்டரை மணி நேரப் பேச்சுக்களை அடுத்து, சமாதானமான முறையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. >> 06

## பொலித்தீனில் கசிப்பு விற்பனை அமோகம்

பெண் உள்பட இருவர் விசுவமடுவில் கைது

(விரிவு - பக்:11)

## மன உளைச்சலால் மூதாட்டி உயிரிழப்பு

ஜே.சி.பி. பயன்படுத்தி தேர் இழுத்த சம்பவம் காரணமா?

யாழ்ப்பாணம், ஜூன் 11
வரணி சிமிழ் அம்மன் ஆலயத்தில் ஈடுபாடுடைய 80 வயது மூதாட்டி மனஉளைச்சலால் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வரணி சிமிழ் அம்மன் கோவிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற >> 06

## குறுக்குவழியில் முதலமைச்சர் பதவியை குத்தகைக்கு எடுக்க முயலக் கூடாது

*சுதந்திரபுரம் படுகொலை நினைவுநாளில் சிவமோகன் எம்.பி. ஆதங்கம்*



>> 06

*வவுனியாவில்*

## நீர்த்தேக்கத்தையும் விட்டு வைக்காத பெரும்பான்மையினர்

(விரிவு - பக்:12)



## கொக்குவிலில் வாள்வெட்டு இளைஞர் மடக்கிப் பிடிப்பு!

நேற்றுப் பெரும் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணம் கொக்குவிலில் நேற்று நடந்த வாள்வெட்டில் ஒருவர் காயமடைந்தார். வாள்வெட்டை நடத்தியவர்களில் ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். முற்பகல் 10.45 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. 4மோட்டார்சைக்கிள்களில்வந்தவர்கள் >> 06

## நாளை முதல் மண்ணெண்ணெய் விலை ரூ.31ஆல் குறைவடையும்

அமைச்சர் திலீப் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11
மண்ணெண்ணெய் விலை நாளை முதல் 31ரூபாவால் குறைக்கப்படும் என்று கடற்றொழில் நீரியல்வள இராஜாங்க அமைச்சர் திலீப் வெத ஆராச்சி தெரிவித்துள்ளார். >> 25

## இந்தியாவில் படித்த ஈழஏதிலிகளுக்கும் வேலைவாய்ப்பு

வடக்கு மாகாணசபையில் வருகின்றது பிரேரணை

(விரிவு - பக்:12)

## புதூர் நாகதம்பிரானுக்கு இன்று பொங்கல்

(விரிவு - பக்: 12)

## மாங்குளத்தில் 10,000 ஏக்கரில் விரைவில் தெங்குச் செய்கை

*தலைமை அமைச்சர் ரணில் அறிவிப்பு*

கொழும்பு, ஜூன் 11
வடமத்திய மற்றும் வடக்கு மாகாணத்தில் 15 ஆயிரம் ஏக்கரில் தெங்குப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளது. வடக்கில் மாங்குளத்தில் 10 ஆயிரம் ஏக்கரில் தெங்குப் பயிர்ச் செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்குரிய காணிகள் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. எஞ்சிய 18 மாத காலத்தினுள் கூட்டு அரசு பெரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும். இவ்வாறு தலைமை >> 25

*காணாமற்போன*

## உடுப்பிட்டி இளைஞன் காயங்களுடன் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11
கடந்த பத்து நாள்களாகக் காணாமற்போன உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் கைகள் கட்டப்பட்ட நிலையில் காயங்களுடன் நேற்று அதிகாலை மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். >> 25

# இந்துக்களின் அடையாளத்தை பேணிப் பாதுகாப்பது அவசியம்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

இந்துக்களின் புராதன ஆலயங்களும், புராணக் கதைகளைக் கொண்ட ஆலயங்கள் பலவும் தற்போது அழிக்கப்பட்டு அல்லது உருச்சிதைக்கப்பட்டு அந்த இடத்தில் இந்துக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் தெரியாத வகையில் உருமறைப்புச் செய்யப்படுகின்றன. இவ்வாறான கபட நோக்கம் கொண்ட நிகழ்வுகளிலிருந்து எமது ஆலயங்கள் பாதுகாக்கப்படவேண்டும்.



இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் அன்னதான மடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வடக்கு மாகாண முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் புதூர் நாகதம்பிரான் ஆலயத்துக்கு அதன் உற்சவ தினங்களில் வந்து நாகதம்பிரானைத் தரிசிக்கும் வாய்ப்புக்கள் எனக்கு இதுவரை கிட்டவில்லை. இன்று வடமாகாணசபையின் உறுப்பினர் தியாகராஜாவின் அழைப்பின் பேரில் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு ஆலய தரிசனத்தை மேற்கொண்டு செல்லக்கூடிய வாய்ப்புக் கிட்டியதை இறைவனின் சித்தமாகவே கருதுகின்றேன். எனக்கும் பாம்புகளுக்கும் இடையில் ஒரு உறவு உண்டு. என்னுடைய வாழ்வில் முக்கிய நிகழ்வுகள் நடைபெறும் போது அந்த நிகழ்வுக்கு முன் ஏதாவது ஒரு பாம்பு என் வீட்டுக்கு வந்து போகும். என்னுடைய இரு இளமாணிப்பட்டங்கள் பெற்றபோதும் சட்டக் கல்லூரி பரீட்சைகளுக்கு தெரிவாகிய போதும், பரீட்சைகளுக்குச் சில நாட்களுக்கு முன்னர் ஏதாவது ஒரு பாம்பு என்னைத் தேடி வரும். அதனால் கடைசிக் கட்டங்களில் பரீட்சைக்கு முன் பாம்பைத் தேடிக் கொண்டிருப்பேன். அவை வந்தால் பரீட்சையில் சித்தி அடைந்து விடுவேன் என்ற நம்பிக்கை. ஒரு முறை பாம்பு வரவில்லை. மனவருத்தத்தில் இருந்த போது என் தந்தையார் காலமாகிவிட்டார். நான் அந்த மாதம் சட்டக் கல்லூரிப் பரீட்சைக்குத் தோற்றவில்லை.

நான் பதுளையில் மேல்நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது ஒரு வெள்ளை நாகம் வீடுதேடி வந்தது. உடனே என் தங்கையார் நான் இடம்மாறப் போகின்றேன் - என்றார். 2 வாரங்களில் எனக்குக் கொழும்புக்கு மாற்றம் கிடைத்தது. நாகங்களைத் தரிசிப்பதை, நாகதம்பிரான் கோயில்களுக்குச் செல்வதை இறைவன் சித்தமாகவே நான் கருதி வருகின்றேன்.

இலங்கைத் தீவின் வடமாகாணத்தின் வவுனியா மாவட்டத்திலுள்ள புதூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் இந்த நாகதம்பிரான் பலநூற்றாண்டு பழமை வாய்ந்த ஒரு ஆலயம். பல நாகதம்பிரான் ஆலயங்கள் வடமாகாணத்தில் நாகர்கள் வாழ்ந்த காலந்தொட்டே இருந்து வருகின்றன. நாகர்கள் தமிழர்களே என்று பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார். நாக வழிபாடு இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய வழிபாடு என்று கூறலாம். நாகதம்பிரான் பற்றி வாய் வழிக் கதைகள் பல உண்டு. .

இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகளாக இனங்காணப்பட்டுள்ள தமிழ் மக்களின் வரலாறுகள் முறையாகப் பேணப்படாமையால் இன்று எமது புராதன வரலாறுகள் மாற்றி எழுதப்படுகின்றன. வேண்டுமென்றே அழிக்கப்படுகின்றன. இது எமக்கு வேதனையளிக்கின்றது. ஆகவே வரலாறுகள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். எமது ஆவணங்கள் முறையாக பாதுகாக்கப்பட முடியாதவிடத்து அவற்றைக் கடல்கடந்த நாடுகளில் பேணக் கூடிய ஒரு ஆவணக் காப்பகத்திலாவது பேணிப் பாதுகாக்கப்படவேண்டியது அவசியமாகும் - என்றார். (ற-ரி5)


# புதூர் நாகதம்பிரான் ஆலய வரவேற்புக் கோபுரம் திறப்பு

வவுனியா, ஜூன் 11

வவுனியா, புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வரவேற்புக் கோபுரம் நேற்றுத் திறக்கப்பட்டது. வரலாற்று நூல் வெளியீட்டு விழா, அன்னதான மடத்துக்கான அடிக்கல் நடும் விழா என்பன போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன.

ஏ-9 வீதி புதூர் சந்தியில் அமைந்துள்ள அலங்கார நுழைவாயில் திறப்பு விழா காலை 9 மணியளவில் ஆலய தலைவர் இ.பூலோகசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நுழைவாயில் கோபுரம் புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் கோபால் பிறேமா குடும்பத்தினரால் 30 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபையின் தலைவர் .இ.தணிகாசலம் ஆகியோர் இணைந்து நாடா வெட்டி நுழைவாயிலைத் திறந்தனர். மு.ப. 10 மணிக்கு அன்னதான மடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது. சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டு திருமுறைகள் ஓதப்பட்டு அடிக்கல் நடப்பட்டது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அடிக்கல் நட்டார். மாகாண சபை உறுப்பினர்களா ம.தியாகராஜா. ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோரும் அடிக்கல் நட்டனர்.



தொடர்ந்து ஆலயத்தின் வரலாறு, தோற்றம், வளர்ச்சி, அன்னதானப் பணி போன்றவற்றை விவரிக்கும் நூல் வெளியிடப்பட்டது. முதற்பிரதியை ஆ.நவரத்தினராசாவும், மு.மதிதரனும் பெற்றுக் கொண்டனர். வெளியீட்டுரையையும், நயவுரையையும் தமிழருவி சிவகுமாரன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ம.தியாகராஜா, ப.சத்தியலிங்கம், ஜி.ரி. லிங்கநாதன், வவுனியா நகரசபை உறுப்பினர் கே.ராஜலிங்கம் உள்பட பொது அமைப்புகளை சேர்ந்தோர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அதேவேளை, ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று நடைபெறவுள்ளது. (ற-110)

## சந்தன மர குற்றிகளுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூன்11

பன்னல எலபடகம பிரதேசத்தில் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்குத் தயார் செய்யப்பட்டிருந்த சந்தன மரக் குற்றிகளுடன், இரு சந்தேக நபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 6 ஆயிரத்து 700 கிலோ கிராம் மரக் குற்றிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## சூட்டுடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூவர் கைது

மட்டக்களப்பு, ஜூன்11

மட்டக்களப்பில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மூவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தில் மூவரைக் கைது செய்தனர். அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி5)

## மரங்கள் முறிந்ததில் குடியிருப்புகள் சேதம்

கண்டி, ஜூன் 11

தலவாகலை மடகும்புறவில் உள்ள இரண்டு குடியிருப்புகள் மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் குடியிருப்புகள் சேதமடைந்தன. ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்தது.

காயமடைந்தவர் மடக்குபற மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சேதமடைந்த இரு குடியிருப்பாளர்களும் தற்காலிகமாக ஓரிடத்தில் தங்கவைக்கபட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி5)

## சிறப்புச் சோதனையில் சிக்கிய 33 பேர் மன்றில்

திருமலை, ஜூன் 11

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சோதனை நடவடிக்கைகளின் போது 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில், மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்கள், நீதிமன்றத்தால் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் போன்றவர்கள் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

## தமிழர் வரலாற்றை மாற்றவே புத்த விகாரைகள் உருவாக்கம்

### சாந்தி எம்.பி. சுட்டிக்காட்டு

வவுனியா, ஜூன் 11

தமிழ் மக்களின் வரலாறுகளை அழிக்கும் நோக்குடனேயே புத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா.

புதூர் நாகதம்பிரான் ஆலயத்தில் நேற்று ஆலய வரலாற்றை வெளிப்படுத்தும் நூல் வெளியீடு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

30 வருட காலப் போர் மற்றும் இறுதிப் போரைச் சந்தித்த இந்த வன்னி மண் தமது ஆவணங்களை மட்டும் இழக்கவில்லை. சொத்துக்கள், சுகங்கள், தங்களது சொந்தங்களைத் தொலைத்து மக்கள் வெறும் கைகளோடு உள்ளனர்.

தற்போது தமிழர்களது பண்பாடுகளை, வரலாறுகளை, இருப்புகளை மாற்றி அமைக்கும் விதத்தில் பல்வேறுவிதமான நிகழ்வுகளை மாற்றார்கள் அரங்கேற்றுகின்றனர். அதில் ஒன்றுதான் புத்த கோயில்கள் அமைப்பதும், தொல்லியல் அகழ்வுகளின் ஊடாக தமிழர்களின் பாரம்பரியங்களை மாற்றியமைப்பதும்.

தமிழர்களின் பண்பாடு, பாரம்பரியம், விழுமியங்களை எடுத்துரைக்கின்ற இவ்வாறான நூல்கள் ஆவண ரீதியாக வெளிவருதல் என்பது காலத்தின் கட்டாயமாகும்.

புதூர் நாகதம்பிரானின் வரலாற்றை வெளியிடுகின்ற இந்த நூல் வெளியீடு என்பது காலத்தின் தேவையாகவுள்ளது நாம் ஒரு நல்ல சந்ததியை உருவாக்க வேண்டிய தேவையில் இருக்கிறோம் எமது பிள்ளைகளை ஒழுக்க சீலர்களாக வளர்க்க வேண்டிய தேவை எம்மிடத்திலே இருக்கிறது. நாம் கிராமம் தோறும் அறநெறிப் பாடசாலைகளை உருவாக்கவேண்டும் அதற்குப் புலம்பெயர் உறவுகள் பங்களிக்கவேண்டும் - என்றார். (ற-110)

# மைத்திரி குணரட்ணவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## நலிந்த ஜயதிஸ்ச எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜீன் 11**

**ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் மைத்திரி குணரட்ணவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ச தெரிவித்தார்.**

பேர்ச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்திடம் நிதி பெற்றறார் என்று மைத்திரி குணரட்ண தம்மீது குற்றம் சுமத்தியுள்ள மைக்கு எதிராகவே தாம் இந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து கருத்து தெரிவித்த மைத்திரி குணரட்ண, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ச பேர்ச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்திடம் இருந்து பணம் பெற்றார் என்று கூறியிருந்தார்.

(ற-ரி5)



## தூயஒளி படகுக் கொலை 32ஆவது ஆண்டு நிறைவு

### குருநகரில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜீன் 11

1986ஆம் ஆண்டு மண்டைதீவுக் கடற்பரப்பில் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 31மீனவர்களின் 32 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு (தூய ஒளிப் படகுப் படுகொலை) நேற்று நடைபெற்றது.

குருநகரில் உள்ள நினைவுத் தூபியில் குருநகர் யாகப்பர் ஆலய பங்குத் தந்தை ரவிச்சந்தின் அடிகளின் தலைமையில் நினைவு நிகழ்வு நடைபெற்றது. படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களில் ஒருவரது உறவினர் முதன்மைச் சுடரை ஏற்றினார். யாழ்ப்பாண மாநகர சபை மேயர் இ.ஆனோல்ட், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் எஸ்.கஜேந்திரன் ஆகியோர் சுடர் ஏற்றினர். படுகொலை செய்யப்பட்ட மீனவர்களின் உறவினர்களும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (ற-23.135)



*1986ஆம் ஆண்டு கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் 32ஆவது நினைவேந்தலை முன்னிட்டு நேற்று குருதிக் கொடை வழங்கப்பட்டது. குருநகர் இளையோர் சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற முகாமில் 50க்கும் மேற்பட்டவர்கள் குருதிக் கொடை வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5,135)*

## ஊடகவியலாளர் அப்துல் காதர் காலமானார்

மன்னார், ஜீன்11

மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளரான மக்கள் காதர் என அனைவராலும் அழைக்கப்படும் மதார் முகைதீன் அப்துல் காதர் தனது 76 ஆவது வயதில் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இவர் மன்னார் மூர்வீதி யைப் பிறப்பிடமாக கொண் டவர். சமூக வேறுபாடுகளைக் களைந்து ஊடகத்துறையிலும், பொதுத் துறையிலும் தமிழ் மக்களோடு இணைந்து பணியாற்றினார்.

மன்னாரைத் தளமாக கொண்டு இயங்கி வந்த தகவல் தொடர்பாடலுக்கான ஊடக வலைப்பின்னல் நிலையத்தின் மூத்த ஆலோசகராகவும் பிராந்திய செய்தியாளராகவும் பணியாற்றினார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

## ஜே.வி.பியின் திருத்தம் நாட்டை பிளவுபடுத்தும்

### தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜீன் 11

மக்கள் விடுதலை முன்னணியால் கொண்டுவரப்பட்ட 20ஆவது அரசியல் திருத்தம் பிரிவினைவாத நோக்குடையது என்று தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது. கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின்போதே அதன் பேச்சாளர் மொகமட் முசாமில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை நீக்குதல், தேர்தல் முறைமையை மாற்றுதல் ஆகிய இரண்டு விடயங்களை முன்னிறுத்தி நாட்டை பிளவு படுத்தும் விதமாக ஜே.வி.பி. செயற்படுகிறது. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மக்களுக்கு நஞ்சையூட்டும் முயற்சியில் ஜே.வி.பி. ஈடுபடுள்ளது. என்றார்.

(ற-ரி5)

## அடிபணியாமல் இருப்பதாலேயே விக்னேஸ்வரனை சாடுகின்றனர்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஐங்கரநேசன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜீன் 11

அரசியல்வாதிகள் சிலர் முதலமைச்சர் மீதும், வடக்கு மாகாணசபை மீதும் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின்றனர். மாகாணசபை சரியாக இயங்கவில்லை என்றும், வந்த அபிவிருத்தித் திட்டங்களைத் திருப்பி அனுப்பியதைத் தவிர முதலமைச்சர் வேறு எதனையுமே செய்யவில்லை என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினரும், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

பொ.ஐங்கரநேசனுக்கு ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து வீடுகள் சீரமைப்பதற்கான கட்டுமானப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு ரூபா 6 இலட்சம் பெறுமதியான சீமெந்துப் பைகளும், கூரைத் தகடுகளும் வழங்கிவைக்கப்பட்டன. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு ஏராளமான தேவைகள் இருக்கின்றன. மாகாண சபைக்கு ஒதுக்கப்படும் நிதியோ மிகக்குறைவாகவே உள்ளது. இந்தச் சொற்ப நிதியை வைத்து உங்களின் தேவைகளை முழுமையாக எங்களால் நிறைவேற்றமுடியாமல் உள்ளது. எங்களுக்கு வாக்களித்தும் நாங்கள் உங்களுக்கு உதவவில்லையென்று எங்கள் மீது உங்களுக்கு விரக்தியும் கோபமும் ஏற்படுகிறது.

மாகாண சபையை நிர்வகிக்கும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தில் உள்ள குறைபாடு களையும், அரசின் எதேச்சாதிகாரத்தால் ஏற்படுகின்ற பிணக்குகளையும் தனிப்பட்ட முதலமைச்சர் விக்னேஸ்வரனின் குறைபாடுகளாகவும், அவரது விதண்டாவாதமாகவும் மக்கள் மத்தியில் அரசியல்வாதிகள் விசமப் பரப்புரை செய்யத் தொடங்கியுள்ளார்கள்.

நடைபெற்றது தமிழினப் படுகொலை என்பதை எவருக்கும் அடிபணியாமல் உரத்துச் சொல்லும் தமிழ்த்தலைவராக இன்று விக்னேஸ்வரன் இருப்பதால் அவர்மீண்டும்முதலமைச்சராக வருவதை அரசும், அரசோடு ஒட்டி உறவாடுபவர்களும் விரும்பவில்லை. அடுத்த முதலமைச்சர் தாங்கள் தான் என்று கனவு காண்பவர்களும் முதலமைச்சராக விக்னேஸ்வரன் அவர்கள் தொடர்வதை விரும்பவில்லை. இவர்களே வடக்கு முதலமைச்சர் மீது விமர்ச னங்களை முன்வைத்து வருகிறார்கள் - என்றார்.

(ற)

## பாரவூர்தி திருடிய நபர் கைது

கொழும்பு,ஜீன் 11

சிறிய பாரவூர்தியொன்றைத் திருடிய குற்றச்சாட்டில் நபரொருவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் குளியாபிட்டி குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

குளியாபிட்டியிலுள்ள வீடொன்றிலிருந்து கடந்த 8 ஆம் திகதி இந்தப் பாரவூர்தி திருட்டுப் போயுள்ளது. பாரவூர்தி உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். இங்குருவத்தை பிரதேசத்தை சேர்ந்த 28 வயதான இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)

## மாத்தளையில் மாணவரிடையே போதைப் பாவனை அதிகரிப்பு

### *பாலித ஜயசேகர சுட்டிக்காட்டு*


கொழும்பு, ஜீன்.11

மாத்தளை மாவட்டத்தின் பாடசாலை மாணவர்கள், போதைக்கு அடிமையாகும் சாத்தியங்கள் காணப்படுகின்றன என மாத்தளை மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பாலித ஜயசேகர தெரிவித்துள்ளார். மாத்தளை மாநகர சபையில் அண்மையில் இடம்பெற்ற ஒன்றுகூடலில் கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

ஓட்டோக்களில் போதைப்பொருள் விற்பனை செய்யும் அளவுக்கு, தற்போது நிலைமை மாறியுள்ளது. பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து, போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் செயற்பாடுகளே அதிகம் முன்னெடுக்கப்படு கின்றன. இது தொடர்பில், மாத்தளை பொலிஸ் நிலையத்துக்கு, மாநகர சபை அறிவுறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.. (ற-ரி5)

**விளம்பி வருஷ வீரமாகாளியின் சிறப்பம்சம்**



**புகழ் வீரமாகாளி போற்றி வாழ்வாம்**

வண்ணை வீரமா காளிமேல் வாழ்த்துப் பாடி
வணங்கியே நாம் துதிக்க வழியும் காட்டி
எண்ணமதில் எம் தாயார் நிறைய வேண்டி
எல்லாரும் நினைத்திடவும் இறைவி நாமம்
கண்ணான தமிழ் சைவம் காத்துப் போற்ற
காலை வரும் உதயமதில் காட்சி காட்டும்
பொன்னான உம் சேவை புனிதம் கண்டு
புகழ் வீரமாகாளி போற்றி வாழ்வாம்.

ஆக்கம்: கலாபூஷணம் குடாநீருரான்

**[இன்று (11.06.2018) திங்கட்கிழமை வண்ணை வீரமாகாளியம்பாளின் 8 ஆம் திருவிழா.] அன்னதானம் இடம்பெறும்.**

# 40 இலட்சம் ரூபா செலவில் தெருவிளக்குகள் பொருத்த நடவடிக்கை

சாவகச்சேரி, ஜூன் 11

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 40 இலட்சம் ரூபா செலவில் தெருவிளக்குகள் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதென பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபை அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தெரு விளக்குகள் பொருத்த கொடிகாமம் நகரப் பகுதியில் 5 இலட்சம் ரூபாவும், கைதடி சந்திப் பகுதியில் 3 இலட்சம் ரூபாவும் பயன்படுத்தப்படவுள்ளது சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கப்படவுள்ளது என்றார்

சபையின் 18 வட்டாரங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 31 உறுப்பினர்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டதையடுத்து பிரதேசத்தின் 49 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மிகவிரைவில் தெருவிளக்குகள் பொருத்தப்படுமென கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

சபையில் மின்பகுதிக்கான தொழிலாளி கடமையாற்றுகின்ற போதிலும் தெருவிளக்குகள் இலங்கை மின்சார சபையின் ஊழியர்களாலேயே பொருத்தப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளதால் தெரு விளக்குப் பொருத்துவதற்கு மின்சார சபைக்கு பெருமளவு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதென உறுப்பினர்களால் கவலை தெரிவிக்கப்பட்டன.

இதேவேளை கடந்த சபையின் காலத்தில் அவ்வேளையில் இயங்கிய 18 உறுப்பினர்களுக்கும் தலா 2 இலட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டு முக்கியமான இடங்களில் தெருவிளக்குகள் பொருத்தப்பட்டன எனவும் பொருத்தப்பட்டு ஓராண்டு காலப்பகுதிக்குள் அனைத்துத் தெருவிளக்குகளும் பழுதடைந்தன எனவும் சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் வேண்டுகோளின் பிரகாரம் பழுதடைந்த தெரு விளக்குகளுக்குப் பதிலாகப் புதிய விளக்குகள் அடிக்கடி மாற்றப்பட்டன எனவும் கைதடியிலிருந்து முதன்மைச் சாலையில் நாவற்குழிப் பாலம் வரையான பகுதிகளிலும் நாவற்குழிச் சந்தியிலிருந்து தனன்களப்பு வரையும் பொருத்தப்பட்ட பல தெருவிளக்குகள் கடற்காற்றால் பழுதடைந்து சாலையில் வீழ்ந்து நொருங்கின எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (9)

## யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் மீள்வாழ்வு நிலையம்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குவைத் அரசின் 500 மில்லி. ரூபா நிதிப் பங்களிப்பின் மூலம் மீள் வாழ்வு நிலையக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அண்மையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இந்த மீள்வாழ்வு நிலையக் கட்டுமானப்பணிக்கான அனுமதி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட நிலையில் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (114)

## மார்க்கண்டுசுவாமிகள் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், யூன் 11

மார்க்கண்டு சுவாமிகள் குரு பூசை நிகழ்வு அவரது பிறந்த ஊரான யாழ்ப்பாணம் பிரான்பற்றில் அமைந்த மார்க்கண்டு சுவாமிகள் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மார்க்கண்டு சுவாமிகள் சபையின் நிறுவுநர் ந. சண்கமுக ராஜ தலைமையில் நடைறவுள்ளது. அன்றைய தினம் மார்க்கண்டுசுவாமிகள் முன்பள்ளி, அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.


## வல்வெட்டித்துறையில் கைகலப்பு 6 பேர் கைது, 6 உந்துருளிகளும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

வல்வெட்டித்துறை நெடியகாடு மைதான கைகலப்பு தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெடியகாடு விளையாட்டு மைதானம் தொடர்பில் இரண்டு விளையாட்டு கழகங்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. கைகலப்பில் 15 பேர் காயங்களுக்கு உள்ளான நிலையில் ஊரணி, மந்திகை, யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் தொடக்கம் நேற்று வரை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் 6 உந்துருளிகளைக் கைப்பற்றினர். 6 பேர் சந்தேகத்தில் பொலிஸாரால் நேற்றுக்கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் நேற்றுமுற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (5,7,26)



## காணாமல் போன மாடு எலும்புகளாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

எலும்பு, தோல், தலைமட்டும் மிஞ்சிய நிலையில் மாடு ஒன்று கப்புதுப் பற்றைக்குள் கண்டுபிடிக்கப்பட்டது. மாட்டைக் குடைந்து இறைச்சியை மாத்திரம் வார்த்தெடுத்த கடத்தல் காரர்கள் தலையை சிதைக்காது விட்டதனால் அந்த மாடு அடையாளம் காணப்பட்டுள்ளது. புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் காணமல் போன மாடே கப்புது பற்றைக்குள் மீட்கப்பட்டது என மாட்டின் தலையை வைத்து உரிமையாளர் காணாமல் போன தனது மாட்டை அடையாளம் காட்டியுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

அண்மைக் காலமாகப் புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் மாடுகள் காணாமல் போகின்றது என மாட்டின் உரிமையாளர்களால் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அண்மையில் வடமராட்சிப் பகுதியில் இறைச்சிக்காகப் பயன்படுத்தி இருக்காலாம் என்ற சந்தேகத்தில் மாட்டின் உரிமையாளர்களால் கப்புதுப் பகுதியில் தேடு

தல் நடத்தப்பட்டது. இந்த நிலையில் குறித்த ஒரு மாடு கழுத்துடன் இறைச்சி மாத்திரம் எடுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது உரியவர்கள் கவனம் எடுத்து மாடு திருடுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (21,422)

## மகோற்சவம்

கரவெட்டி, ஜூன் 11

யாழ்ப்பாணம் கரவெட்டி கிழக்கு தல்லையப்புலம் வீரபத்திரர் சமேத பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்தோற்சவமும் இடம்பெற்று திருவிழா நிறைவு பெறும்.



## குடிதண்ணீர் தாங்கி வாகனம் கையளிப்பு

சாவகச்சேரி, ஜூன் 11

தென்மராட்சி பிரதேசத்தில் வறட்சி நிலவும் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கவென குடிதண்ணீர் தாங்கியும் வாகனமும் சாவகச்சேரி பிரதேச சபைக்கு கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு இடர் முகாமைத்துவ திணைக்களத்தினால் வறட்சிக்கான குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட உழவி இயந்திரமும் குடிதண்ணீர் தாங்கியும் பிரதேச செயலக கணக்காளரினால் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளரிடம் கையளிக்கப்பட்டது.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை காணப்படும் இடங்கள் இனங்காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வழங்கப்படுமெனப் பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன் தெரிவித்தார். (9)

## இலவச கருத்தரங்கும் தேர்வும்





தென்மராட்சி, ஜூன் 11

பொக்கிஷம் கல்விப் பிரிவு மற்றும் சிவமணி அறக்கட்ளை ஆகியவற்றின் ஏற்பாட்டில் கைதடிப் பிரதேச பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கும் தேர்வும் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நடத்தப்பட்ட தேர்வில் 180 புள்ளிகள் பெற்ற இரு மாணவர்களுக்கும் 175 புள்ளிகள் பெற்ற இரு மாணவர்களுக்கும் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## பழரச தொழிற்சாலையின் அபிவிருத்திக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 11

சுன்னாகம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் ஜசுபி பழரசத் தொழிற்சாலையின் அபிவிருத்திக்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ்ப்பாணத்துக்கான இந்தியக் கொன்சூலர் ஜெனரல் எஸ். பாலச்சந்திரன் உறுதியளித்துள்ளார்.

ஜசுபி பழரசத் தொழில்சாலைகளுக்குச் சென்ற இந்தியக் கொன்சூலர் ஜெனரல் அங்கு பழரசத் தொழில்சாலையின் செயற்பாடுகள், அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடினார். சங்கத்தின் தலைவர் சி. குமரவேல் மற்றும் சங்க அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது, ஜசுபி பழரசத் தொழில்சாலையின் எதிர்கால அபிவிருத்திக்குத் தேவையான உதவிகளையும் துறைசார்ந்த பயிற்சிகளையும் வழங்குவதற்கு ஏற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் இதன்போது கூறினார்.

சங்கத்தின் பொதுமுகாமையாளர் ம. சுரேஸ், ப்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ச. சியாமளா கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். பாலரவி, ஜசுபி தொழில்சாலை முகாமையாளர் சி. சிவகுமார் போன்றோரும் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (21,17)

## நினைவேந்தல் நிகழ்வு

கொழும்பு, ஜூன் 11

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னாள் துணைத்தலைவர் மறைந்த ந. கருணை ஆனந்தனின் நினைவேந்தல் நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு சங்கத் தலைவர் தம்பு சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

# பிரதேச சபையின் சொத்துக்களும் அபரிக்கப்படுகிறதா?

## விவரங்களைக் கோருகிறது சாவகச்சேரிப் பிரதேச சபை

சாவகச்சேரி, ஜூன் 11
சாவகச்சேரிநகரசபைக்குச்சொந்தமான காணிகள் கிணறுகள் குளங்கள் போன்றவை தொடர்பான கணக்கெடுப்பு விரைவில் சபை அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவுள்ளன. அவை தொடர்பான விவரங்கள் தெரிந்தோர் சபைக்கு ஒத்தழைப்பு நல்கி அவற்றைத் தெரியப்படுத்துமாறு சபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; சபையின்சொத்துக்கள்பலதனிப்பட்டவர்களால்மறைத்துஅடைக்கப்பட்டுப்பயன்படுத்தப்பட்டுவருகின்றன என முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாலும் சபைக்குச் சொந்தமான காணிகள், கிணறுகள், குளங்கள், கேணிகள்போன்றவற்றின் அபிவிருத்திகளை மேற்கொள்ள விவரங்களை அனுப்பி வைக்குமாறு திணைக்களம் கோரியுள்ளதாலும் இவற்றின் விவரங்கள் சேகரிக்கும் பணிகள்விரைவில்ஆரம்பிக்கப்படவுள்ளன. சபையின் காணிகளில்சிலர்கட்டடங்கள்அமைத்துப் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் சில பொதுக் கிணறுகளைக் காணிஉரிமையாளர்கள்அடைத்துத் தமது தேவைக்குப் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் முறைப்பாடுகள்கிடைத்துள்ளன. இதனடிப்படையில் வரியிறுப்பாளர்களுடன் சுமூக உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் அந்தக் காணிகளைச் சபைக்கு இனங்காட்டி விடுவிக்க வேண்டும்.

பொதுக்கிணறுகளைப்பொதுமக்களின் பாவனைக்கு விட வேண்டும். விவரங்கள் கிடைக்கும் வேளையில்சபையின்வேண்டுகோளுக்கு எதிராகச் செயற்படுவோர்மீதுசட்டநடவடிக்கைஎடுக்கப்பட்டுக் காணிகள் கிணறுகள் சபையால் கையகப்படுத்தப்படும்.

பதிவேடுகளின் பிரகாரம் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 30க்குமேற்பட்ட பொதுக்கிணறுகள் 3 மடங்கள் , கேணிகள் காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றின்விவரங்கள்பெறமுடியாதுள்ளன. அவ்வாறானகாணிகள், கிணறுகள் பற்றிய விவரங்கள் தெரிந்தோர் சபையுடன் தொடர்பு கொள்ளுங்கள் -என்று அறிவித்துள்ளார். (21,9)

## கடும் காற்றினால் மரங்கள் முறிவு

வடமராட்சி, ஜூன் 11
தென்மேல்பருவப்பெயர்ச்சிக்காற்று(சோழக்காற்று) வடமராட்சியில் மிகக் கடுமையாக வீசி வருவதனால் பிரதேசத்தில் ஆங்காங்கே வாழை, முருங்கை போன்ற பயன்தரு மரங்கள் பல முறிந்துள்ளன.

பருத்தித்துறைமத்தியபஸ்நிலையத்தில்நகரசபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பயணிகள் தங்கி நிற்கும்பஸ்தரிப்பிடக்கூரைநேற்றுமுன்தினம்சனிக்கிழமை பகல் வீசிய கடும் காற்றால் பிடுங்கப்பட்டு எறியப்பட்டது. இதனால் குறித்த பஸ் தரிப்பிடம் மொட்டையாகக் காட்சி அளிக்கின்றது.

இது தவிர கட்டுமானப் பணிகள் இடம்பெறும் இடங்களின் வேலையாள்கள், பணியாளர்கள் தங்குவதற்கெனதகரத்திலானகொட்டகைக்குடிசைகள்பலவும் காற்றால் அள்ளுண்டு செல்லப்பட்டுள்ளன. (எ173)



யாழ்ப்பாணம் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

மாணவர்தொகைகுறைந்தபின்தங்கியபாடசாலையாக இருந்தபோதும் கடந்தவருடம்சாதாரணதரப்பரீட்சையில்சித்தியடைந்த12மாணவர்கள் மதிப் புறுத்தப்பட்டனர். பழைய மாணவர் சங்கத் தலைவர் சி.மோகனதாஸ் உதவுதொகை பரிசில்களை வழங்கிவைத்தார். (135)

# குருபூசைத் தினங்கள் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11
திருஞானசம்பந்தமூர்த்தி, திருநாவுக்கரசு நாயனார் ஆகியோரின் குருபூசை தினத்தை முன்னிட்டு சிறுவர்களின் அறநெறிக் கல்வியின்தேவையைஎடுத்துக்காட்டும் நோக்கில் அறநெறிக் கொடிதின நிகழ்வும், குருபூசை விழாவும் நாயன்மார்கட்டு நாயன்மார் குருபூசை மடத்தில் நேற்று நடைபெற்றது.

நாயன்மார்குருபூசைமடமும், சதாசிவக்குருக்கள் அறநெறிப்பாடசாலையும்இணைந்துநடத்தியஇந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக நாயன்மார்கட்டு அரசகேசரிப்பிள்ளையார்ஆலயத்தில்இருந்துதெய்வீகப் பேரணியாக குருபூசை மடத்துக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

குருபூசை மடத்தில் தெய்வீக மரம் நடப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிவஸ்ரீசதா. மகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் நல்லை ஆதீன குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்தபரமாச்சாரியசுவாமிகள் மற்றும் யாழ்ப்பாணம் சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியார் சுவாமிசிதாகாஷானந்தாஆகியோரால்ஆசியுரைகள்நிகழ்த்தப்பட்டது.

அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளில் முக்கிய அம்சமாக "திருமுறைக்கு ஆடல்" என்ற கருப்பொருளில் "அங்கமும் வேதமும்", "குனித்த புருவமும்" என்னும்தேவாரங்களுக்குநடனம் ஆடியமை அனைவரினதும் வரவேற்பைப் பெற்றது.

சமய அறிவு, பண்ணிசைப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணமாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினர்களாக வடக்குப் பிராந்திய இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர் திருமதி மா. அனந்தலக் ஷ்மி, ஜே/109இன் சங்கிலியன் தோப்பு கிராமஅலுவலர்திருமதிவி.பவித்ரா உள்படமாணவர்கள், அடியவர்கள் எனப்பலர்கலந்துகொண்டனர். (7-106)







## பாசையூர் அந்தோனியார் ஆலய தேர்ப்பவனியில் இம்முறை மாற்றம்

கொழும்புத்துறை ஜூன் 11
பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய தேர்ப்பவனி செல்லும் பாதை மற்றும் நேர ஒழுங்குகளில் இம்முறை சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக பங்குத்தந்தை அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகள் தெரிவித்துள்ளார்.

வளன்புரம், மகேந்திரபுரம் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வழமையாக திருவிழா தினத்தன்று மாலை 4.15மணிக்கு ஆரம்பமாகும் தேர்ப்பவனி இம்முறை மாலை 3.45 மணிக்கு ஆரம்பமாகி சென் அன்ரனீஸ் வீதி, சுவாமியார் குறுக்கு வீதி வழியாக வளன்புரம் சென்யோசப் வீதி, கடற்கரை வீதி வழியாக மகேந்திரபுரம் சென்று பாஷையூர் கடற்கரை வழியாக கொய்யாத்தோட்டம்புதுவீதி, பழைய பூங்காவீதி, ஈச்சமோட்டை வீதி மீண்டும் சென் அன்ரனீஸ் வீதி வழியாக ஆலயத்தைச் சென்றடையும். இரவு 8மணியளவில் திருச்சொரூப ஆசீர் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை 13ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறும் தீருவிழாத் திருப்பலியை பாகிஸ்தான் குவெற்றா மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றுபவரும், பாஷையூர் மண்ணின் மைந்தனுமாகிய பேரருட்கலாநிதி விக்டர் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமைதாங்கி ஒப்புக்கொடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (135)

## சேவை நலன் பாராட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்11
34 வருடகாலமாக ஆசிரியர் சேசையில் இருந்து ஓய்வுபெற்றுச்செல்லும் யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியர் மனோகரி நற்குணலிங்கத்திற்கு சேவை நலன் பாராட்டு நிகழ்வு கல்லூரியில் நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 11
அராலிமத்திஅராலிஸ்ரீவிசாலாக்ஷி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர் ஆலய மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளது.

தொ்டந்து 19 ஆம் திகதி செவ்வாக்கிழமை காலை10 மணிக்கு தேர் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்த திருவிழாவும் இடம் பெறவுள்ளது.

ஒவ்வொரு நாளும் அன்னதானம் வழங்கப்படும் என ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர்.

# பாடசாலைகள், முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கு ரூ.30 இலட்சம்

## வட மாகாண உறுப்பினர் விந்தன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ்ப்பாணமாவட்டத்தைச்சேர்ந்த பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளுக்கான அபிவிருத்தி மற்றும்தளபாடக்கொள்வனவுகளுக்காகவடக்கு மாகாணசபைஉறுப்பினர்விந்தன் கனகரட்ணம் 30 இலட்சம் ரூபா நிலையை ஒதுக்கீடுசெய்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 2018 ஆம்ஆண்டுக்கானபிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் மூலமே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டள்ளது என்று மாகாணசபைஉறுப்பினர்விந்தன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவரதுஊடகப்பிரிவு அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், பெற்றோர்கள்தங்கள்தங்கள் பாடசாலைகளுக்குமாகாணசபை உறுப்பினர்அவர்களைஅழைத்துச் சென்று தங்கள் பாடசாலைகளின் தேவைகள் குறைகள் தொடர்பாகக் கலந்துரையாடியதைத் தொடர்ந்து, இந்தத் தேவைகளின் முக்கியத்துவத்தை அறிந்த மாகாணசபை உறுப்பினர் முன்னுரிமை அடிப்படையில் நிதிகளை ஒதுக்கியுள்ளார்.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ். புனித அந்தோனியார் கல்லூரி, யாழ். வேலணை சரஸ்வதி வித்தியாலயம், யாழ். நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம், யாழ்.சுருவில்றோ.க.த.கபாடசாலை, யாழ். சரவணை சின்னமடுறோ.க.த.க. பாடசாலை, யாழ். புங்குடுதீவு சேர் துரைச்சுவாமி வித்தியாலயம், யாழ். அல்லைப்பிட்டிபராசக்திவித்தியாலயம், யாழ். வேலணைமேற்கு நடராஜ வித்தியாலயம், யாழ். பருத்தியடைப்புகதிரேசானந்தாவித்தியாலயம், யாழ். புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியமகளிர்வித்தியாலயம், யாழ். கொழும்புத்துறை சென். ஜோசப்ஸ் வித்தியாலயம், யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் பாடசாலை, யாழ். நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க.த.க. வித்தியாலயம், யாழ். அனலைதீவு தெற்கு அ.த.க. வித்தியாலயம், யாழ். அனலைதீவுவடலூர்த.க.வித்தியாலயம், யாழ். அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம், யாழ். சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம், யாழ். புங்குடுதீவு றோ.க.த.க. பாடசாலை, யாழ். வேலணை செட்டிபுலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, முல். வுனிக்குளம்பாலிநகர் குமாரசாமி வித்தியாலயம் , யாழ். புனிதமரியன்னை பாலர் பாடசாலை, யாழ். புங்குடுதீவு மேற்கு காந்தி முன்பள்ளி , யாழ். அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் முன்பள்ளி, யாழ்.ஒக்சிலீயம்.முன்பள்ளி, ஊர்காவற்றுறை உப்புக்குளம் அண்ணா சனசமூகநிலையமுன்பள்ளி, யாழ். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையமுன்பள்ளி, யாழ்.புங்குடுதீவு நண்பர்கள் முன்பள்ளி, நயினாதீவு அண்ணா சனசமூக நிலையமுன்பள்ளி , எழுவைதீவு புனித தோமையார் முன்பள்ளி ,அனலைதீவு நாவலர்முன்பள்ளி, வேலணைவங்களாவடிமத்தியசிறுவர்முன்பள்ளியாழ். சின்னமடு மாதா முன்பள்ளி, கரம்பன் புனித திரேசா (ஞான ஒளி) முன்பள்ளி என அந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது -என்றுள்ளது. (21)

## 'வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை' நூல்வெளியீடு



வடமராட்சி, ஜூன்11
வடமராட்சிசமூகமாற்றத்துக்கானநண்பர்கள் அமைப்பின்-ஏற்பாட்டில் சி.கா.செந்திவேல் எழுதிய 'வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை' என்னும்அரசியல்பகுப்பாய்வுவிமர்சன நூல் அறிமுக நிகழ்வு அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலைய பொது நோக்குமண்டபத்தில்நேற்றுமுன்தினம் மூத்தஎழுத்தாளர்சாகித்யரத்னாதெணியான் தலைமையில் இடம்பெற்றது.

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூன் 11
வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் அராலி ஆவரம்பிட்டி முத்து மாரியம்மன் வருடாந்த பஞ்சகுண்ட சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை இடம் பெறும் என ஆலய பரிபாலன சபை உறுப்பினர் க. மார்க்கண்டேயர் அறிவித்துள்ளார். (50)

# அரசியல் கைதிகளுக்கான சிறந்த ஆயுதம் ஆர்.ரி.ஐ

## ஆணைக்குழு உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு சிறந்த ஆயுதம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்று, தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் கலாநிதி செல்வி திருச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தகவலறியும் உரிமைச் சட்டமானது இலங்கைக் குடிமக்கள் அனைவருக்கும் உரித்துடையது. இந்தச் சட்டம் ஏனைய சட்டங்கள் அனைத்தையும் விட மிகவும் சக்தி வாய்ந்தது. இதனை சிறந்த ஆயுதமாக கொண்டு தமிழ் அரசியல் கைதிகள் தாங்கள் ஏன் இவ்வாறு காரணமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று வினா எழுப்பலாம்.

இந்தியாவில் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி சிறைக் கைதிகள் வினா எழுப்பியதன் மூலம் அவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு, காரணமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதனை சிறந்த ஆயுதமாக கொண்டு தமிழ் அரசியல் கைதிகள் தாங்கள் ஏன் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று வினா எழுப்பித் தீர்வைப் பெறலாம் - என்றார். (5)

### நாடாளுமன்றத்தை...

பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்துடன் கலைத்து தேர்தலுக்கு செல்லவேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல்வாதிகளும் ஊழல்வாதிகளை காப்பாற்றுபவர்களும் எனக்கு எதிராகவும், எனது பிள்ளைகளுக்கு எதிராகவும் அரசியல் சேறுபூசல்களைச் செய்கின்றனர். சமூக இணையத்தளங்கள், இலத்திரனியல் ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் போன்றவற்றினால் எனக்கு எதிராக தெரிந்தோ தெரியாமலோ சேறுபூசப்படுகின்றது.

அரசு என்ற ரீதியில் நூறுநாள் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கவேண்டிய அவசியமில்லை. நாடாளுமன்றத்தில் 47 உறுப்பினர்களை வைத்துக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசமைப்புத் திருத்தம், புகையிலைச் சட்டம், சுகாதார கொள்கை போன்ற விடயங்களைச் செய்யவேண்டியிருந்தது. அன்று அவை அனைத்தையும் நாங்கள் சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றே செய்தோம். இன்று அவற்றை மறந்துவிட்டனர். நினைவு இருந்தாலும் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்ற தோற்றத்தை காட்ட முயற்சிக்கின்றனர்.

நான் சுதந்திரக் கட்சியைப் பொறுப்பேற்றதால் பிரச்சினைகள் ஏற்பட்டன எனக் கூற சிலர் முற்படுகின்றனர். நான் சுதந்திரக் கட்சியை பொறுப்பேற்றதன் காரணமாகவே நூறுநாள் திட்டத்தின் பல செயற்பாடுகளை முன்னெடுக்க முடிந்தது. நூறு நாள் திட்டம் எனக்குத் தெரிந்திருக்கவில்லை என்று கூறவில்லை. இதனை யார் செய்தது என்று எனக்குத் தெரியாது என்றே கூறினேன். சில ஊடகங்களும் எனது எதிரிகளும் இதனைத் திரிபுபடுத்தி வெளியிட்டனர். இது எனக்குத் தெரியாது என்று கூறியதாக செய்தி வெளியிட்டனர். நூறுநாள் திட்டத்தை உருவாக்கியது யார் என்று எனக்குத் தெரியாது என்றே நான் கூறினேன். நாங்கள் அதனைச் செயற்படுத்தினோம். ஆனால் உண்மையிலேயே அதனை செயற்படுத்தியிருக்கவேண்டிய அவசியம் இல்லை.

நான் அரச தலைவராகியவுடன் நாடாளுமன்றத்தை கலைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் இன்றைய எந்தப் பிரச்சினையும் இருந்திருக்காது. புதிய கட்சிகளும் வந்திருக்காது - என்றார்.

'பிணைமுறி ஆணைக்குழு நியமனத்துடனேயே உங்களுக்கு எதிரான நெருக்கடிகள் உருவாகின. அப்படி செய்திருக்காவிடின் நீங்கள் இனிமையான வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம். இது தொடர்பில் உங்கள் கருத்து?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, யார் தனிப்பட்ட ரீதியில் எனக்குத் துரோகம் செய்தாலும் அவமானப்படுத்தினாலும் நான் செய்தது சரி. அது நாட்டுக்காகச் செய்த விடயம். நீங்கள் கூறுவது போன்று இந்த ஆணைக்குழுவை நியமிக்காதிருந்தால் எனக்கு எந்த நெருக்கடியும் ஏற்பட்டிருக்காது. எனக்கும் எனது குடும்பத்துக்கும் பிள்ளைகளுக்கும் எந்த அவமானமும் செய்திருக்க மாட்டார்கள். எப்படியிருப்பினும் நாட்டுக்காக நான் செய்யவேண்டியதை நான் செய்தேன். நான் எனக்கு வருகின்ற எந்தப் பிரச்சினையையும் நாடு என்ற இடத்திலிருந்தே பார்ப்பேன். இந்த ஆணைக்குழுவை நியமித்ததன் ஊடாகவே என்னைப்பபற்றி தவறான விடயங்களை முன்வைத்து சிலர் விமர்சிக்கின்ற னர் - என்று பதிலளித்தார். (5,61)

### மாணவி...

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. பள்ளித் தோழிகள் சேலையுடன் வருவதால் தனக்குச் சேலை வாங்கித் தருமாறு தாயாரிடம் கேட்டுள்ளார். இவருக்கு புது உடை வாங்கிக் கொடுத்தால் ஏனைய இரு பிள்ளைகளுக்கும் புது உடைகள் வாங்க வேண்டுமென்பதால் உடைகள் வாங்கிக் கொடுக்கவில்லை. மாணவி திருவிழாவுக்குச் செல்லவில்லை. நேற்று ஆலயத்தில் நடைபெற்ற தீர்த்தத் திருவிழாவுக்கு வீட்டிலிருந்தோர் சென்றிருந்த வேளையில் மாணவி தவறான முடிவெடுத்துள்ளார் என்று விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்திலிருந்து வீடு திரும்பிய குடும்பத்தினர்மாணவிதவறான முடிவெடுத்துள்ளமை கண்டு அதிர்ச்சியடைந்து கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். பொலிஸார் அங்கு வந்து சடலத்தை மீட்டு சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த மாணவியின் குடும்பத் தலைவரான தந்தை, தனியாக வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (5,9)

### கொக்குவிலில்...

இளைஞர் ஒருவர் மீது வாள்வெட்டு நடத்தியுள்ளர். வாள்வெட்டை நடத்திய குழு தப்பிச் சென்றபோது பொதுமக்கள் விரட்டிச் சென்றுள்ளனர். வாள்வெட்டை நடத்தியவர்களில் ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றினர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் 45 நிமிடங்களுக்குப் பின்னரே வந்தனர் என்று பொதுமக்கள் கூறுகின்றார். அதுவரை வாள்வெட்டில் காயப்பட்டவரும், மடக்கிப் பிடிக்கப்பட்டவரும் வீதியில் சம்பவ இடத்திலேயே இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட நேரத்துக்குப் பின்னர் வந்த பொலிஸார் வாள்வெட்டுக்கு இலக்கானவரை வீதியில் வைத்து விசாரணை செய்தனர் என்றும், சம்பவ இடத்தில் நின்றவர்களைப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காணொலியாகப் பதிவு செய்தார் என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

சிறிது நேரத்தின் பின்னர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டவரை முச்சக்கர வண்டி ஒன்றில் ஏற்றிச் சென்றனர் என்றும் பொலிஸாரின் போக்கு ஏற்புடையதாக இல்லை என்றும் சம்பவ இடத்தில் இருந்த மக்கள் குறிப்பிட்டனர். (ற-105)

### மன உளைச்சலால்...

றுள்ளது. இதே இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மூதாட்டி, யாழ்ப்பாணத்தில் பிள்ளைகளுடன் அண்மைக்காலமாக தங்கியிருந்துள்ளார். மூதாட்டியின் உறவினர்களால்பரம்பரை பரம்பரையாக மேற்கொண்டு வரும் திருவிழாவுக்கு ஊருக்கு வந்த அவர் தேர்த் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தார். ஆலயத்தின் தேர்த் திருவிழாவில் இயந்திரம் மூலம் தேர் இழுக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்த மூதாட்டி மூன்று தினங்களாக மன உளைச்சலுக்கு உள்ளான நிலையில் காணப்பட்டார் எனவும் நேற்றுமுன்தினம் மாலை உறவினருடன் உரையாடிக் கொண்டிருந்த வேளையில் மயங்கி வீழ்ந்துள்ளார். அங்கிருந்து வாகனம் மூலம் வரணி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பின்னர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரும் வழியில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நிலையில் மருத்துவமனைக்கு சடலம் கொண்டு வரப்பட்டதால் சாவு விசாரணைக்காக மருத்துவமனை சவச்சாலையில் சடலம் வைக்கப்பட்டிருந்தது. கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நீதிவான் முன்னிலையில் நேற்று அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் சாவு விசாரணைகளை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (5,9)

### ரணில்...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான தாக்குதல்களைத் தொடுத்திருந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பஜெட் வீதியில் உள்ள தனது வதிவிடத்தில் தலைமை அமைச்சருடன் அவர் இரண்டரை மணிநேரம் பேச்சுக்களை நடத்தினார்.

கூட்டு அரசின் பங்காளிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான உறவுகளில் எரிச்சலூட்டும் வகையிலான தொடர் பிரச்சினைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது குறைந்தபட்சம், பிரதானமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

கூட்டு அரசு முழுப் பதவிக்காலமும் தொடர வேண்டும் என்று வலியுறுத்தும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மகிந்த சமரசிங்க, சரத் அமுனுகம, மகிந்த அமரவீர, துமிந்த திசநாயக்க ஆகிய நான்கு அமைச்சர்களே இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அடுத்து ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் இந்த அமைச்சர்கள் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

இவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர்களான மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம, கபீர் காசிம் ஆகியோரைச் சந்தித்துப் பேசியதை அடுத்து, செவ்வாய்க்கிழமை இரவு தலைமை அமைச்சரையும், அரச தலைவரையும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையிலான பேச்சுக்களின் போது, அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக முன்னெடுப்பது குறித்தும், 2015 ஜனவரி தேர்தலின் போது மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

ஊடகவியலாளர்கள் லசந்த விக்கிரமதுங்க படுகொலை, கீத் நொயார் கடத்தல், பிரதீப் எக்னெலிகொட கடத்தல் உள்ளிட்ட வழக்குகள் தொடர்பாகவும் பேசப்பட்டது.

இந்த வழக்குகளின் விசாரணைகளை இந்த ஆண்டுக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்றும், அதனை பொலிஸ்துறை உறுதி செய்யவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து தனது உதவியாளர்கள் மூலம், பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவை, உடனடியாக அந்தக் கூட்டத்துக்கு வருமாறு அரச தலைவர் அழைத்து இதற்கான உத்தரவுகளை வழங்கினார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (5)

### குறுக்கு வழியில்...

முல்லைத்தீவு, ஜூன் 11

தாயக வலி கண்டவர்களுக்கே வடக்கு முதலமைச்சாராகத் தகுதி உண்டு. குறுக்கு வழியில் முதலமைச்சர் பதவியை குத்தகைக்கு எடுக்க முயலக்கூடாது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சுதந்திரபுரம் படுகொலையின் 20ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரபுரம் படுகொலை நடக்கும்போது, நான் முல்லை மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அதிகாலை மண்கிண்டி மலையில் இருந்து தூரவீச்சு எறிகணைகள் மற்றும் போர் வானூர்திகள் ஊடாக் நடத்தப்பட்ட தாக்குதலில் 30க்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்திருந்தனர்.

பலர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இப்படியாக வலிகளை அனுபவித்த நாங்கள் மீண்டும் ஒரு விடுதலையை நோக்கி மக்களை சரியான பாதையில் இட்டுச் செல்ல என்று வட மாகாண சபையை உருவாக்கினோம். ஆனால் அதிலும் நாங்கள் தவறு செய்து விட்டோமோ என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கின்றது.

இந்த வலிகளை சுமந்த ஒருவன் தான் வட மாகாண சபையை நடத்துபவனாக இருக்க வேண்டும். அதைவிட்டு குத்த கைக்கு வட மாகாணசபை எடுத்தவர்களினால் இன்று பல இடர்களை நாம் எதிர்கொள்கின்றவர்களாக இருக்கின்றோம். வட மாகாணசபை முதலமைச்சர் பதவியைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்கள் மீண்டும் ஒரு தடவை, 5 ஆண்டுகள் குத்தகைக்கு எடுப்பதற்காக கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றார்கள். அது எமக்கு ஓர் பிரச்சினையாக இருக்கப் போவதில்லை.

எமது மக்களை உடைத்து அவர்களை தூள் தூளாக்கி ஒரு பொறுப்பை எடுப்பதற்கு இந்த மண் எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளாது. யார் ஏற்றுக்கொண்டாலும் அதனை நான் ஒரு பொழுதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஏனென்றால், நாம் இந்த மண்ணில் மக்களுக்காக இருந்து மக்களுக்காக வாழ்ந்தவர்கள். இந்த மக்களுக்கு இருக்கும் வலியும் எனக்கு இருக்கும் வலியும் ஒன்றானவை. நாங்கள் இடர் துன்பங்களைக் கண்டு மக்களை விட்டு ஓடிவிடவில்லை. எந்தத் துன்பத்திலும் மக்களுடன் பணியாற்றியவர்கள். எமது மக்களின் உணர்வும் எமது உணர்வும் ஒன்றுடன் ஒன்றாக்கப்பட்டது. இந்த நிகழ்வைநாம்இன்றுநினைவுபடுத்துபவதற்கு காரணம் நாம் எம்முடைய வலிகளை என்றும் மறந்து விடக்கூடாது. எமது உறவுகளையும் தமறந்துவிடக் கூடாது - என்றார்.

1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி அன்று புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் பகுதியில் வானூர்தித் தாக்குதலில் மற்றும் எறிகணைத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 33 அப்பாவி பொதுமக்களின் 20ஆம் நினைவுநாள்நேற்றுக்காலை9.30மணிக்கு வன்னிக் குறோஸ்,தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் வன்னிக் குறோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் உறுப்பினரும் நிரோஜன் விளையாட்டுக் கழகத்தின் தலைவருமான சயந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை, இந்தப் படுகொலையில் 4 பிள்ளைகளை இழந்த பெற்றோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து ஈகச் சுடரை உயிர்நீத்தவர்களின் உறவினர்கள்ஏற்றிவைத்தனர். திருவுருவப்படத்துக்கான மலர் மாலையை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன், வடமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் அணிவித்தனர். மலர்வணக்கத்தை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பிரதி தவிசாளர் ஜெனமேயந் ஆரம்பித்து வைத்தார். (5,110,ரி3)

# கோத்தாவுக்கான மக்களின் கோரிக்கைகளை அறிவேன்

## மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 11

அடுத்த அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்சவை நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் விடுக்கும் கோரிக்கைகளை கருத்தில் எடுத்துள்ளதாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் மத்தியில் கோத்தபாய ராஜபக்ச குறித்து காணப்படும் கருத்தைகணக்கில் எடுத்துள்ளேன். எனக்கும் எனது சகோதரருக்கும் இடையில் எந்தவித கருத்து முரண்பாடுகளும் இல்லை. எங்கள் இருவர் மத்தியில் அதிகாரப் போட்டியெதுவும் இல்லை. முன்னர் குடும்ப ஆட்சி குறித்த குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்களே தற்போது இந்தக் கருத்தைப் பரப்புகின்றனர்.

பொது எதிரணியில் வெறுமனே ராஜபக்சாக்கள் மாத்திரம் இல்லை. கூட்டு அரசில் இல்லாத சிறந்த அரசியல்வாதிகள் எம்முடன் உள்ளனர் என்றார். (5)

# கோத்தாவுடன் விரைவில் சு.க. 16பேர் குழு பேச்சு

கொழும்பு, ஜீன் 11

கூட்டு அரசிலிருந்து வெளியேறிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட குழு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுடன் சந்திப்பொன்றை மேற்கொள்ளத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பு நாளை மறுதினம் புதன்கிழமை மாலை இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி குறிப்பிட்டுள்ளார். இந்தக் குழு இதற்கு முன்னர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடனும் பேச்சுக்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

# மக்களின் நன்மைக்காக கூட்டு அரசு எந்தத் திருத்தமும் செய்யவில்லை

## சாடுகிறார் ஞானசார தேரர்

கொழும்பு, ஜீன் 11

அரசு தமது தேவைகளுக்கு மாத்திரமே அரசமைப்பில் திருத்தங்களை உருவாக்கிக் கொள்கின்றதே தவிர மக்களின் நலன் குறித்து இது வரை காலமும் எவ்வித அரசியல்திருத்தங்களையும் மேற்கொண்டு நடைமுறைப்படுத்தவில்லை என்று பொதுபலசேனா அமைப்பின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரசு தமது தேவைகளையும் அரசியல் இருப்பினையும் தக்க வைத்துக் கொள்வதற்காகவே அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றது. அரசமைப்புத் தொடர்ந்து மாற்றமடையும் போது அரசமைப்பின் தன்மை எந் நிலையில் உள்ளது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் பொது எதிரணியினர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைக் களத்தில் இறக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இரண்டு முறை அரச தலைவராகப் பதவி வகித்தவர் மீண்டும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற தடை முன்னாள் அரச தலைவருக்கு 19 ஆவது திருத்தத்தில் காணப்படுகின்றது. ஆனால் 18 ஆவது திருத்தம் இவருக்குச் சாதகமாகவே உள்ளது.

அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தலை நடத்தி பொது எதிரணி ஆட்சியைக் கைப்பற்றி 18 ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தவே முயற்சிக்கின்றது. மறுபுறம் கூட்டு அரசும் தற்போது தேர்தல் தொடர்பில் பெரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அரசியல்வாதிகள் தமது தேவைகளுக்காக அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளாமல் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கிணங்க திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றார். (5)

11 மணித்தியால

# சுற்றி வளைப்பில் 3,666 பேர் கைது

கொழும்பு, ஜீன் 11

நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் இரவு 9 மணி முதல் நேற்றுக் காலை 8.00 மணி வரையில் முன்னெடுக்கப்பட்ட சிறப்புச் சோதனை நடவடிக்கையின் போது 3 ஆயிரத்து 666 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் முன்னெடுக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையின் போது 17 ஆயிரத்து 687 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் 998 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் எனவும், ஆயிரத்து 90 பேர் பல்வேறுபட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது . இந்தச் சுற்றிவளைப்பின்போது 9 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. மதுபோதையில் வாகனம் செலுத்திய 648 பேரும் இதில் அடங்குகின்றனர். பாதாள உலகக் குழுக்களின் செயற்பாட்டைத் தடுத்தல் மற்றும் குற்றச் செயல்களை மட்டுப்படுத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் கூறியுள்ளது. (5)

# ரணில் – மைத்திரி இடையே எதுவித முரண்பாடும் இல்லை

## அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 11

கூட்டு அரசில் பிரதான இரண்டு கட்சிகள் இடையில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. ஆனால் அவற்றை பேச்சுக்கள் மூலமாக வெற்றிகொண்டு கூட்டு அரசைப் பலப்படுத்தவே முயற்சித்து வருகின்றோம். அரச தலைவர் மைத்திரிக்கும், தலைமை அமைச்சர் ரணிலுக்கும் இடையில் முரண்பாடுகள் இல்லை. சிறிலங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளர் அமைச்சர் துமிந்த திசாநாயக இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் பிரதான பிரச்சினைகளை வெற்றிகொள்வதில் இன்று எமக்குப் பெரிய சவால்கள் உள்ளன. பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்தே இந்தச் சவால்களை வெற்றி கொள்ள வேண்டியுள்ளது. கூட்டு அரசில் குழப்பங்கள் உள்ளதாக கூறும் கதைகள் அனைத்துமே பொய்யானவையாகும். தலைமை அமைச்சரும், அரச தலைவரும் முரண்படுவதாக கூறி மக்களைச் சிலர் குழப்பி வருகின்றனர். எமது அணியிலும் சிலர் அவ்வாறான தவறான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கம் இடையில் முரண்பாடுகளும் இல்லை. கருத்து கூறுவதன் மூலமாக சில தவறுகளைச் சுட்டிக்காட்டுவதை, அரச தலைவர் மைத்திரி, தலைமை அமைச்சர் ரணிலுடன் முரண்படுகின்றார் என்று அர்த்தம் கொள்ளத்தேவையில்லை. தொடர்ந்தும் கூட்டு அரசாகப் பயணிக்க இருவருமே தயாராக உள்ளனர். சிறிலங்கா சுதந்திர கட்சியினருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கொள்கை ரீதியிலான பிரச்சினைகள் இருக்கலாம். அவற்றை பேச்சு மூலமாக வெற்றிகொள்ள முடியும். அதேபோல் எமது கட்சியில் உள்ள முரண்பாடுகளையும் வெற்றி கொள்ள முடியும். உடனடியாகக் கூட்டு அரசைக் கலைக்க முடியாது. அரச தலைவர் ஒரு கட்சியில் இருக்கையில் நாம் கட்சியை விட்டு வெளியேறி இறுதியில் அரச தலைவரை நெருக்கடியில் தள்ள முடியாது. புரிந்துணர்வு அடிப்படையில் பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்து பயணிக்க வேண்டியுள்ளது. ஆகவே கூட்டு அரசின் கால எல்லை வரையில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் 23 உறுப்பினர்களும் கூட்டு அரசை விட்டு வெளியேறப் போவதில்லை.

சிறிலங்கா சுதந்திர கட்சியில் சுயாதீனமாக செயற்படும் நபர்கள் விரும்பினால் மீண்டும் அரசுடன் இணைந்து கட்சியை பலப்படுத்த முடியும். கட்சியை விட்டு வெளியேறி விமர்சித்தால் இறுதியில் சிறிலங்கா சுதந்திர கட்சியே பலவீனம் அடையும். மக்கள் மத்தியில் கட்சியைக் கொண்டுசெல்ல வேண்டும். அதற்கு எமக்கு உள்ள அமைச்சுக்கள் மூலமாக மக்களுக்கான சரியான சேவைகளைச் செய்தாக வேண்டும். இன்று நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது, விவசாயம் அழிந்து வருகின்றது. நாம் அனைவரும் இணைந்து பொதுவான காரணிகளை வெற்றிகொள்ள வேண்டும். அதற்கு அனைவரும் அரச தலைவருடன் கைகோர்க்க வேண்டும் - என்றார். .(5.31)

# ரஜினியிடம் ராமநாயக்க கோரிக்கை



கொழும்பு, ஜீன் 11

பா.ரஞ்சித் இயக்கத்தில் மீண்டும் நடிக்க வேண்டாம் என்று, தென்னிந்திய நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்திடம் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க சிறப்புக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ரஜினி, அவரது மகள் ஐஸ்வர்யா, மருமகன் தனுஷிடமும், பா.ரஞ்சித் இயக்கத்தில் மீண்டும் நடிப்பதற்கு இடமளிக்க வேண்டாம் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தான் ரஜினியின் தீவிர ரசிகர் எனவும், ரஜினி போன்ற சூப்பர் ஸ்டாரின் சுயரூபத்தை வீணடிக்கும் வகையில் இயக்குனர் பா.ரஞ்சித் திரைப்படம் இயக்கியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இயக்குநரே எதிரியாக ரஜினியின் கதாபாத்திரத்தை வீணடிப்பதாக அமைச்சர் கூறியுள்ளார்.

ரஜினிகாந்தை தான் அதிகம் நேசிப்பதாகவும், தான் அவரை எடுத்துக்காட்டாக எடுத்து கொண்டிருப்பதாகவும், இதனால் ரஞ்சித்தின் படத்தினால் ரஜினிக்கு உரிய இடம் கிடைக்காதென்பது குறித்து தான் உள்பட ரஜினி ரசிகர்கள் வருத்தம் வெளியிடுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்காவும் நடிகர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# அமெரிக்காவுக்காகச் சீனாவை இலங்கை பகைக்கக் கூடாது

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 11

அமெரிக்காவின் நட்புறவை வளர்த்துக் கொள்வதற்காக சீனாவைப் பகைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை கூட்டு அரசு மேற்கொண்டு வருகின்றது. அம்பாந்தோட்டை துறைமுக விவகாரத்தில் சூத்திரதாரியாக அமெரிக்காவே செயற்படுகின்றது. இவ்வாறு பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் இலங்கை அரசு ஏமாற்றி விட்டது என்று சீன நிறுவனம் குற்றம் சுமத்தியுள்ளது. மறுபுறம் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் உள்ளக விடயங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கியுள்ளது என்று கூட்டு அரசு குறிப்பிடுகின்றது. துறைமுகத்துக்கு வெளிப்புறத்தில் செயற்கைத் துறைமுகத்தை உருவாக்கி அதற்கு உரிமை கொண்டாடுவது தொடர்பில் தற்போது பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளது.

துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு 90 ஆண்டுகளுக்கு வழங்கும் போது அனைத்து விடயங்களும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால் கூட்டு அரசு செயற்கைத் தீவு தொடர்பில் எவ்வித விடயங்களும் குறிப்பிடப்படவில்லை என்று குறிப்பிடுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம் அமெரிக்காவின் ஆதிக்கமும் இவ்விடயத்தில் மறைமுகமாகக் காணப்படுகின்றது.

உலக பொருளாதார நாடுகளில் இன்னும் 10 ஆண்டுகளில் சீனாவே முன்னணியில் இருக்கும் என்று பன்னாட்டு ஆய்வுகள் கருத்து கணிப்புக்களை வெளியிடப்பட்டுள்ளன. சீனாவின் முன்னேற்றங்களைத் தடுக்கவே அமெரிக்கா இலங்கையை ஆயுதமாக பயன்படுத்திக் கொள்கின்றது. சீனாவுக்கும் இலங்கைக்கும் வரலாற்று ரீதியிலான நல்லுறவுகள் காணப்பட்டு வருகின்றன. ஆனால் அமெரிக்காவுடன் இலங்கை இதுவரை காலமும் வர்த்தக ரீதியிலான தொடர்புகளை மேற்கொண்டதில்லை. கூட்டு அரசு அமெரிக்காவின் உறவை வலுப்படுத்தி கொள்ள சீனாவின் உறவை முறித்துக் கொள்ளக் கூடாது. சிலவேளை அவ்வாறு இடம்பெற்றால் இது பெரிய பொருளாதார மற்றும் அபிவிருத்தி ரீதியிலான பிரச்சினைகளை இலங்கைக்கு ஏற்படுத்தும் - என்றார். (5)

# 12ஆயிரம் ஏக்கர் பயிர்களை நாசம் செய்த சூறைக்காற்று

கொழும்பு, ஜூன் 11

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றும், நேற்றுமுன்தினமும் 70 கிலோ மீற்றருக்கும் அதிக வேகத்துடன் வீசிய சூறைக் காற்றினால் பெரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மிக மோசமான சூறைக்காற்று வீசியது. 70 கிலோ மீற்றருக்கும் அதிகமான வேகத்துடன் வீசிய சூறைக்காற்றால், மரங்கள் வேருடன் சாய்ந்தன. மின்கம்பங்களும் முறிந்து வீழ்ந்தன. சுமார் 12 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் இதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



குருநாகல், புத்தளம், மொனராகல, நுவரெலியா, பதுளை, மாத்தளை, நனம்பகா மாவட்டங்கள் சூறைக்காற்றால் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கு பகுதிகளிலும் சூறைக்காற்றினால் சேதங்கள் ஏற்பட்டன. குறிப்பாக, காய்கறிப் பயிர்கள் அதிகளவில் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இந்த மோசமான சூறைக்காற்று இன்று வரை தொடரும் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார். மரங்கள், கிளைகள் முறிந்து விழும் அபாயம் இருப்பதால் மக்கள் அவதானமாக இருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

வெள்ளிக்கிழமை இரவு தொடக்கம் வீசிய சூறைக் காற்றால், மரங்கள் முறிந்து வீழ்ந்து, 5 வீடுகள் முற்றாகவும், 82 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. மின் விநியோகம் தடைப்பட்டது. வீதிகளுக்குக்குறுக்கே விழுந்த மரங்களால் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார். (5)



## லங்கா இ நியூஸ் ஆசிரியரை நாட்டுக்குத் திருப்பி அனுப்பவும்

### பிரிட்டனிடம் கோரிய மைத்திரி

கொழும்பு, ஜூன் 11

லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும், லங்கா இ நியூஸ் இணையத்தளத்தின் ஆசிரியர் பிரதீப் சந்துருவன் சேனாதீரவை, கைது செய்யுமாறு அல்லது இலங்கைக்குத் திருப்பி அனுப்புமாறு பிரிட்டனிடம் கோரியுள்ளார் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன.

கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டௌரிசை பஜெட் வீதியில் உள்ள தமது இல்லத்துக்கு நேற்றுமுன்தினம் அழைத்த அரச தலைவர் மைத்திரி அவருடன் நடத்திய சுமார் 30 நிமிடச் சந்திப்பின் போதே இவ்வாறு கோரியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அரச தலைவரின் இணைப்புச் செயலர் சிறிலால் லக்திலக, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன ஆகியோரும் பங்கேற்றனர்.

அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வந்த லங்கா இ நியூஸ் இணையத்தளம், கடந்த நவம்பர் மாதம், தொடக்கம் இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவால் தடை செய்யப்பட்டது.

அரச தலைவர் மற்றும் அவரது குடும்பத்தினர் தொடர்பான விமர்சனங்களை வெளியிட்ட லங்கா இ நியூஸ், இலங்கைக்கு வெளியே இருந்து இயக்கப்படுவதால், அதன் மீது எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் அரசு இருப்பது குறிப்பிடத்தக்கது. (5)

## கணக்காய்வு சட்டவரைவு விரைவில் நிறைவேறும்

### ஆளுங்கட்சி நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 11

கணக்காய்வு சட்டவரைவு தொடர்பான விவாதத்தை விரைவில் நடத்துவதற்கு அரசு எதிர்பார்ப்பதாகப் பிரதியமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார்.

இந்தச் சட்டவரைவில் காணப்படும் சில சட்டச்சிக்கல்களைத் திருத்திக்கொண்டு அது உரியவகையில் நிறைவேற்றப்படும் என்றும் பிரதியமைச்சர் கூறினார்.

அதேவேளை, கணக்காய்வு சட்டவரைவை நிறைவேற்றுவது கட்டாயமானதொன்று என்று அமைச்சர் துமிந்த திசாநாயக்கவும் தெரிவித்தார்.

குறித்த சட்டவரைவில் காணப்படும் சிக்கல்கள் குறித்துப் பிரதான கட்சிகள் கலந்துரையாடவேண்டும் எனவும், எனினும், இந்தக் கலந்துரையாடலை நடத்துவதில் இரண்டு தேசிய கட்சிகளுக்குமிடையில் சிக்கல் காணப்படுவதாகவும் அமைச்சர் துமிந்த திசாநாயக்க மேலும் தெரிவித்தார். (5)



## மகிந்தவின் ஆட்சியால் ரூ.7,391 பில்லியன் கடன்சுமை!

### 1948 இருந்து 2005 வரை பெற்ற கடனிலும்பார்க்க 10 ஆண்டுகளில் மும்மடங்காக அதிகரிப்பு

மகிந்தவின் ஆட்சியின் போது வாங்கப்பட்டிருந்த கடன்களைத்திருப்பிச்செலுத்த வேண்டியிருப்பது கர்ம வினையாகும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

கலேவெல பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய தலைமை அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,:

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து2005ஆம்ஆண்டளவில் 57 ஆண்டுகளாகியிருந்தன. இந்தக் காலப்பகுதிக்குள் 2 ஆயிரத்து 222 பில்லியன் ரூபாவே கடன் பெறப்பட்டிருந்தது. 2005 ஆம்ஆண்டிலிருந்து2015ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் மேற்படித் தொகையைவிட மும்மடங்கு கடன் வாங்கப்பட்டுள்ளது. 7 ஆயிரத்து 391 பில்லியன் ரூபா கடனாகப் பெறப்பட்டுள்ளது. போர் முடிவடைந்த பின்னரும் மகிந்த ஆட்சியால் கடன்வாங்கும் அளவு குறையவேயில்லை.

மகாவலி அபிவிருத்தி, போர் உள்ளிட்ட காரணங்களுக்காக கடந்த 58 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 222 பில்லியன் ரூபா கடனாகப் பெறப்பட்டுள்ளது. மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் மாத்திரம் 7 ஆயிரத்து 391 பில்லியன் ரூபா கடன்பெறப்பட்டுள்ளது. அவரது ஆட்சிக் காலத்தில்கடன்சுமை4ஆயிரத்து 164 பில்லியன் ரூபாவால் அதிகரித்தது. குறுகிய காலத்துக்குள்இந்தக்கடனை மீள செலுத்தமுடியுமா?

உலகில் இன்று பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலமையைச் சமாளித்து முன்னோக்கிப் பயணிக்கவேண்டியேற்பட்டது. வரியும் அதிகரிக்கப்பட்டது. வரி அதிகரிக்கப்பட்டதால் அரசை சிலர் விமர்சிக்கின்றனர். ஏன் வரி அதிகரிக்கப்படுகின்றது? வாங்கிய கடன்களைத் திருப்பிச்செலுத்த கடமைப்பட்டுள்ளோம். மகிந்தவின் ஆட்சியின்போது வாங்கப்பட்ட கடன்களுக்காகவே தற்போதும் நாம் பாவம் சுமக்கின்றோம். எது எப்படியோ 2023ஆம் ஆண்டளவில் கடன்சுமைகளைச் செலுத்தியாகவேண்டும். - என்றார். (5)

## தயானுக்கு மகிந்த பச்சைக்கொடி

கொழும்பு, ஜூன் 11

ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவராகக் கலாநிதி தயான் ஜெயதிலக நியமிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலை



யில், அதற்கு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பச்சைக்கொடி காண்பித்திருப்பதாகக் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஊடகம் செய்தி வெளியிட்டது.

ஐ.நா. மற்றும் பரிசுக்கான தூதுவராக முன்னர் பணியாற்றிய கலாநிதி தயான் ஜெயதிலகவை ரஷ்யா வுக்கான தூதுவராக நியமிக்க அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன திட்டமிட்டார்.


கலாநிதி தயான் ஜெயதிலக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு நெருக்கமானவராகவும், அவரது ஆலோசகராகவும் இருப்பதுடன் தற்போதைய அரசைக் கடுமையாக விமர்சித்து வருபவர்.

அவரை ரஷ்யாவுக்கான தூதுவராக நியமிக்க அரச தலைவர் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது அரசியல் அவதானிகள் மட்டத்தில் பலத்த ஆச்சரியத்தை,ஏற்படுத்தியது.

அதேவேளை, ரஷ்யாவுக்கான தூதுவராகக் கலாநிதி தயான் ஜெயதிலக பொறுப்பேற்பதற்கு, மகிந்த ராஜபக்சவின் ஆசி கிடைத்திருப்பதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் குறிப்பிட்டது. (5)

### கேலிச்சித்திரம்



நன்றி:ஐலண்ட்



## வான்படை தளபதிக்கு பதவி நீடிப்பு

கொழும்பு, ஜூன் 11

வான்படைத் தளபதி எயர் மார்சல் கபில ஜயம்பதிக்கு சேவை நீடிப்பு வழங்கி அரச தலைவர் , மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டார்.

வான்படைத் தளபதி கடந்த மே 25 ஆம் திகதியுடன் ஓய்வுபெறவிருந்தார். இந்த நிலையிலேயே அவருக்கு ஒரு ஆண்டு சேவை நீடிப்பை வழங்கி உத்தரவிட்டார்.

முப்படைகளின் தளபதி என்ற வகையில் அவர் இந்த முடிவை எடுத்தார். இதன் மூலம், அடுத்த ஆண்டு மே 25 ஆம் திகதி வரை, இலங்கை வான்படைத் தளபதியாக, எயார் மார்சல் கபில ஜயம்பதி பணியாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டது. (5)

## ஐ.தே.கவின் செயலுக்கு

# சு.க. கூட்டத்தில் கண்டனக்கணை!

கொழும்பு, ஜூன் 11

கூட்டு அரசமைப்பதற்காகத் தமது கட்சியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டை மீறும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டு வருவதால் அதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கூட்டரசுக்குள் இனியும் பாரபட்சம் இடம்பெறுமாயின் தீர்க்கமான முடிவொன்றை அரச தலைவர் எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த வியாழக் கிழமை இரவு அவரது இல்லத்தில் நடைபெற்றது.

சுதந்திரக் கட்சியின் இடைக்கால நிர்வாகக் குழு பதவியேற்ற பின்னர் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் கூட்டரசிலிருந்து வெளியேறிய சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட அணியினரும் பங்கேற்றனர்.

இடைக்கால நிர்வாகக் குழுவின் ஊடாக ஒன்றரை மாதத்துக்குள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கட்சிக்குள் மறுசீரமைப்பு இடம்பெறவேண்டும் என்று மையக் குழு உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளதுடன், கட்சியின் மாநாட்டை பிரமாண்டமாக நடத்தவேண்டும் என்வும் கோரினர். அதன் பின்னர் பிரதி சபாநாயகர் தெரிவு சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

'பிரதி சபாநாயகர் பதவி சுதந்திரக் கட்சிக்கு வழங்கப்படவேண்டும் என்றே இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

அதை மீறும் வகையில் அந்தப் பதவியையும் ஐக்கிய தேசியக் கட்சி தன தாக்கிக் கொண்டுள்ளது.

எதிரணியில் இருந்தாலும் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே சுதந்திரக் கட்சி உறுப்பினர் என்பதால் அவருக்குப் பிரதி சபாநாயகர் பதவி வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முன்வந்திருக்கவேண்டும். வாக்கெடுப்புக்குச் சென்றது சுதந்திரக் கட்சியின் இணக்கப்பாட்டை மீறும் செயலாகும். இப்படியான நடவடிக்கைகள் தொடருமானால் கூட்டரசு தொடர்பில் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும், என்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் அரச தலைவர் மைத்திரியிடம் கோரிக்கை விடுத்தனர்.

பிரதி சபாநாயகர் தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது பொது எதிரணி உறுப்பினர்கள் சிலர் செயற்பட்ட விதம் குறித்தும் கூட்டத்தில் அதிருப்தி வெளியிடப்பட்டது.

அதேவேளை, நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணியால் முன்வைக்கப்பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு எதிர்ப்பை வெளியிடுவதற்கும், அது தொடர்பில் ஆராய்ந்து உரிய ஆதாரங்கள் சகிதம் நிராகரிப்பதற்காகவும் குழுவொன்றும் அமைக்கப்பட்டது. (5)

## மகிந்த தரப்புக்கு முடிவுகட்ட கூட்டு அரசு தீவிர முயற்சி

### அடுத்த மாதம் சிறப்பு நீதிமன்றத்தின் பணிகள் ஆரம்பம்



கொழும்பு, ஜூன் 11

பெரிய நிதி மோசடி மற்றும் ஊழல்போன்ற குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட சிறப்பு உயர் நீதிமன்றம் அடுத்த மாத ஆரம்பத்தில் தனது பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக அரசு அறிவித்தது.

மோட்டார் வாகனம் தொடர்பான நீதிமன்ற வளாகத்திலேயே இந்தச் சிறப்பு உயர் நீதிமன்றம் இயங்கவுள்ளது.

நீதிமன்றங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருந்த திருத்தச் சட்டத்துக்கு அமைவாக மூன்று சிறப்பு உயர் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன. அதன் முதலாவது சிறப்பு உயர் நீதிமன்றம் அடுத்தமாத ஆரம்பத்தில் தனது பணிகளை முன்னெடுக்கவுள்ளது.

இதேவேளை, ஏனைய இரண்டு உயர்நீதிமன்றங்களையும் புதுக்கடை உயர் நீதிமன்ற வளாகத்தில் நிறுவுவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது. இதற்காக சட்டமா அதிபர் அலுவலகத்துக்கு 100 மூத்த சட்டத்தரணிகள் புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதில் 50 பேரை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் தற்சமயம் கோரப்பட்டன.

கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற பெரிய நிதி மோசடி, ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு விசாரணைகளை நடத்தி தண்டனை வழங்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் நோக்கிலேயே இந்தச் சிறப்பு உயர்நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

### ஊடகங்களை ஒடுக்கியோர்

## ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் கொடுப்பது வரவேற்கத்தக்கது

### அமைச்சர் மங்கள தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவானது மகிந்த ஆட்சிக் காலத்திலேயே அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. ஆட்சியிலிருக்கும்போது ஊடகங்களை ஒடுக்கிய மகிந்த அணி, இன்று ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் கொடுப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. இவ்வாறு நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ரி.என்.எல். தொலைக்காட்சி அரச தலைவர் மைத்திரிபாலவின் கீழ் நேரடியாக இயங்கும் தொலைத்தொடர்பு ஆணைக்குழு ஊடாக மூடப்பட்ட விவகாரம் தொடர்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொல்காவலையிலுள்ள ரி.என்.எல். தொலைக்காட்சியின் அலைவரிசை பரிமாற்ற மையம் கடந்த ஜூன் 4 ஆம் திகதி தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழு அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டு மூடப்பட்டது. ஒளிபரப்புச் சாதனங்களும் கையகப்படுத்தப்பட்டன.

தொலைக்காட்சி நிறுவனமானது வருடாந்த உரிமப் பத்திரத்தை இன்னும் பெற்றுக் கொள்ளாததன் காரணமாகவே நீதிமன்றத்தின் அனுமதியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை பொல்காவலை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. தமது தரப்பு நியாயத்தை எடுத்துரைத்துள்ள ரி.என்.எல். தொலைக்காட்சி அதிகாரிகள், ஒளிபரப்பிலுள்ள தடங்கல்கள் குறித்தும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாகவும் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவுக்கு எழுதிய கடிதங்களையும் சமர்ப்பித்தனர். முன்னறிவித்தல் எதுவுமின்றியே சுற்றிவளைப்பு இடம்பெற்றதாகவும் கூறியுள்ளனர். கையகப்படுத்தப்பட்டுள்ள சுமார் 2கோடி வரை பெறுமதியுள்ள தொழில்நுட்ப கருவிகளை விடுவிக்குமாறு அதிகாரிகள் கேட்டுள்ளனர். அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

தண்ணீர் உட்புகாத வகையிலான பாதுகாப்பு அறையொன்றில் அவற்றை வைத்து பராமரிக்குமாறு கேட்டனர். பொருள்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து அரசு என்ற வகையில் நாம் கவலையடைகின்றோம். பொறுப்புள்ள ஊடக சுதந்திரத்துக்காக நாம் குரல்கொடுத்துள்ளோம். இன்று எதிர்க்கட்சிகளுக்கு ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்தாலும் அந்த ஊடகங்களுடன் நாம் சிறந்த தொடர்பைப் பேணிவருகின்றோம்.

கடந்த காலங்களில் ஊடகங்கள் தாக்கப்பட்டன, ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். உரிமப்பத்திரங்கள் முடக்கப்பட்டன. அன்று அவற்றைச் செய்தவர்கள் இன்று ஊடகச்சுதந்திரம் பற்றிக் கதைப்பது மகிழ்ச்சியளிக்கின்றது - என்றார்.

**பின்னணி**

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையிலான பனிப்போர் தீவிரமடைந்த நிலையில், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் சகோதரரின் தொலைக்காட்சி நிறுவனமான ரி.என்.எல். சீல் வைத்து மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5,31)



## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவிகளிடம் பாலியல் இலஞ்சம்

### விரிவுரையாளர்களின் விவரங்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படும் என்கிறார் உயர்கல்வி அமைச்சர்

கொழும்பு, ஜூன் 11

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவிகளிடம் பாலியல் இலஞ்சம் கோரிய சில விரிவுரையாளர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவர்கள் குறித்த தகவல்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படும் என்று உயர்கல்வி மற்றும் கலை, கலாசார அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் குற்றச்செயல்கள் தலைவிரித்தாடுகின்றன. பயங்கரமானதொரு யுகம் உருவாகியுள்ளது என்று ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. சட்டவிரோத போதைப்பொருள்கள் விற்பனைக் குழுக்களினதும், பாதாளக் குழுவினரதும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இவ்விரு தரப்பினரும் ஒன்றாக இயங்கக் கூடியவர்கள். அரசியல்வாதிகளினதும், சில உயர் பொலிஸ் அதிகாரிகளினதும் ஆசியுடனேயே இந்தக் குழுக்கள் உருவாகின்றன. மேற்படி தரப்புக்களின் ஆசியின்றி உருவாகும் குழுக்கள் ஆரம்பத்திலேயே அழிக்கப்படுகின்றன.

வடக்குக்கு அண்மையில் சென்றிருந்தேன். அங்கு வரலாறு காணாதவகையில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இளைஞர்கள் சீரழிந்துவருகின்றனர். நாடாளுமன்றத்தில் வேறு வேறு விடயங்களையெல்லாம் கதைக்கும் வடக்கு அரசியல்வாதிகள் இந்த விடயம் பற்றிக் கதைப்பதில்லை. இன்று பல்கலைக்கழக கட்டமைப்புக்குள்ளும் போதைப் பொருள் புகுந்துள்ளது.

உயர்தரம் வரை ஆசிரியர்களின் வழிகாட்டலில் ஒழுக்கமாகக் கற்ற மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குள் காலடியெடுத்து வைத்ததும் மாறிவிடும் நிலைகாணப்படுகின்றது. பகிடிவதைகளும் தலைதூக்கியுள்ளன. பாரதூரமான 260 சம்பவங்கள் அண்மையில் பதிவாகின. பாலியல் இலஞ்சம் கூடக் கோரப்படுகின்றது.

உபவேந்தருக்குக்கூட அச்சுறுத்தல் இருப்பதால் எவரும் முறைப்பாடு செய்வதில்லை. அவ்வாறு செய்தால் பல்கலைக்கழகத்துக்குள் வைத்து கை, கால், மண்டை உடைக்கப்படும் என்று மிரட்டல் விடுக்கப்படுகின்றது.

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்கள், பெற்றோர், கல்விச் சமூகம் என மூன்று தரப்பையும் நாடாளுமன்றத்துக்கு அழைத்தேன். அங்கு நெடுநாளாகவே பிரச்சினை இருந்துவருகின்றது. மாணவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டுச்செல்லும் நிலையும் காணப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தில் நீண்ட நாள்கள் பிரச்சினை நிலவியதால் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற உபவேந்தரொருவரை நியமித்தோம். அவருக்கும் வேலைசெய்வதற்கு இடமளிக்காத வகையில் அங்கு மாபியாக்கள் இயங்குகின்றன.

பரீட்சையில் சித்தியடைய வேண்டுமானால் பாலியல் இலஞ்சம் வேண்டுமென சில விரிவுரையாளர்கள் கேட்பதாக மாணவிகள் பெற்றோர் ஊடாக முறைப்பாடு செய்துள்ளனர். இவை குறித்து விசாரணைகள் நடக்கின்றன. ஒரு பேராசிரியர் குறித்து அடிக்கடி முறைப்பாடு வருகின்றது. எனவே, இவ்வாறு செயற்படுபவர்களின் விவரங்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படும். முன்னாள் உபவேந்தருக்கு எதிராக நிறைய முறைப்பாடுகள் இருக்கின்றன. கோப் குழுவில்கூட நீண்ட குற்றச்சாட்டுப் பட்டியல் இருக்கின்றது. அவர் இப்போது நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுள்ளார் - என்றார். (5)


ES
Printers
BATTLE NORTH
ES Printers
AR Rodny
18
குறைந்த விலையில் உங்களுடைய
சகல அச்சக வேலைகளையும்
செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்...
மணியம் கபே
Maniyam Cafe
பனர் பிரிண்ட்
(Banner),
35/=
பனர் பிரிண்ட் (Banner),
வியாபார மற்றும்
ஏனைய நிறுவனங்களுக்கான
பெயர் பலகைகள் (Name Board),
மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள்,
கையேடு (Handbills),
நோட்டிஸ் (Notice) மற்றும்
அனைத்து ஓவ்செற்,
டிஜிற்றல் அச்சக வேலைகள்
சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு ( Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில்
குறைந்த விலையில்
தரமாக செய்துதரப்படும்.
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கரடிப் போக்குச் சந்தி, ஏ-9 வீதி,
கிளிநொச்சி.
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
www.esprinters.com

# 1500 லீற்றர் கோடா மீட்பு

### ஒருவர் கைது



வவுனியா, ஜீன் 11

வவுனியாவில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டு 1500 லீற்றர் கோடாபரல்கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா ஓமந்தை பாலமோட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது. வன்னிப்பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையின் கீழ் செயற்படும் புலனாய்வுப்பிரிவினரேகசிப்புஉற்பத்திநிலையத்தை முற்றுகையிட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாஓமந்தைபொலிஸ்பிரிவிலுள்ள பாலமோட்டடை, ஊறாகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் செயற்படுகிறது என்று வன்னிப்பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் தலைமையின் கீழ் செயற்படும் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்தது.

அதன் அடிப்படையில் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ்செயற்படும்போதைஒழிப்புப் பிரிவினருடன் இணைந்து புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கையில் அந்தப்பகுதிசுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் ஒரு பரல் 1500 லீற்றர் கொண்ட கோடா மீட்கப்பட்டது. கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அந்தப் பகுதியைச்சேர்ந்த 36 வயதுடையநபர்கைது செய்யப்பட்டார்.மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டபின்னர்அவர்நீதிவான்மன்றில்முற்படுத்தப்படுவார்என்றுபொலிஸார் மேலும்தெரிவித்தனர். (எ-21)



# பொலித்தீனில் கசிப்பு விற்பனை அமோகம்

### பெண் உள்பட இருவர் விசுவமடுவில் கைது

முல்லைத்தீவு, ஜீன் 11

பொலித்தீன் பையில் கட்டப்பட்டு கசிப்பு விற்பனை செய்யப்படுவது முல்லைத்தீவில் அதிகரித்துள்ளது. அவ்வாறு கட்டப்பட்டுவிற்பனையில்ஈடுபட்ட குற்றச்சாட்டில்பெண்உள்ளிட்ட இருவர்நேற்று கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் தேடுதல்களில் சிக்காதிருக்க கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் இவ்வாறான புதிய யுக்திகளைக் கையாளுகின்றார்கள் எனப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடு12ஆம்கட்டைப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டனர் என்றகுற்றச்சாட்டிலேயே இவர்கள்புதுக்குடியிருப்பு பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து பொலித்தீன் பைகளில் கட்டப்பட்ட, போத்தலில்அடைக்கப்பட்டகசிப்பு மீட்கப்பட்டது. இந்தச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

புதுக்குடியிருப்புப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின்உத்தரவுக்குஅமைய நடமாடும் கண்காணிப்புச் சேவை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார தலைமையிலானகுழுவினர் விசுவமடுப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போதே கசிப்பு மீட்கப் பட்டது.

பைக்கட் ஒன்று 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. விற்பனையில் ஈடுபட்ட பெண்கைதுசெய்யப்பட்டார். அவரிடம் இருந்த கசிப்பு 50 பைக்கற்றுகளிலான கசிப்பு மீட்கப்பட்டன. மற்றும் ஒரு பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது கசிப்பு விற்பனை செய்யத் தயாரான நிலையில் இருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து இரண்டு போத்தல்கள் கசிப்பு மீட்கப்பட்டுள் ளது. குறித்த சந்தேக நபர்கள் இருவரும் விசாரணைகளின்பின்னர் முல்லைத்தீவு நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-21,ரி3)

# நூலகங்களின் மேம்பாட்டை ஆராய்வதற்கு களப் பயணம்

### சாவ. நகர சபையின் உறுப்பினர்கள், நூலக அபிவிருத்திச் சபைகளின் பிரதிநிதிகள் செல்லவுள்ளனர்

சாவகச்சேரி, ஜூன் 11

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகரசபையால் நடத்தப்படும் பொது நூலகங்களின் மேம்பாடு தொடர்பாகச்சபையின்உறுப்பினர்கள்மற்றும் நூலகஅபிவிருத்திச்சபைகளின்பிரதிநிதிகளுக்கானகளப்பயணம்விரைவில்மேற்கொள்ளப்படவுள்ளது.

ஏனைய இடங்களில் உள்ள பொது நூலகங்களுக்கு நேரில் அழைத்துச்சென்று அங்குள்ள நிலமைகளை ஆராயந்து அவற்றின் உதவியுடன் நகரசபையின் நூலகங்க ளின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கே களப்பயணம் அமையவுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி முதன்மை நூலகம் மற்றும் நுணாவில், மீசாலை ஆகிய நூலகங்களின் வளர்ச்சியில் காணப்படும் குறைபாடுகளை நீக்கும் வகையில் சபையின் உறுப்பினர்கள் மற்றும் நூலக அபிவிருத்திச்சபைகளின்பிரதிநிதிகள்அடங்கிய குழுவினர் களப் பயணத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

களப்பயணமாக யாழ்ப்பாணம் மாநகரசபையின்பொது நூலகம்யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பொது நூலகம், மருத்துவபீடப் பொது நூலகம், கொழும்பு உட்பட்ட மாநகர சபைகளின் பொது நூலகங்கள் போன்றவற்றுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள செயற்பாடுகள் குறித்துப் பார்வையிட்டு அதன் அடிப்பிடையில்நகரசபையின்பொதுநூலகங்களை மேம்படுத்தப்படவுள்ளதாக நகரசபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

"போர்க் காலத்துக்கு முன்னர் சாவகச்சேரி நகரசபை அதன் செயற்பாடுகள் நாட்டில் உள்ள அனைத்துஉள்ளூராட்சிசபைகளின்செயற்பாடுகளை முந்தி முதலிடத்தில் காணப்பட்டன. நகரசபையின்செயற்பாடுகளில்நூலகங்களில் வளர்ச்சிச்செயற்பாடுகளும்அமைந்திருந்தன. முன்னைய காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத் திணைக்களங்களில் பணியாற்றிய உயர் அதிகாரிகள் இங்கு வந்து தமக்குத் தேவையான ஆங்கில நூல்களை இரவல் பெற்றுச் செல்லும் அளவுக்குப் பெறுமதியான தமிழ், ஆங்கில நூல்கள் காணப்பட்டன.

போர், இடப்பெயர்வு போன்றவைகளால் நூலகங்களில் காணப்பட்ட பல பெறுமதிமிக்க நூல்கள் அழிவடைந்துள்ளன" என்றும் நகரசபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். சாவகச்சேரி, நுணாவில், மீசாலை ஆகிய பொது நூலகங்களின் அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்களின் கூட்டம்சாவகச்சேரி நகரசபையின் பொன் விழா மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். (எ-21,9)

## கிளிநொச்சிக்கு வரும்

# மைத்திரி மாமா அப்பாவையும் கூட்டிக்கொண்டு வரவேண்டும்

### ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் உருக்கமான வேண்டுகோள்



கிளிநொச்சி, ஜீன் 11

எதிர்வரும் 18ஆம் திகதி கிளிநொச்சி வருகைதரவுள்ளஅரச தலைவர் மைத்திரி மாமா எங்களுடையப் அப்பாவையும் விடுவித்துகூட்டிக்கொண்டு வரவேண்டும் என ஆயுள் கைதியான ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறுவர் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 18ஆம் திகதி கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார்.

இந்த நிலையிலேயே ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் இந்த கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

"நாங்களும்இந்தநாட்டின்சிறுவர்களே. எனவேஎங்களின் நிலைமையைக் கருத்தில் எடுத்து மைத்திரி மாமா எங்கள் அப்பாவை மன்னித்து விடுதலை செய்ய வேண்டும் என தாழ்மையுடன் கோருகின்றோம்.

அம்மாவைஇழந்துஅப்பாவைபிரிந்துநானும்தங்கச்சியும் வாழ்ந்து வருகின்றோம். அம்மாவுடன் வாழ்வதற்கு எங்களுக்கு கொடுத்து வைக்கவில்லை.

எனவே அப்பாவுடன்சேர்ந்து வாழ்வதற்கு என்றாலும் அரச தலைவர்மாமாஉதவவேண்டும்" எனஆனந்தசுதாகரனின் மகன் கோரியுள்ளார். (எ-214)

# பாலியல் துர்நடத்தைக் குற்றச்சாட்டு தந்தை விளக்கமறியலில் வைப்பு

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜீன் 11

11வயதுமகளைபாலியல்துர்நடத்தைக்குஉட்படுத்தினார்என்ற குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

மனைவிமற்றும்பாதிக்கப்பட்டமகள்ஆகியோர்செய்தமுறைப்பாட்டின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா . ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்தவெள்ளிக்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. துர்நடத்தைமுறைப்பாட்டைஅடுத்துஈச்சங்குளம்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுபாஸ் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்நிஜாம்தலைமையில்சென்றபொலிஸ்குழுவினர்சிறுமியின்தந்தையைநேற்றுமுன்தினம்சந்தேகத்தின்பேரில்கைது செய்தனர்.

சிறுமியைவைத்தியசாலையில்மருத்துவப்பரிசோதனைக்காக அனுமதித்தனர்.

குறித்தசந்தேகநபர்அன்றையதினம்நிறைந்தமதுபோதையில் நடமாடியுள்ளார். ஊர்மக்கள் சிலருடன் முரண்பட்டுமுள்ளார். சிறுமி மீது பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டபோது தாய் கண்டுள்ளார்.

அதன் பின்னர் சம்பவத்தைத் தடுத்ததுடன் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். சந்தேகநபர்நேற்றுமுன்தினம்மாலை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டார்.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் எதிர்வரும்19ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டன. (21,110)

# வேகமான காற்றால் இருவர் பாதிப்பு

சாவகச்சேரி, ஜீன் 11

வேகமான காற்றால் பாதிக்கப்பட்ட இருவர் சாவகச்சேரிமருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம், தென்மராட்சியின்வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்றன.

சாவகச்சேரி வடக்கு மட்டுவில் பகுதியில் சாலையோரத்தில் நடந்து சென்றுகொண்டிருந்த 64 வயது முதியவரின் தலை மீது மரத்திலிருந்து கருங்குளவிக் கூடு வீழ்ந்து குளவிகள் தாக்கியதில் அந்த முதியவர் பாதிப்புக்கு உள்ளானார்.

இதேவேளை, பாலாவி வடக்குப் பகுதியில் பலாமரத்தின் கீழ் அமர்ந்திருந்த 24 வயதுப் பெண்ணின் முதுகின் மீது பலாக்காய் வீழ்ந்ததில் குறித்த பெண் பாதிப்புக்குள்ளானார்.

பாதிப்புக்கு உள்ளான இருவரும் மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளனர்எனத்தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# இராணுவக் கேணலுக்காக கண்கலங்கிய மக்கள்

## முல்லைத்தீவில் சம்பவம்





முல்லைத்தீவு. ஜீன்11

இராணுவ முகாமில் கேணல் தர அதிகாரியாகக் கடமையாற்றிய ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்றதைஅடுத்துமுகாமை அண்டிய பகுதியைச் சேர்ந்தசிலர்கண்ணீர் விட்டு அழுத சம்பவம் வடக்குமாகாணத்தில் நேற்றுப் பதிவாகியுள்ளது. இராணுவ ஆக்கிரமிப்பு. திட்டமிட்ட நில அபகரிப்பு என்று போராட்டங்கள் இடம் பெறும் வடக்கு மாகாணத்தில் இவ்வாறான சம்பவம்பதிவாகியமை சமூக வலைத் தளங்களில் நேற்று பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

போரால் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விஸ்வமடு இராணுவ முகாமில் கேணல் தர அதிகாரியாகக் கடமையாற்றிய ரத்தனபிரிய பந்து அம்பேபுஸ்ஸ முகாமுக்கு இடமாற்றம்பெற்றுச்செல்கிறார். அவருக்குஅந்தப் பகுதியைச் சேர்ந்த சிலர் பிரியாவிடை நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்விலேயே அவர்கள் கண்ணீர் விட்டுஅழுதுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த அதிகாரி கிளிநொச்சி. முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்குப் பொறுப்பாக இருந்துள்ளார்.

இதனால் அவர் அங்குள்ள பலருக்கும் சிவில் பாதுகாப்புத் திணைக்களங்களுக்குள் அதிக கொடுப்பனவுகளுடன் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்துள்ளார். அவ்வாறு வேலைவாய்ப்புக்களைப் பெற்றவர்களே குறித்த நிகழ்வில் கண் கலங்கினர் என்று விசுவமடு மக்கள் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில்கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் நேற்று தனது முகப்புத்தகத்தில் பதிவொன்றை இட்டுள்ளார். அந்தப் பதிவில்; சிவில் பாதுகாப்பு படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் மற்றும் விஸ்வமடு மக்கள் ஆகியோர் கண்ணீருடன் கோர்ணல் ரத்தனபிரிய பந்துக்கு பிரியாவிடை கொடுத்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப்படைகளில்வடக்கில் உள்ள மக்களை உண்மையில்நேசிக்கும்அதிகாரிகள் இருப்பதுடன், அவர்களைநேசிக்கும் மக்களும் இருக்கின்றனர் என்றும் அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார். (எ-21,232)



வவுனியாவில் குடிதண்ணீருக்காக அமைக்கப்பட்ட

# நீர்த் தேக்கத்தையும் விட்டு வைக்காத பெரும்பான்மையினர்

## மக்கள் கவலை

வவுனியா. ஜீன் 11

வவுனியாவில் குடிதண்ணீர்த் தேவைக்காக அமைக்கப்படும் நீர்த் தேக்கத்திலும் வெளிமாவட்ட மீனவர்கள்மீன்பிடிநடவடிக்கையில்ஈடுபட்டுள்ளனர். இதனால் அந் நீர்த் தேக்கம் பாதிக்கப்படும்என்றுமக்கள்அஞ்சுகின்றனர். வவுனியாசாஸ்திரிகூழாங்குளம் பகுதியில்ஆசியஅபிவிருத்திவங்கியின் நிதிஉதவியின்கீழ்வவுனியாமக்களுக்கான குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நீர் தேக்கம் ஒன்று உருவாக்கப்பட்டுவருகின்றது.

நீர்ப்பாசனவடிகாலமைப்புச்சபையின் மேற்பார்வையில் உருவாக்கப்பட்டு வரும் இந்தத் திட்டம் கிட்டதட்ட 900 மில்லியன் ரூபாய் நிதியில் அமைக்கபட்டு வருகின்றது.

நீர்த் தேக்கம் இன்னும் ஓரிரு மாதங்களில் பாவனைக்கு விடப்படவுள்ளது. இந்த நிலையில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் வள்ளங்களைப் பயன்படுத்தி அங்கு மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.

தடை செய்யபட்ட தங்கூசி வலைகளைப்பயன்படுத்திமீன்பிடியில்ஈடுபடுகின்றனர். டைனமற் பாவிக்கப்பட்டும் மீன் பிடி நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனால்மீன்கள்இறந்துமிதப்பதுடன் நீர்மாசடைகின்றநிலைமையும் ஏற்படுகிறது என்றும் மக்கள் தெரிவித்தனர்.

“குறித்த நீர் தேக்கம் குடி தண்ணீருக்காக மட்டுமே அமைக்கப்பட்டு வருகிறது. வெளிமாவட்ட மீனவர்களுக்கு இங்கு மீன்பிடியில் ஈடுபடுவதற்கு யார் அனுமதி கொடுத்தனர். நீர்த்தேக்கம் அமைப்பதற்காகஅதனைச்சுற்றியுள்ள கிராம மக்களாகிய நாங்கள் எமது பூர்வீக விவசாயக் காணிகளை வழங்கியுள்ளோம். நீர்த் தேக்கத்தின் மூலம் நன்மை கிடைப்பதாயின். அதன் பயனைஅனுபவிப்பதாயின்அதுநாங்கள் தான் அனுபவிக்க வேண்டும்.

சகோதர இனத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து எமது பெண்களுடன் தவறாக நடக்க முற்படும் சந்தர்ப்பங்களும் பல இடம்பெற்றுள்ளன.

எனவே குறித்த நீர்தேக்கத் தைப் பாதுகாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் இது இரு சமூகத்துக்கும் இடையிலான பிரச்சினை யாக உருவாக முன்னர் தீர்க்கப்பட வேண்டும் என்றனர். இது தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியாளர் உதயசீலனிடம் கேட்ட போது. குறித்த நீர் தேக்கத்தில் மீன் பிடிப்பதற்கான அனுமதி ஒருபோதும் வழங்க முடியாது.

மேற்குறித்த சட்டத்துக்கு மாறான செயற்பாடுகள் தொடர்பாக நான் நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். வவுனியா மாவட்டச் செயலருக்கும் இது தெடர்பாகத் தெரியப்படுத்தி. பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யவுள்ளேன்-என்றார். (21.110)

இந்தியாவில் பிளஸ் 1, பிளஸ் 2 படித்த

# ஈழ ஏதிலிகளுக்கும் இலங்கையில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும்

## கமலேஸ்வரன்பிரேரணை முன்மொழியவுள்ளார்

யாழ்ப்பாணம். ஜீன் 11

இந்தியாவில்பிளஸ்1.பிளஸ்2படித்த ஈழ ஏதிலிகளின் கல்வித் தகுதியை ஏற்று அவர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என வடக்கு மாகாண சபையில் பிரேரணை முன்மொழியப்படவுள்ளது. வடக்கு மாகாண சபையின் 124ஆவது அமர்வு அவைத்தலைவர்சி.வி.கே.சிவஞானம்தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை கூடவுள்ளது.

இந்த அமர்வில்மாகாணசபையின் பிரதிஅவைத்தலைவர்வ.கமலேஸ்வரன் இந்த பிரேரணையை முன்மொழியவுள்ளர்.

அவர் தனது பிரேரணையில்.

கடந்தகால போரின்போது இந்தியாவில்தஞ்சமடைந்தஎமதுமக்கள்சிறுசிறு தொகையாக வந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களில் பலர் வேலைவாய்ப்புக்கள்இன்றிதமதுவாழ்வாதார,பொருளாதார பிரச்சினைகளால் மிகவும் துன்பப்படுகின்றனர்.

இவர்கள் தமிழ்நாட்டின் கல்வி முறைமையில் பிளஸ் 1 மற்றும் பிளஸ்2சித்தியடைந்துள்ளனர். அத்துடன் பட்டம் பெற்ற பலரும் உள்ளனர்.

இவர்கள் தமது வாழ்வாதாரத்துக்காக வேலைக்காக அலைவதை நாம் அவதானிக்கின்றோம். எமது நாட்டின்கல்விதிட்டத்தின் பிரகாரம் தற்போது வேலைக்கான விண்ணப்பங்கள் கோரும்போது இந்தியாவில் இருந்து வந்தவர்களால் விண்ணப்பிக்க முடியாத நிலை உள்ளது.

எனவே விண்ணப்பங்களைக் கோரும்போது ஜி.சி.ஈ சாதாரண தர கல்விக்குச் சமமாக பிளஸ் 1 ஐயும். உயர்தர கல்விக்குச் சமமாக பிளஸ் 2ஐயும்அங்கீகரிக்கவேண்டும்என கொழும்புகல்வி அமைச்சை கோருவதுடன்இந்தியாவில்பட்டப்படிப்பை முடித்தவர்களின் பட்டப்படிப்பை அங்கீகரிக்க வேண்டும் என உயர் கல்விஅமைச்சினையும்பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினையும்கோரவுள்ளர். (எ-8)

பாடசாலைகளில்

# பாட வேளையில் நூலக பாடம் கட்டாயமாக்கப்படுதல் வேண்டும்

## உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜுன் 11

இன்றைய மாணவர்கள் பொதுவிடயங்களைஅறிவதில் ஆர்வமற்றவர்களாகவும் அதனைப் பெற்றுக் கொள்வதில்நேரமற்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

எனவே பாடசாலைகளில் நூலக பாடத்தை கிழமையில் ஒரு பாட வேளையாவது மாணவர்களுக்கு கட்டாயம் வழங்க வேண்டும் என்று உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய மாணவர்கள் கல்வியை வினா- விடையாகவே கற்றுவருகின்றனர். பரீட்சைக்கு மட்டுமே தங்களை தயார்ப்படுத்தி வருகின்றனர்.

பரீட்சையில் சித்திய டைந்தால்மட்டும் போதும் என்ற நிலை உருவாகி வருகின்றது. இதனால் ஆளுமை மிக்க ஆற்றல் மிக்க மாணவர்கள் உருவாகும் சந்தர்ப்பத்தை பாடசாலைகள் உருவாக்க வேண்டும்.

பாடசாலைகளில் நூலகங்களைதரமுயர்த்திவரலாறு, தத்துவம், மொழியியல், பொதுஅறிவு, புராண இதிகாச புத்தங்கள் என பல் துறைசார்ந்தபுத்தகங்களை வாசிக்க ஊக்கமளிக்க வேண்டும். பத்திரிகைகளை வாசிப்பதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இதன்மூலமே அன்றாட பிரச்சினைகளை வாசித்து அறிந்து தம்மை தயார்ப்படுத்தி கொள்வார்கள்.

இதை விடுத்து எட்டுப் பாட வேளையும் பாடங்களை கட்டாயமாக்குவதால் மாணவர்களின் மூளை களைப்படைந்து விடு கின்றது. இதனால்பாடங்களையும்அவர்கள்முழுமையாக கவனித்து செயல்படமாட்டார்கள்.

இதன் மூலம் சிறந்த கல்வி அடைவு மட்டம் முழுமை அடையமாட்டாது.

மாணவர்களைபுத்தகபூச்சிகளாகஉருவாக்காதுசிறந்த ஆளுமை, ஆற்றல் மிக்க கல்விமான்களாக உருவாக்க வேண்டுமானால் நூலக பாடம் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

பொது விடயங்கள் பற்றி முழுமையாக அறிய முடியாத மாணவர்கள் சமூக அமைப்புக்கு ஏற்ப தம்மை மாற்ற முடியாது உளரீதியான பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

எனவே நூலக பாடத்தின் தேவையை உணர்ந்து மாணவர்களை வாசிப்பு பழக்கத்துக்குஇட்டுச்செல்ல நூலக பாடத்தை கட்டாய பாடமாக்கி மாணவர்கள் பல்துறை சார்ந்தவர்களாகவும். சிந்தனை மிக்கவர்களாகவும்உருவெடுக்கவழியேற்படுத்திக் கொடுக்க வேண்டும்என்றார்.(எ-50)

வவுனியா

# புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் இன்று

வவுனியா ஜுன் 11

வரலாற்று பிரசித்தி பெற்ற வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று இடம்பெறவுள்ளது. விழாவின் ஏற்பாடுகள் அனைத்தும் முழுமையடைந்துள்ளன என்று ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (எ-110)



## நீர் மட்ட அதிகரிப்பால் வான் கதவுகள் திறப்பு

நுவரெலியா.ஜூன்.11
கொத்மலை மின்சார சபைக்கு நீரேந்தும் பகுதியில் ஆற்று நீரின் மட்டம் உயர்வடைந்ததை அடுத்து வான்கதவு திறக்கப்பட்டது.
அணைக்கட்டுக்கு கீழ் பகுதியில் ஆற்றைப் பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.
மழை காரணமாக கெனியன், லக்சபான, விமல சுரேந்திர, மவுஸ்ஸாக்கலை, காசல்ரீ ஆகிய நீர்தேக்கங்களின் நீர்மட்டங்களும் உயர்ந்துள்ளன என்று மின்சார சபை தெரிவித்துள்ளது. (ற-ரி4)



## கர்ப்பிணிப் பெண்களுக்கு செயலமர்வு

நுவரெலியா, ஜூன் 11
மஸ்கெலியா பிரதேச கர்ப்பிணிகளுக்கான செயலமர்வு நேற்றுமுன்தினம் சாமிமலை கலா சார மண்டபத்தில் நடைபெற்றது.
மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யபட்ட நடமாடும் பொலிஸ் சேவையின் ஒரு மாத நிறைவை முன்னிட்டு இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

## திருகோணமலை நகராட்சியின் நடமாடும்சேவை

திருகோணமலை, ஜூன் 11
திருகோணமலை நகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.
அதில் ஆதனவரி அறவிடல், ஆயுள்வேத மருத்துவ சேவைகள் மற்றும் சுகாதர பகுதியின் சேவைகள், நூலக பகுதியினரின் சேவைகள் , வேலைப் பகுதியினரின் சேவைகள், வியாபார நிலைய அனுமதிப் பத்திரம் வழங்கல் மற்றும் பொது மக்களின் முறைப்பாடுகள் உடனுக்குடன் தீர்த்தல் போன்ற சேவைகள் இடம் பெற்றன.
வீதி செப்பனிடல் , வீதிமின் விளக்குகள் திருத்துதல், வடிகான் சீராக்கம், மைதானம் சமப்படுத்தல் உள்ளிட்ட பணிகளும் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

# நேரடிக் கொள்கைகள் கொண்ட தலைவரே நாட்டுக்கு அவசியம்

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 11
**நேரடி மற்றும் தெளிவான கொள்கையுடன், நாட்டைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய தலைவர் ஒருவரே இந்த நாட்டுக்கு அவசியம். அவ்வாறான தகைமை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவிடம் இல்லை.**



இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்றுமுன்தினம் மகாநாயக்கதேரர்களை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட அவர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நேரடி கொள்கையுடைய ஒருவருக்கே நான் ஆதரவு வழங்குவேன். 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தலின் போது ஒரு தெளிவான நிலைப்பாட்டை எதிர்பார்க்கின்றேன். 2020 இல் நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தலில் தலைமை அமைச்சர் ரணில் வித்திரமசிங்க போட்டியிட்டால் மக்கள் ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டார்கள்.
ரணில் விக்கிரமசிங்கவின் காலம் முடிந்துவிட்டது. தற்போதுள்ள தலைமைத்துவம் தொடருமானால் ஐக்கிய தேசியக்கட்சி இன்னும் பல வருடங்களுக்கு பின்நோக்கி சென்று விடும். கைவிடப்பட்டுள்ள நாட்டு மக்களை வழிநடத்துவதற்கு ஒரு சிறந்த தலைமைத்துவம் அவசியம். அநாவசியப் பேச்சுக்களை நிறுத்திவிட்டு புதிய மாற்றங்கள் தொடர் பில் சிந்திக்காவிட்டால் இன்னும்18மாதங்களில் ஐக்கிய தேசியக் கட்சி மயானத்துக்குச் சென்றுவிடும். என்றார். (ற-ரி4)

# இனவெறுப்பை பிரதிபலிப்பவர் அரசில் இருப்பது வெட்கக்கேடு

கொழும்பு, ஜூன் 11
இனவெறுப்பை பகிரங்கமாகப் பிரதிபலிக்கும் ஒருவர் கூட்டரசின் அமைச்சராக இருப்பது நாட்டுக்கே வெட்கக் கேடானது. இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் உள்ளதாவது:
விரிவுரையாளர்களுக்கு பாலியல் இலஞ்சம் கொடுத்தே தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவிகள் சித்தியடைகிறார்கள் என அமைச்சர் விஜேதாச ராஜபக்ச நாடாளுமன்றத்தில் கூறியுள்ளதை இந்த நாட்டின் சகவாழ்வை விரும்பும் ஒரு பிரஜை என்ற ரீதியில் வன்மையாகக் கண்டிக்கின்றோம். விஜயதாச ராஜபக்சவின் அறிவீனமானதும் அடிப்படையற்றதுமான கருத்து தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விச் சமூகத்துக்கு மட்டுமல்ல இந்த நாட்டின் ஒட்டு மொத்த பெண் குலத்துக்குமே இழுக்காகும். இனவெறுப்புவாதியான விஜேதாச ராஜபக்சவின் கருத்து இந்த நாட்டின் அனைத்து சமூகங்களையும் இழித்துரைப்பதாகவே உள்ளது. பொறுப்பு வாய்ந்த ஒரு இடத்தில் உள்ள இந்த அரசியல்வாதி பொறுப்புணர்ச்சியற்ற விதத்தில் இழிவாகச் சிந்திப்பது இந்த நாட்டுக்குப் பொருத்தமானதல்ல.
நல்லாட்சி அரசால் இவருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களும் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராக உள்ள ஒருவர் நாட்டின் உயரிய சபையில் பெண்களை இழிவுபடுத்தியிருப்பது சரித்திரத்தில் இதுவே முதற் தடவையாகும்.
நாட்டின் சரித்திரமாகப் பதிவாகியுள்ள இந்த அமைச்சரின் அசிங்கமான அறிக்கையை ஹன்சார்ட்டிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது. (ற)

## மண்மேட்டுடன் மோதி விபத்து: ஒருவர் காயம்



நுவரெலியா,
நுவரெலியா தலவாக்கலைப் பிரதான வீதியில் மண்மேட்டுடன் மோதி மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார். இந்த விபத்து நேற்று நடந்தது. காயமடைந்தவர் லிந்துலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஹற்றனிலிருந்து தலவாக்கலைப் பகுதியை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் மண்சரிவால் வீதியில் காணப்பட்ட மண்மேட்டில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.
மண் சரிவை அகற்றுவதற்கும், விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கும் தலவாக்கலை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி5)

## வங்கியில் தீ விபத்து

கொழும்பு, ஜூன் 11
கல்பிட்டியிலுள்ள பிரதேச அபிவிருத்திவங்கிகட்டடத்தில் நேற்றுமுன்தினம் தீவிபத்துஏற்பட்டதுஎன்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.
தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

## போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டவர் கைது

மட்டக்களப்பு.ஜூன்.11
நீண்டகாலமாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார் என்ற குற்றச்சாட்டில் நபரொருவர் கைதுசெய்யப்பட்டார் சந்தேகநபர் ஓட்டமாவடி நாவலடியில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொள்ளபட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து கஞ்சா மற்றும் போதைமாத்திரைகள் என்பன கைப்பறப்பட்டன. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.ரி4)

## பொலிஸ் அதிகாரி விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு.ஜூன்11
வெல்லவாயவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாகன விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் அதிகாரி தனது கடமைகளை முடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பும் போது நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதி விபத்து ஏற்பட்டது என்று கூறப்பட்டது.
வெல்லவாயவைச்சேர்ந்த 40 வயதுடைய பொலிஸ் அதிகாரியே உயிரிழந்துள்ளார். விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-ரி4)


## ‘தங்கத் தாரகை’ நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் ஜூன் 10
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 200 வருட நிறைவை முன்னிட்டு "தங்கத் தாரகை" நூல் வெளியீட்டு விழா கல்லூரியின் சாண்டேஸ் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
முன்னாள் அதிபர் கதிர் பாலசுந்தரம் எழுதிய இந்த நூலின் வெளியீடு கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் இடம்பெற்றது.
வாழ்த்துரையை கலாநிதி ஆறுதிருமுருகன் மற்றும் வணபிதா அன்றூ ஜெயானந்தன் ஆகியோர் வழங்கியதுடன் நூல் ஆய்வுரையை உதவிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் ஸ்ரீகுமரன் வழங்கினார்.
கல்லூரியின் பழைய மாணவியான ஓய்வு நிலை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமாவதி செல்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவன் மடு பிரதேச செயலர் பா.ஜெயகரன் கல்லூரி பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
இந்த நூல் நேற்று லண்டன், கனடா, ஆஸ்திரெலியா, நோர்வே, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் வெளியிடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி4.114)





# சிரியாவில் ஐ.எஸ். தாக்குதலில் சிப்பாய்கள் 17 பேர் உயிரிழப்பு



டமஸ்கஸ், ஜூன் 11
சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 17 சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.
சிரியாவின் தெற்குப் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்துள்ளது. கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட சிரியச் சிப்பாய்களை இலக்கு வைத்தே இந்தத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது. இந்தச் சம்பவத்தை பிரிட்டனைத் தலைமையகமாகக் கொண்டு சிரியாவில் செயற்படும் கண்காணிப்புக் குழு உறுதிப்படுத்தியுள்ளது. (ம)

# வெட்டப்பட்ட பாம்பினது தலையால் தீண்டப்பட்ட ஒருவர் கவலைக்கிடம்

*அமெரிக்காவில் சம்பவம்*

வொஷிங்டன், ஜூன் 11
அமெரிக்காவில் வெட்டப்பட்ட பாம்பினுடைய தலையால் தீண்டப்பட்ட ஒருவர் கவலைக்கிடமான முறையில் சிகிச்சை பெற்று வருகிறார்.




அமெரிக்காவில் உள்ள ஹஸ்டன் நகரைச் சேர்ந்தவர் ஜெனீபர் சுட்கிளிப். கடந்த மாதம் 27ஆம் திகதி இவரது கணவர் தோட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு ரேட்டில் எனப்படும் கொடிய விசப் பாம்பு தோட்டத்துக்குள் நுழைவதை அவதானித்து அதன் தலையை வெட்டினார். வெட்டப்பட்ட பாம்பின் தலை சுட்கிளிப்பை கடித்ததும் அவர் மயக்கமடைந்தார். கடந்த 10 நாள்களுக்கும் மேலாக அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. கண்பார்வையை இழந்துவிட்ட நிலையில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் உயிர் பிழைப்பது கடினம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# ட்ரம்ப் - கிம் ஜே
# சிங்கப்பூரில் மு

## பன்னாட்டுச் சமூகம் பரபரப்பு

சிங்கப்பூர், ஜூன் 11
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவரும் சிங்கப்பூரில் நாளை காலை 9 மணியளவில் சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர். இந்தச் சந்திப்புக்காக இருவரும் நேற்று சிங்கப்பூர் சென்றனர். சிங்கப்பூரில் உள்ள சங்கிரிலா விடுதியில் ட்ரம்ப் தங்கியுள்ளார். ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட இந்த விடுதியில் 792 அறைகள் உள்ளன. விடுதி முழுவதும் அமெரிக்க பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது.
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னும் சிங்கப்பூர் சென்றுள்ளார். அவர் செயின்ட் ரெஜிஸ் விடுதியில் தங்கியுள்ளார். தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கிம் கூறியிருப்பதால் அந்த விடுதியில் சிங்கப்பூர் பொலிஸார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.
இவர்கள் இருவரும் சிங்கப்பூரின் சென்டோசா தீவில் உள்ள கேபெல்லா விடுதியில் நாளை அதிகாரப்பூர்வமாகச் சந்தித்துப் பேச உள்ளனர். ஆனால் அதற்கு முன்பாகவே இரு தலைவர்களும் அதிகாரப்பூர்வமற்ற பேச்சை தொடங்கிவிடுவார்கள் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.





### இரு செய்தியாளர்கள் கைது

ட்ரம்ப் - கிம் சந்திப்பு தொடர்பாக செய்தி சேகரிக்க உலகம் முழுவதிலும் இருந்து 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் சிங்கப்பூரில் முகாமிட்டுள்ளனர்.
இந்த நிலையில் ஒழுங்கு முறைகளை மீறியதாக தென்கொரியாவைச் சேர்ந்த இரு செய்தியாளர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். வடகொரிய தூதரக அலுவலக வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்த குற்றத்துக்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர். இருவரும் தென்கொரியாவுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று சிங்கப்பூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### சீனா அச்சம்

தென்கொரியாவில் அமெரிக்க இராணுவம் முகாமிட்டுள்ளது. வடகொரியாவும் தென்கொரியாவும் இணைந்தால் அமெரிக்க ராணுவம் வடகொரிய எல்லைக்கு வந்துவிடும். வடகொரியாசீன எல்லையில் அமெரிக்க ராணுவம் முகாம் அமைக்கும் என்று சீனா அஞ்சுகிறது.
இதுவரை வடகொரியாவின் மிக நெருங்கிய நட்பு நாடாக சீனா விளங்கி

# ட்ரம்பின் செயற்பாடுகளை விளாசினார் ஜஸ்ரின்

கியூபெக், ஜூன் 11
அமெரிக்க அதிபர் ட்ரம்பின் சமீபகாலத் திட்டங்களையும் செயற்பாடுகளையும் கடுமையாகச் சாடி ஒரு பிடி பிடித்துள் ளார் கனேடியத் தலைமை அமைச்சர் ஜஸ்ரின்.



கனடாவின் கியூபெக் நகரில் ஜி7 எனப்படும் உச்சி மாநாடு நடைபெற்றது. கனடா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், ஜேர்மனி, இத்தாலி ஆகிய ஏழு நாடுகள் இந்த மாநாட்டில் பங்கேற்றன. உக்ரைனின் ஒரு பகுதியாக விளங்கிய கிரீமியாவை தன்னுடன் ரஷ்யா இணைத்துக் கொண்டதை அடுத்து இந்த மாநாட்டில் இருந்து ரஷ்யா நீக்கப்பட்டது. ஆனால் ட்ரம்ப், ரஷ்யாவை மீண்டும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். இதற்கு ஏனைய ஆறு நாடுகளும் எதிர்ப்பை வெளிப்படுத்தின. ஜஸ்ரின் ஒருபடி மேலே சென்று நேரடியாகத் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.
அத்துடன், இரும்பு மற்றும் உருக்கு ஆகியவற்றுக்கு ட்ரம்ப் இறக்குமதி வரியை விதித்திருப்பதும் ஈரானுக்கு எதிராகத் தடை விதித்திருப்பதையும் கடுமையாகக் கண்டித்தார் ஜஸ்ரின். இதையடுத்து மாநாடுகளின் நிறைவில் ஏழு நாடுகளும் இணைந்து வெளியிடும் கூட்டறிக்கைக்கான தனது ஒப்பு தலை திரும்பப் பெற்றார் ட்ரம்ப்.
கனேடியத் தலைமை அமைச்சர் ஜஸ்டின் மீது கடுமையான விமர்சனத்தையும் ட்ரம்ப் முன்வைத்துள்ளார். "ஜி7 மாநாட்டில் ஜஸ்டின் சாந்தமானவர் போல நடித்துள்ளார். வரி விதிப்பு விவகாரத்தில் அமெரிக்கா ஏமாற்றுவதாக அவர் கூறியுள்ளார். ஆனால், நிஜத்தில் அமெரிக்க பொருள்களுக்கு கனடா அதிக வரி விதித்து அமெரிக்க விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களை பாதிப்படையச் செய்கிறது" என ட்ரம்ப் தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.
இந்த மாநாட்டில் ட்ரம்ப் தனிமைப் படுத்தப்பட்டார் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டன. (ம)

# காசா விவகாரத்துக்



# ஜாங்
# ழகாம்



றோணு
ொரியா
ந்தால்
ிய எல்
யாசீன
ுவம்
ா அஞ்
ன் மிக
ிளங்கி

யது. அடுத்தடுத்து அணு ஆயுத, ஏவுகணை சோதனைகளை நடத்தியதால் வடகொரியா மீது ஐ.நா. சபை கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்த பொருளாதாரத் தடைகளை சீனா நடைமுறைப்படுத்தியதால் வடகொரியா பொருளாதாரரீதியாக பெரும் பின்னடைவைச் சந்தித்தது. அதன்பிறகே அமைதி பேச்சுக்கு வடகொரியா இறங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# அனைத்தும் தயார் நிலை

## சிங்கப்பூரின் அயலுறவு அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன் கருத்து

சிங்கப்பூர், ஜூன் 11


"அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இடையிலான சந்திப்பு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயார்நிலையில் உள்ளன" என்று தெரிவித்தார் சிங்கப்பூரின் அயலுறவுத்துறை அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணன்.

சிங்கப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



"அதிபர்கள் ட்ரம்ப் - கிம் சந்திப்புக்கான எல்லா ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இந்தச் சந்திப்பில் நல்லதொரு முடிவு கிட்டும் என்று நம்புகிறோம். அதேநேரத்தில் ஒரே சந்திப்பில் கொரிய தீபகற்பத்தில் நிலவும் எல்லா சிக்கல்களும் அவிழ்ந்துவிடும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்தச் சந்திப்புக்காக நாங்களாக யாரையும் அழைக்கவில்லை. முதலில் அவர்கள்தான் எங்களைத் தொடர்பு கொண்டார்கள். முதலில் அமெரிக்காதான் எங்களைத் தொடர்பு கொண்டது. சிங்கப்பூர்தான் சிறந்த இடம் என்று அமெரிக்காவும் வடகொரியாவும் முடிவு செய்துள்ளன. இதற்காக சிங்கப்பூர் மக்கள் பெருமை கொள்ள வேண்டும்.

நாங்கள் நடுநிலையானவர்கள், நம்பிக்கையானவர்கள். எமது நாடு பாதுகாப்பான நாடு என்பதால் சிங்கப்பூரை அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். நாங்களும் உலக அமைதிக்காக எங்கள் பங்கை செய்யத் தயாராக இருக்கிறோம். அதற்காக ட்ரம்ப் - கிம் சந்திப்புக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தையும் செய்துள்ளோம். அமெரிக்க அதிகாரிகளுடன் சிங்கப்பூர் அதிகாரிகள் இணைந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்" என்று பாலகிருஸ்ணன் மேலும் தெரிவித்தார். (ம)



செவ்வாயில் உயிரினங்கள் உள்ளன என்பதை கிட்டத்தட்ட உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது என்று அமெரிக்க ஆய்வு மையமான நாசா அறிவித்தது. கியூரியாசிட்டி என்ற விண்கலம் செவ்வாயில் நகர்ந்துசென்று ஆய்வில் ஈடுபட்டு வருகிறது. இந்த விண்கலம் எடுத்து அனுப்பிய ஒளிப்படங்கள், தரவுகளை வைத்தே இவ்வாறு தெரிவித்தது நாசா. (ம)

# காணியின் அழைப்பை ஏற்றது தலிபான்

காபூல், ஜூன் 11

ஆப்கானிஸ்தான் அதிபர் அஸ்ரப் கானியின் போர் நிறுத்த அழைப்பை தலிபான் அமைப்பு ஏற்றது.

"ரமழான் கொண்டாடப்படும் தினத்துக்கு முன்னதாக 5 நாள்கள் தலிபான்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் உள்நாட்டு போர் நிறுத்தப்படுகிறது. இந்தப் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க தலிபான்களை அழைக்கிறேன். மேலும், வன்முறை மற்றும் போரினால் மக்களின் மனதை வெல்ல முடியாது. மாறாக பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவது மக்களிடம் இருந்து தலிபான்களை இன்னும் அந்நியப்படுத்தவே செய்யும் என்பதை தலிபான் அமைப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு, இந்த தற்காலிக போர் நிறுத்தம் அவர்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பாகும்" என்று தெரிவித்து தற்காலிக போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தார் கானி. இந்த அழைப்பை ஏற்றுள்ள தலிபான் அமைப்பு 5 நாள்கள் அல்லாமல் 3 நாள்கள் மட்டுமே போர் நிறுத்தம் செய்யப்படும் என்று அறிவித்தது. (ம)




# துக்காக கூடுகிறது ஐ.நா. பாதுகாப்புச் சபை



டெல்அவிவ், ஜூன் 11

இஸ்ரேல் பலஸ்தீன எல்லைப் பகுதியான காசாவில் பலஸ்தீனர்கள் பலர் நாளுக்குநாள் கொன்று குவிக்கப்பட்டுவரும் நிலையில், இது தொடர்பில் விவாதிப்பதற்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நாளை மறுதினம் கூடவுள்ளது.

1967ஆம் ஆண்டுவரை ஜோர்டான் வசமிருந்த கிழக்கு ஜெருசலேம் நகரை கைப்பற்றிய இஸ்ரேல் அரசு கடந்த 1980ஆம் ஆண்டில் இந்த நகரை தங்கள் நாட்டுடன் இணைத்து கொண்டது. ஜெருசலேம் நகரில் யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள் நிறைந்துள்ளதால் மூன்று மதத்தினரும் இந்த நகரை தங்களுக்கே உரிமையாக்கிக் கொள்ள முயன்று வருகின்றனர். கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் மற்றும் யூதர்கள் சொந்தம் கொண்டாடிவரும் ஜெருசலேம் நகரின் கிழக்கு பகுதியில் சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் பலஸ்தீனர்கள் வசித்து வருகின்றனர். இந்தப் பகுதியில் இஸ்ரேல் அரசு அத்துமீறலாக அமைத்த வசிப்பிடங்களில் சுமார் 2 லட்சம் யூத இனத்தவர்கள் வாழ்கின்றனர்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான காஸா என்ற பகுதியை கைப்பற்றியுள்ள ஹமாஸ் போராளிகள், ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் பிடியில் இருந்து மீட்பதற்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இஸ்ரேலுக்கான தனது தூதரகத்தை ஜெருசலேமில் அண்மையில் நிறுவியது அமெரிக்கா. இதையடுத்து ஹமாஸ்-இஸ்ரேல் இடையிலான மோதல் மேலும் வலுப்பெற்றுள்ளது. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து பலஸ்தீனப் பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த மார்ச் மாதத்தில் இருந்து தொடர்ச்சியான போராட்டத்தில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதுவரையில் சுமார் 130 பலஸ்தீனர்கள் இஸ்ரேல் படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் விவாதிப்பதற்காக நாளைமறுதினம் ஐ.நா. பாதுகாப்புச் சபை கூடவுள்ளது. இஸ்ரேலுக்கு எல்லையற்ற ஆதரவை வழங்கி வரும் அமெரிக்காவிடம் வீட்டோ அதிகாரம் உள்ளது. இந்த அதிகாரத்தால் இஸ்ரேலுக்கு எவ்வித ஆபத்தும் இல்லாமல் அமெரிக்கா காப்பாற்றும் என்று கருதப்படுகிறது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# மிகச் சிறந்த முன்னுதாரணம்

பாடசாலைகளில் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுகின்றது. மாணவர்களிடத்திலிருந்து புதிய நல்லதொரு அரசியல் கலாசாரம் மிளிர வேண்டும்என்றநோக்குடன்இதுமுன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பல பாடசாலைகளில் மாணவர் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

வவுனியாமாவட்டத்தின்கனகராயன்குளம் மகாவித்தியாலத்துக்கானமாணவர்நாடாளுமன்றத்தேர்தல் அண்மையில்நடைபெற்றிருந்தது. தரம் 6 இல்கல்விபயிலும் மாணவன் மாதுளனும், மாணவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தான்.

தரம் 6 இன் மூன்று பிரிவு வகுப்பறைகளுக்கும் தும்புத்தடியும், குப்பைக் கூடையும் வழங்குவேன் என்று தேர்தல் வாக்குறுதி வழங்கியிருந்தான். தேர்தலில் வெற்றி பெற்றதும், முதல்வேலையாக தான் வழங்கிய வாக்குறுதியை மாணவன் நிறைவேற்றியுள்ளான்.

தமிழர்களுக்கு அரசியல் ரீதியாக சிறந்த தலைமைத்துவம் இல்லை, தமிழ் அரசியல்வாதிகள் தாங்கள் வழங்கும் வாக்குறுதிகளிலிருந்து வழுவுவதையே வாழ்க்கையாகக் கொண்டிருக்கின்றார்கள் என்று பலமான குற்றச்சாட்டுக்கள் சரளமாக எழுப்பப்பட்டு வருகின்றன.

அகிம்சையாக முகிழ்ந்த போராட்டத்தில், மிதவாதத் தலைவர்கள்தங்கள்பதவி இருப்புக்காக வாக்குவங்கிக்காக இளைஞர்களை உசுப்பேத்தி அவர்களை ஆயுதங்கள் தூக்க வைத்தார்கள். இளையோர் கொள்கைப் பிடிப்போடு இலட்சியவெறியோடு போராடியபோது, அவர்களைக் கைவிட்டு, வழங்கிய வாக்குறுதிகளை மறந்து போயினர்.

காலம்காலமாக தமிழ் அரசியல் தலைமைகளினதும், தமிழ் அரசியல்வாதிகளினதும் போக்குகள் இவ்வாறு இருப்பதனால்தான் இன்னமும் விடிவு கிடைக்காத இனமாக தமிழினம் அழுதுகொண்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழலில், தேர்தல்வாக்குறுதி என்பது வெறுமனே வாக்குகளைக் கவர்வதற்கான உத்திதான்என்று இருக்கின்ற நிலைமையில், அதையும்தாண்டி 11 வயது மாணவன் அதை நிறைவேற்றிக் காண்பித்து, நல்லதொரு முன்னுதாரணத்தை வழங்கியிருக்கின்றான்.

தமிழ் அரசியல்வாதிகள் அந்த மாணவனிடம் பாடம் கற்கவேண்டும். தமிழ்அரசியல்வாதிகளையும்தாண்டி, ஆட்சிக்கு வருவதற்காக, தமிழ் மக்களின் வாக்குளை அள்ளுவதற்காக, வாக்குறுதிகளை அள்ளிவீசிய நல்லாட்சி அரசுக்கும், 11 வயது மாணவனின் செயற்பாடு நல்லதொரு பாடம்தான்.

இளையோர், பாடசாலை மாணவர்கள்போதைக்கு அடிமையாகிச்சீரழிந்து கொண்டிருக்கின்றனர்என்று குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாகச் சுமத்தப்பட்டு வருகின்றது. அந்தச்சமுதாயத்தின்எதிர்காலம்எப்படி அமையப் போகின்றதுஎன்றுஎண்ணிதலையைப்பிய்க்கும்இந்தச் சூழலில், வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் மனப்பாங்குகொண்ட மாணவர் நாடாளுமன்ற பிரதிநிதிகளும் வளர்ந்து வருகின்றார்கள் என்பது ஆறுதலான செய்தியே.

இளம் சமூகத்தின் பிறழ்வான நடத்தைகளை மாத்திரம் வெறுமனே விமர்சித்துக் கொண்டிருக்காமல், அவர்களின் ஆக்கபூர்வமான, மூத்தோருக்கேவழிகாட்டுகின்ற செயல்களையும்பாராட்ட வேண்டியது அவசியமாகும். பாராட்டுக்கள் நிச்சயம் மாணவர் சமூகத்தின் மனதில் மாற்றங்களையும் உருவாக்கும்.

வழங்கிய வாக்குறுதிகளைநிறைவேற்றும்நல்லதொரு பிரதிநிதிகள் எதிர்காலத்தில் தமிழர் அரசியலுக்கு வர வேண்டும். தம்மால் எது முடியுமோ அதை வாக்குறுதிகளாக வழங்கும்தலைவர்கள் வரவேண்டும். 11வயது மாணவனின் செயற்பாடு, எதிர்காலத்தில் தமிழர் அரசியல் அவ்வாறான பிரதிநிதிகளை, தலைவர்களை பெற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையை விதைக்கின்றது.



# வடக்கு – கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்களில் இனியும் தாமதம் வேண்டாம்

சேரலாதன்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்காக அரச தலைவர் தலைமையில் சிறப்புச் செயலணியொன்று அமைக்கப்பட்ட விடயம் வரவேற்கத்தக்கதாகும்.

### அபிவிருத்திக்கான சிறப்புச் செயலணியில் கூட்டமைப்பினர் விலக்கப்பட்டமை ஏன்?

போர் காரணமாகப் பெரும் அழிவுகளைச் சந்தித்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இன்னமும் முழுமையான அபிவிருத்தியைக் காணாத நிலையிலேயே காணப்படுகின்றன. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது இந்த இரண்டு மாகாணங்களும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. இவற்றை அபிவிருத்தி செய்வதற்கு அரசுக்கு இப்போதாவது மனம் வந்தமை பாராட்டத்தக்கது. ஆனால் அபிவிருத்திக்கென அமைக்கப்பட்ட சிறப்புச் செயலணியில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் அங்கம் வகிக்கின்ற பிரதேசங்க ளில் வாழ்கின்ற மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள். அந்தப் பிரதேசங்களின் தேவைகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பாகக் குரல் கொடுக்கின்ற கடமையும், அதன் சார்பான உரிமையும் இவர்களுக்கே உள்ளது. நாடாளுமன்றத்தில் இவர்களின் குரல்களே ஒலிக்கின்றன. அரச தலைவருடனோ அல்லது தலைமை அமைச்சர்களுடனோ தமது மக்களின் தேவைகள், குறைபாடுகள் என்பன தொடர்பாக நேரடியாகப் பேசுவதற்கான வல்லமையும் இவர்களிடமே உள்ளது.

இந்த நிலையில் தமது பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாக அமைக்கப்பட்ட செயலணியில் அவர்களுக்கு இடம் வழங்காது புறக்கணித்துள்ளதை ஏற்றுக் கொள்வதற்கு முடியவில்லை. இதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்த சிறப்புச் செயலணியில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் என்ற வகையில் அவருக்கு இடம்வழங்கப்பட்டுள்ளமை ஆச்சரியமான ஒன்றல்ல. ஆனால் அவர் மத்திய அரசுடன் நடந்து கொள்கின்ற விதத்தை வைத்துப் பார்க்கையில் அவரது செயற்பாடுகள் செயலணிக்கு உபயோகமானதாக இருக்குமா? என்பதைச் சொல்லத் தேவையில்லை.

### விஜயகலா மகேஸ்வரனின் புறக்கணிப்பும் தவறானதே

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பிரதியமைச்சரான விஜயகலா மகேஸ்வரனும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை போன்று செயலணியிலிருந்து புறமொதுக்கப்பட்டமை நல்லதாகத் தெரியவில்லை. வடக்கைப் பொறுத்தவரையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள தமிழ் அமைச்சர்கள் எவருமே நியமிக்கப்படவில்லை. விஜயகலா மட்டுமே தமிழ் பிரதியமைச்சராகப் பதவி வகிக்கின்றார். இவர் வடக்கின் அபிவிருத்தி தொடர்பாக அக்கறையுடன் செயற்படுவதையும் காண முடிகின்றது. இந்த நிலையில் இந்தச் சிறப்புச் செயலணியில் அவரையுமொரு உறுப்பினராக நியமித்திருக்க வேண்டும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்வதும், புதிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகத் திட்டங்களை வகுத்துச் செயற்படுவதும் இந்த சிறப்புச் செயலணியின் நோக்கங்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அமைச்சர்கள் சிலரும், அரச உயரதிகாரிகளும் செயலணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

> இந்த நாட்டைப் பொறுத்த வரையில் ஊழல் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. ஊழல் புகாத இடமே இல்லையெனும் அளவுக்கு நிலமை இங்கு மோசமான கட்டத்தை எட்டி நிற்கின்றது. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பகுதி களான வடக்குக் கிழக்கின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும்போது அவை நேர்மையாக இடம்பெறுகின்றனவா என்பதைக் கண்காணித்தல் மிகவும் அவசியமானதொரு கடமையாகும்.

### ஊழல் இடம்பெற வாய்ப்பு

இந்த நாட்டைப் பொறுத்த வரையில் ஊழல் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. ஊழல் புகாத இடமே இல்லையெனும் அளவுக்கு நிலமை இங்கு மோசமான கட்டத்தை எட்டி நிற்கின்றது. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு- கிழக்கின் அபி விருத்திப் பணிகளை மேற்கொள்ளும்போது அவை நேர்மையாக இடம்பெறுகின்றனவா என்பதைக் கண்காணித்தல் மிகவும் அவசியமானதொரு கடமையாகும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் இந்தப் பணிகளை மேற்கொள்ள முடியும். இது தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் உடனடியாக அரச தலைவருடன் தொடர்பு கொண்டு உரிய தீர்வைப் பெற வேண்டும்.

வடக்கு- கிழக்கின் அபிவிருத்தி என்பது சாதாரணமானதொரு விடயமல்ல. போர் காரணமாகச் சில இடங்கள் முற்றாகவே சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. இங்கு புதிதாகவே அனைத்தையும் அமைக்க வேண்டியுள்ளது. யாழ். நகரை பொறுத்த வரையில் புதியதொரு வடிவில் சகல தேவைகளையும் உள்ளடக்கியுள்ளதாக நகரை மீள்கட்டுமானம் செய்ய வேண்டியுள்ளது. யாழ். போதனா மருத்துவமனையை விஸ்தரிக்க வேண்டுமோனால் நிலம் கிடைக்காததொரு நிலை தோன்றியுள்ளது. இதற்கு மாற்று வழியொன்றைக் கண்டுபிடித்து நோயாளர்களின் வசதிக்கு ஏற்றவாறு மருத்துவ மனையின் அபிவிருத்திப் பணிகள் இடம் பெற வேண்டும். இதை விட பல வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இவை உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும். மேலும் வடக்குக் கிழக்கில் வீடுகளை இழந்த நிலையில் பலர் அல்லல்படுகின்றனர். இவர்களின்தேவை உடனடியாகநிறைவேற்றி வைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு ஏராளமான அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. வழக்கம் போல வெறும் பெயருக்கு மட்டுமே அறிவிப்புக்களை விடுத்துவிட்டுச் சென்றுவிடாது. வடக்கு-கிழக்கின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக அக்கறையுடன் செயற்பட வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது. அத்துடன் இந்தப் பணிகளில் ஊழல் இடம்பெறுவதையும் அனுமதிக்கக்கூடாது.

# உலகைச்சூழ்ந்திருக்கும் போர் மேகம் கலையுமா?

இந்துமதி

மூன்றாவது உலகப்போருக்கு உலகம் தயாராகி வருவதாக எண்ணத்தோன்றுகின்றது. மத்திய கிழக்கில் சிரியாவை மையமாக வைத்து வல்லரசுகள் மோதல் போக்கைக் கடைப்பிடிப்பதால் போர் அச்சம் மேலும் அதிகரித்துள்ளது.



**உலக அமைதி கேள்விக்குறியில்**

வல்லரசுகள் தமது வசதிக்கு ஏற்ற வகையில் கொள்கைகள் வகுத்துச் செயற்படுவதால் உலகின் சமாதானம் மெல்ல மெல்ல அருகி வருவதைக் காண முடிகின்றது. சிரியா எதைச் செய்தாலும் அதை நியாயப்படுத்தும் வகையிலேயே ரஷ்யா நடந்து கொள்கின்றது. அரசுக்கு எதிரான கிளர்ச்சிப் படைகளை அழிப்பதென்ற போர்வையில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்து வருகின்றது. அது மட்டுமல்லாது சிரியப் படைகளால் ஏதுமறியாத அப்பாவி மக்களும், பச்சிளம் பாலகர்களும் கோரமான முறையில் கொல்லப்படுவதையும் நியாயப்படுத்தி வருகின்றது. அண்மையில் சிரியப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட இராசயன ஆயுத்த் தாக்குதலில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டுள்ளமை உலகம் முழுவதிலும் பேரதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. அமெரிக்கா இதற்குக் கடுமையான கண்டனத்தை வெளியிட்டதுடன் சிரியா மீது தாக்குதலை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தது. இதற்கு ஏற்றாற் போன்று பிரிட்டன் மற்றும் பிரான்ஸுடன் இணைந்து தாக்குதலை நடத்தி முடித்தது. சிரியா மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்த ரஷ்யா ஐ.நா சபையில் இந்த விவகாரத்தை உடனடியாக விவாதிக்கும்மாறு கோரிக்கை விட்டது. ஐ.நா சபையும் உடனடியாகக் கூடி தாக்குதலுக்குக் கண்டனம் வெளியிட்டது. இதுவும் இதற்கு முன்னான, பின்னரான பதற்றங்களும் உலகத்துக்கு ஆரோக்கியமானதாக இல்லை.

**அணுவாயுத அச்சம்**



முன்றாவது உலகப் போர் ஆரம்பித்துவிட்டால் அது அணுவாயுதப் போராகவே அமையும் என்பதை உறுதியாகக் கூறிவிட முடியும். வல்லரசு நாடுகளிடமும் அணுவாயுதங்கள் காணப்படுகின்றன. பாகிஸ்தான், ஈரான், வடகொரியா ஆகிய நாடுகள் ஆபத்தானவை என்பதால் அவற்றிடம் அணுவாயுதங்களும் அவற்றுக்கான தொழில் நுட்பமும் உள்ளமை உலகின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறிவிட்டது. இரண்டாவது உலகப் போரின் தாக்கம் இன்றும்கூட சில நாடுகளில் உணரப்படுகின்றது. ஜேர்மனியின் சர்வாதிகரி அடொல்ப் ஹிட்லர் இந்த உலகம் முழுவதையும் தனது காலடியில் வைத்திருக்க விரும்பினார். ஆரம்பத்தில் எல்லாமே அவருக்குச் சாதகமாக அமைந்துவிட்டது. சில நாடுககளை அவரால் அடிமைப்படுத்த முடிந்தது. ஆனால் ரஷ்யா மீதான அவரது படையெடுப்பு அவருக்கே உலை வைத்துவிட்டது. ஜப்பான் நாடும் பிற நாடுகளை ஆக்கிரமிக்கின்ற நோக்கத்தைக் கொண்டிருந்தது. அந்த நாட்டுப் படைகள் புரிந்த அட்டூழியம் மிகக் கொடுமையானவை. தமக்குப் பிடிக்காத நாடுகளைக் குண்டு வீசித் தாக்குவதில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். இலங்கையின் தலைநகரும் இவ்வாறு குண்டுவீசித் தாக்கப்பட்டது. அமெரிக்கா மீது தாக்குதலைத் தொடுக்க முனைந்தமை அந்த நாட்டுக்குப் பேரழிவை ஏற்படுத்திவிட்டது. அமெரிக்கா வீசிய இரண்டு அணு குண்டுகள் ஜப்பானின் ஆணவத்தைத் தகர்த்து விட்டன. போரே வேண்டாமென ஜப்பானை ஒதுங்கியிருக்கவும் செய்துவிட்டன. ஆயுத விற்பனை இன்று மிகப் பெரிய வியாபாரமாக மாறிவிட்டது. வல்லரசு நாடுகள் மட்டுமல்லாது சிறிய நாடுகளும் ஆயுதங்களை உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்டு அதிக இலாபத்தைச் சம்பாதிக்கின்றன. வறிய நாடுகள் கூட ஆயுதங்களைப் போட்டிபோட்டுக் கொண்டு வாங்கிக் குவிக்கின்றன. சில பெரிய ஆயுத உற்பத்தி நாடுகள் தாம் உற்பத்தி செய்யும் ஆயுதங்களை விற்பதற் கென்றே பிறநாடுகளில் போரைத் தூண்டி வருவதையும் காண முடிகின்றது. சில நாடுகளின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வராமைக்கு இதுவுமொரு முதன்மைக் காரணமாகும்.

> உலகப் போர் ஒன்று மூண்டுவிட்டால் இந்த உலகில் எதுவுமே எஞ்சியிருக்கப் போவதில்லை. அந்த அளவுக்கு அணுவாயுதங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. வல்லரசு நாடுகள் தமது வரட்டுக் கொள்கைகளைக் கைவிட்டு உலக அமைதிக்காகப் பாடுபட வேண்டும். ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்கள் மூலமாக அவற்றை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இந்த உலகம் வாழ்வதா? அல்லது சாவதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் நாம் நிற்கின்றோம்.

**ஆசியாவும் விதிவிலக்கல்ல**

உலகில் மிகப்பெரிய மக்கள் தொகையைக் கொண்ட சீனா தனது பாதுகாப்புச் செலவினத்தை ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றது. உலகிலேயே மிக அதிக எண்ணிக்கையானவர்களைக் கொண்ட நாடு சீனா என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால் அதிக மக்கள் தொகைய்யையும், வறிய மக்களையும் கொண்ட இந்தியாவும் தனது பாதுகாப்புக்கென அதிக நிதியைச் செலவிட்டு வருகின்றது. இவ்வாறுதான் ஒவ்வொரு நாடும் தமது எதிரிகளின் பலத்துக்கு ஏற்ப தம்மையும் ஆயுத ரீதியில் பலப்படுத்தி வருகின்றன.

உலகப் போர் ஒன்று மூண்டுவிட்டால் இந்த உலகில் எதுவுமே எஞ்சியிருக்கப் போவதில்லை. அந்த அளவுக்கு அணுவாயுதங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. வல்லரசு நாடுகள் தமது வரட்டுக் கொள்கைகளைக்கைவிட்டு உலக அமைதிக்காகப் பாடுபட வேண்டும். ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்கள் மூலமாக அவற்றை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இந்த உலகம் வாழ்வதா? அல்லது சாவதா? என்பதைத் தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் நாம் நிற்கின்றோம். உலக அமைதியை ஏற்படுத்துவதில் ஏற்படுகின்ற தாமதம் உலகின் இறுதிப் பயணத்தைத் துரிதமாக்கிவிடும் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

## ஆசிரியருக்கான கடிதம்

# உயிரினங்களின் இருப்பை உறுதிப்படுத்த முன்வருவோம்

கடந்த ஐந்தாம் திகதி உலக சுற்றுச் சூழல் தினம். இந்தத் தினத்தை முன்னிட்டு பன்னாட்டு அமைப்புக்கள் பலவும் பற்பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டிருந்தன. பெரும்பாலான அமைப்புக்களின் செயற்பாடுகள் கடல்சார் திட்டங்களாக அமைந்திருந்தன. அனைத்தும் பாராட்டப்பட வேண்டியவை.

அன்றைய தினமே பன்னாட்டு அலைவரிசையான 'நேசனல் ஜோக்கிரபி' சில ஒளிப் படங்களை வெளியிட்டிருந்தது. கடல்சார் உயிரினங்களின் வாழ்வும், அதன் இருப்பும் மனிதர்களின் காட்டுமிராண்டித்தனமான போக்குகளாலும், செயற்பாடுகளாலும் படிப்படியாக அழிந்து செல்கிறது என்பதை துல்லியத் தன்மையுடன் புடம்போட்டு காட்டுபவையாக அந்தப் படங்கள் அமைந்திருந்தன.

அவற்றில் கொக்கு ஒன்றின் ஒளிப்படம் என்னை வெகுவாகக் கவர்ந்தது. அந்தக் கொக்கின் உடற்பகுதி முழுவதும் பொலுத்தீன் பையொன்றால் மூடப்பட்டு அது உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தருணத்தில் அந்தப் படம் எடுக்கப்பட்டிருந்தது. ஒளிப்படத்தை எடுத்திருந்த கலைஞர் பொலித்தீன் பையை முறைப்படி அகற்றி கொக்கு அது தொடர்ந்து உயிர்வாழ வழியமைத்துக் கொடுத்தார் என்பது சிறு ஆறுதல் தரும் செய்தி.

இந்தக் கொக்குக்கு ஏற்பட்ட நிலை அவ்வளவு இலகுவில் விட்டுவிட்டுச் சென்றுவிடக் கூடிய விடயம் அல்ல. இது இமாலயப் பிரச்சினை. மனித சமூகத்தின் அன்றாடப் பொலுத்தீன் கழிவுகள் ஒவ்வொரு உயிரினங்களின் உயிர்வாழும் உரிமையைப் பறித்துக் கொண்டிருக்கின்றன என்பதை உணருவோம். இயலுமான வரையில் அவற்றை சுதந்திரமாக வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுப்போம். இல்லாவிடில் எமக்கும் ஐந்தறிவு பிராணிகளுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும். எம் ஒவ்வொருவருக்கும் இது விடயத்தில் காத்திரமான பொறுப்புண்டு என்பது மறுக்க முடியாதது.

லயனல்.



# கல்வியில் நிதி மூலங்களின் பங்கீடும் மனிதவள முதலீடும்

அ. அக்னஸ் நிமாலினி




மனிதவளங்களின் பொருத்தமான தெரிவும் அவை கொண்டுள்ள வினைத்திறனான செயலாற்றுகையும் சிறந்த அபிவிருத்தியை தரும். அந்தவகையிலே மனிதவள அபிவிருத்தியில் உணவு,உள.மருத்துவவசதிஎன்பனவற்றோடு கல்வி என்ற அறிவுநிலை மேம்பாட்டின் அபிவிருத்தியும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கல்வியறிவுடையோரின் பங்களிப்பு எப்போதுமே அதிக பயனைத்தரும். இதனை 'எச்சவிளைவு' என ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றனர். கல்வியில் முதலீடு செய்கின்ற ஆற்றல் அதிகரிக்கும் போது, மனிதவளம் அபிவிருத்தியடையும். அதன்வழி பொருளாதார அபிவிருத்தி மட்டம் உயர்நிலையை அடைந்து பொருளாதார உறுதித்தன்மை அதிகரிக்கும்.

### கல்வியில் முதலீடு தரும் அனுகூலங்கள்

அரசு கல்வியில் முதலீடு செய்ய வேண்டியது அவசியம். எமது நாட்டை பொறுத்தவரையிலும் முழுமையான அரச முதலீட்டுகள் காணப்படுகின்றன. அதன்படி அரசு பாடசாலைக் கல்வியிலும், பொதுக்கல்வியிலும், உயர்கல்வியிலும் அதிகம் செலவு செய்கின்றது. இதனூடே அதிகரித்த அனுகூலங்கள் கிடைக்கப்பெறுகின்றன. குறிப்பாக பின்வரும் அடைவுகளை கண்டுகொள்ள முடிகிறது.

- ஒரு நாட்டின் குழந்தைகள் வினைத்திறன் மிக்க வளமாக மாற்றப்படுகின்றார்கள். இதன் மூலம் தேசிய மனிதவள அபிவிருத்தி ஏற்படுகின்றது.
- சமூக ரீதியான நேர்கோட்டிலமைந்த அசைவியக்கத்தையும் அவைசார்ந்த சமூக மாறுதல்களையும் உருவாக்குகின்றது.
- ஆரம்பக் கல்வியில் முதலீடு செய்வதால் அதிகமான பொருளாதாரப் பயன்பாடுகள் கிடைக்கப்பெறுகிறது. உற்பத்தித் துறைகளில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் அதிக பங்களிப்பை வழங்குகின்றது.
- ஒரு நாட்டின் விஞ்ஞானம், தொழில்நுட்பம், புத்தாக்கம் போன்ற துறைகளை முன்னேற்றுவதில் கல்வி ஆதாரம் மிக்க வலுவான பயன்தரு சாதனமாக விளங்குகிறது. மூன்றாம் நிலைக் கல்வி தரமாக வழங்கப்படுமிடத்து இவ்வகை சார்ந்த முன்னேற்றங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- ஒரு நாட்டின் சிறந்த குடிமக்களின் பண்புகள் விருத்தி செய்யப்படுகின்றன. அத்துடன் விழுமியங்கள், பண்பாடு, சிறந்த நடத்தைக்கோலங்களை உடைய குடிமக்கள் உருவாக்கப்படுவர்.

ஆம், இவ்வாறான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசு கல்வியில் அதிகரித்த நிதியைச் செலவிடுகின்றபோது, அது நாட்டின் முதலீடாக பரிணாமம் கொள்கின்றது.

அடுத்து குடும்பங்கள் அல்லது பெற்றோர், சமூகநிறுவனங்கள், அரசு, பன்னாட்டு நிதி நிறுவனங்கள் என்பனவும் கல்வியில் முதலீடுகளை மேற்கொள்கின்றனர். குடும்பங்களின் முதலீடுகள் இங்கு முதன்மையாக நோக்கப்பட வேண்டும். தமது குழந்தைகளைப் பொருளாதார வளம் மிக்க மனிதவளமாக மாற்றுவதற்கு ஊட்டம், நலத்துறை என்பனவற்றோடு கல்வி அறிவையும் வழங்க பாடுபடுகின்றன்ர். போதுமான தரமான கல்வியைப் பெறும்போது பிள்ளைகள் சிறந்த மனிதவள முதலீடாக வளர்ச்சி காண்கின்றனர்.

இந்த சந்தர்ப்பத்திலே 'சுல்ட்சின்' மனிதவளக்கோட்பாடு கல்வியில் முதலீடு செய்வதன் முக்கியத்துவத்தை வற்புறுத்தியுள்ள தன்மைகள் நோக்குதற்குரியது. பலநாடுகளில் ஊழியர் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், தனிநபர் வருவாயை உயர்த்தவும் கல்வி முதலீடுகள் பொறுப்பாக இருந்தன. தென்கொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு அந்த நாடுகள் மேற்கொண்ட பெருந்தொகை முதலீடுகளும் முக்கிய காரணமாக அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகள் கல்விச் செய்பாடுகளில் அதிகளவு நிதியை முதலீடு செய்கின்ற போதும், பொருளாதார வளர்ச்சிக்கு போதியளவு பங்களிப்பை வழங்காமல் தொழில் வாய்ப்புடன் இணைக்கப்படாத கல்விக் கொள்கை மீதான முதலீடுகளாக அவை அமைந்துள்ளமை கவலை தரும் விடயமாக காணப்படுகிறது.

### கல்வியில் முதலீடு தரும் அபிவிருத்தி சார் மேம்பாடு

கல்வியில் முதலீடானது பின்வரும் அபிவிருத்தி சார் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது.

- மக்களின் வறுமை மட்டத்தைக் குறைக்கின்றது.
- வருமானப் பங்கீட்டை மேம்படுத்துகின்றது.
- குடிப் பெருக்க வீதத்தைக் குறைக்க உதவுகின்றது.
- ஜனநாயகக் கடமைகளை உணர்ந்து அதன்படி செயற்பட வழிகாட்டுகின்றது.
- தொழில் முறையை மாற்றுவதற்கு உதவுவதன் மூலம் சமூகரீதியான அசைவியக்கத்துக்கு ஊக்கமளிக்கின்றது.

இங்கு, கல்வியில் முதலீடு செய்தல் என்பது உடனடியான விளைவைத் தரமாட்டாது என்றாலும் நீண்டகால வரையறையில் அதன் சிறந்த பயனுள்ள விளைவைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. அந்த வகையில் கல்வியில் செலவிடும் நிதியானது ஒரு நாட்டின் மனிதவளமுதலீடாக தனிச்சிறப்பிடம் பெறுகிறது.

### கல்வியில் மனித வள முதலீடு – நியாயப்பாடுகள்

- கல்வி பொருளாதார ரீதியில் மனிதர்களின் உற்பத்தித் திறனை உயர்த்தவல்லது.
- பாடசாலை செல்லாத ஒருவரைவிட ஒழுங்குமுறையில் பாடசாலைக் கல்வி பெற்றவரின் தொழில்சார் அணுகுமுறை, தொழில் ஈடுபாடு, வினையாற்றல் என்பன சிறப்பாகக் காணப்படும்.
- உள்ளூர் மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பொருளாதார அபிவிருத்திக்குரிய மனிதவளத்தை விருத்தி செய்வதற்குரிய அடிப்படைப் பொறிமுறையாக கல்வி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- அபிவிருத்திக்கு மனிதவள அபிவிருத்தி முதன்மையானதாக அமையுமிடத்து, அதில் கல்வியின் பங்கு முக்கியத்துவமுடையது.
- கல்வியியலாளர்கள், உலக வங்கியின் அபிவிருத்தி அறிக்கைகள், வெளியீடுகள், ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கைகள் மற்றும் 'International Institute for Euducational Planning IIEP' வெளியீடுகள் எனப் பலவும் மனித வள அபிவிருத்தியில் கல்வியின் தொடர்பை வலியுறுத்தியுள்ளன.
- மனிதவளத்தைத் திட்டமிடுவதால் மாத்திரமே துரித பொருளாதார வளர்ச்சியையும் பொருளாதார உறுதிப்பாட்டையும் பேண முடியும். ஒரு நாட்டின் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்வதற்கு மற்றொரு நாட்டின் கல்வி கற்ற மனிதவளத்தை தங்குதடையின்றி இறக்குமதி செய்வது உலக பொருளாதார வளர்ச்சிக்கான புதிய ஒழுங்கு முறையாக வளர்ச்சி பெற்றுள்ளது.
- செல்வந்த நாடுகளின் உற்பத்தித் துறையில் விரிவடையும் தொழில் வாய்ப்புக்களைக் கைப்பற்றும் குறிக்கோளுடன் வளர்முக நாடுகளின் உயர்கல்வி நிறுவனங்கள் தமது பாடத்திட்டங்கள், கற்பித்தல் முறைகள், கற்றல் முறைகள், மதிப்பீட்டு நுட்பங்கள், இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் என்பவற்றை மாற்றியமைத்து வருகின்றன.

ஆகவே மனிதவளமானது கல்வியுடன் நெருங்கிய தொடர்புள்ளது. அதாவது மனித வளத் திட்டமிடல் என்பது கல்வித்திட்டமிடலுடன் ஒன்றிணைந்த வகையில் நடைமுறைப்படுத்தப்படும்போது, உள்நாட்டின் உற்பத்தித் துறையின் தேவைகளை மாத்திரமின்றி பன்னாட்டளவில் தொழில் வாய்ப்புக்களின் எதிர்பார்ப்புக்களையும் கவனத்திற் கொள்ளவேண்டியதும் அவசியமாகின்றது.

### கல்வி சார்ந்த முதலீட்டு விரயங்கள்

இருப்பினும் கல்விக்காகச் செலவழிக்கப்படுகின்ற நிதிமூலம் பயன் தரா நிலையும் காணப்படுகின்றது. இவை கல்வி விரயங்களாக நோக்கப்படுகின்றன. கல்வி சார்ந்த முதலீடுகள் பின்வரும் விரயங்களாக இருப்பதாக நம்பப்படுகின்றது.

- பெண்பிள்ளைகளில் முதலிடும் நிதிமூலம் கிடைக்கும் வருவாய்கள் பெற்றோருக்குக் கிடைக்காமை.
- வறிய குடும்பங்களிலுள்ள சிறார்களை வேலைக்கு அமர்த்துவதன் மூலம் அவர்களைக் கல்வி கற்க அனுமதிப்பதில்லை. செலவழிப்பதுமில்லை.
- மாணவர் இடைவிலகல்.
- மீளக்கற்றல், பலதடவைகள் பரீட்சைகளில் தோற்றுதல்.
- தாமதமாகப் பட்டதாரிகளுக்குத் தொழில் கிடைத்தல்.
- பட்டதாரிகளின் தொழிலின்மை, பட்டதாரிகளின் கீழமைப்பு.
- பட்டதாரிகள் சிறைகளில் இருத்தல்.
- கல்வி கற்றோரின் குற்றச் செயல்கள் அதிகரித்தல்.
- பட்டதாரிகள் ஈடுசெய் நிதி வழங்காமல் வெளிநாடு செல்லல்.
- பட்டதாரிகள் தொழில் பெறும்வரை அவர்களுக்குச் செலவிடப்பட்ட நலன்புரி மானியங்கள்.

இவ்வாறான கல்வி விரயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமானதாகின்றது. இவ்வகையான கல்வி விரயங்களைக் குறைத்து, கல்வியில் செலவிடப்படும் நிதியை மனிதவள முதலீடாக உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பது முக்கியமான விடயமாகின்றது.

### முடிவுரை

கல்வியில் முதலீடு செய்வதால் அதற்கேற்ற வருமானங்கள் கிடைக்கும் என்பது ஏற்கத்தக்கது. ஆயினும் ஏனைய முதலீடுகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருமானங்களை விடவும் வேறுபட்டதாகவே கல்வியிலான வருமானங்கள் அமைகின்றன. குறிப்பாக,

- கல்வி முதலீட்டுக்குரிய வருமானங்களை எளிதில் அளவிட முடியும்.
- கல்வியில் பணம் செலவிடும் போது ஒரு பொருள் கொள்வனவு செய்வது போல் உடனடியாக செலவு ஏற்படுவதில்லை. மாறாக நீண்ட காலப் பகுதியிலேயே இச் செலவு ஏற்படுகின்றது.
- கல்விச் செலவுக்குரிய நன்மை நீண்ட காலப்பயன்பாடுடையது. ஆனால்தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுவதால் அறிவும் திறனும் படிப்படியாக மேம்படுகின்றன. இவை தேய்மானத்துக்கு உட்படுவதில்லை என்பது இங்கு முக்கியமா னது.

ஆகவே கல்வி மட்டங்கள் வேறுபடுவது போலவருமானங்களும்வேறுபடும். கல்விக்கு அரசு செலவு செய்வதால் சமூகம் முழுமையாகப் பெறக்கூடிய பயன்கள் சமூக வருமானங்கள் எனப்படுகின்றன. சிறந்த கல்விக்காக அரசு செலவிடும்போது மக்கள் சிறந்த குடிமக்களுக்குரியதும், சிறந்த உழைப்பாளிக்குரியதுமான ஒழுங்கு, ஒழுக்கம், பழக்கம், நம்பிக்கை, ஈடுபாடு மற்றும் நடத்தை என்பவற்றைப் பெற்று செயற்படும் போது கல்விக்கான செலவு 'சமூக மூலதனம்' என்றழைக்கப்படுகிறது. அத்தகைய மூலதனம் அதிகரிக்கும் போது சமூக வருமானங்தளையும் அதிகரிக்க முடியும்.

நாட்டின் எல்லாத் தொழில் நிறுவனங்களும் தமது நிறுவனங்க்ளின் பணியாளருக்கு கல்விகற்க ஊக்கமளிப்பதோடு தொடர்ச்சியாக பல்வேறு புத்தாக்கப் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றன. இவற்றுக்காக பெருந்தொகையான நிதியையும் செலவிட்டு வருகின்றன. வினைத்திறனுடைய செயற்பாடுகளை கண்டடைவதற்கான கருவியாகக் கல்வி விளங்குகிறது. இதனால் நாட்டின் மொத்த உற்பத்தியை அதிகரிக்க முடிகின்றது. குடும்பங்களில் பெற்றோரும், சமூகங்களில் சமூக நிறுவனங்களும், தேசிய ரீதியாக அரசுகளும் கல்வியில் முதலிடுவதன் மூலம் மனித வளத்தையும் தொழிநுட்பங்களையும் மேம்படுத்தி பொருளாதார முன்னேற்றங்களையும் ஏற்படுத்த முடிகிறது.

ஆக, கல்வியில் செலவிடும் நிதியானது ஒரு நாட்டின் மனிதவள முதலீடாக மாற்றம் காண்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

---

**நாளை**

**12.06.2018**

செவ்வாய்க்கிழமை

**வைகாசி 29**

திதி: திரயோதசி காலை 06.10 வரை
நட்சத்திரம்: சதுர்த்தசி பி.இ. 04.22 வரை
சுபநேரம்: 10.22 – 11.52 வரை
ராகுகாலம்: 02.52 – 04.22 வரை

---

## தவமன்னா! உன்னருளைத் தா!

திட்டுகின்ற சொல்லீட்டி அயலான் நெஞ்சை
தீக்குள்ளே வேகவைக்கும்! மனித கூட்டம்!
எட்டுகின்ற பிறரன்பை மனங்கொள்ளாமல்
இம்மி கூட மதியாத நிலைதான்! மழை போல்
கொட்டுகின்ற விழிநீரே சாட்சி! சமூகக்
கொடுமைகளும் ஒழியாதோ! நெஞ்சக் கதவைத்
தட்டுகின்ற உன்போதம் ஒன்றே போதும்!
தவமன்னா! உன்னருளைத் தருவாய் ஐயா!

-மு.சிங்கராயர்





## அறிவித்தல்

**அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா**

நாளை (12.06.2018) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையும், அதனைத் தொடர்ந்து நற்கருணைத் திருவிழாவும் மறுநாள் 13.06.2018 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையோடு வழிபாடுகள் ஆரம்பமாகும்

இத் திருவிழாத் திருப்பலி **புதிதாக அமைக்கப்பட்ட ஆலய முன்றலில் யாழ் மறை மாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை** அவர்களால் ஒப்புக்கொடுக்கப்படும்.

இதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை புனித அந்தோனியார் ஆலய பக்கதர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**ஆலய நிர்வாகம்,**
**புனித அந்தோனியார் ஆலயம், அளம்பில்.**

---

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 814
சீட்டிழுப்பு திகதி 2018.06.09 சனிக்கிழமை

N 23 42 56 73

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 41,909,096/-

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

---

## பதவிவெற்றிடம்

**பயிற்சி ஆசிரியர்**

# கேக் ஜசிங் (Cake Icing)
# தையல் (Tailoring)
# ஆரி எம்பிராய்டரி (Aari Embroidery)
# சமையல் (Cooking)

ஆகிய பயிற்சி நெறிகளுக்கான பகுதி நேர ஆசிரியர்கள் தேவை.
தகைமையுடையோர் தொடர்பு கொள்ளவும் T.P: 0772288243

YICSD College
இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி சி.ரேவதி (B.A Hons)**

08.06.2018 வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக 33 ஆவது பட்டமளிப்பு விழாவில் B.A(Hons) பட்டம் பெற்ற **செல்வி சிற்றம்பலம் ரேவதியை** மனதார வாழ்த்துவதோடு மேலும் பல பட்டம் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

**அக்கா, அத்தான், கஜிஷனா**
**புகையிரதநிலைய வீதி, இணுவில் கிழக்கு.**

---

## மரண அறிவித்தல்

# சின்னத்தம்பி ஓங்காரவடிவேல்



**தோற்றம் 15.01.1949 — மறைவு 10.06.2018**

மலேசியாவை பிறப்பிடமாகவும் அரசடி வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது வைரவப்புளியங்குளம் வவுனியாவில் வசித்து வந்தவருமான சின்னத்தம்பி ஓங்காரவடிவேல் நேற்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கோட்டைக்காடு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், அம்பனை பன்னாலை தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயராணியின் (வவுனியா மெடிக்கல்ஸ், வவுனியா) பாசமிகு கணவரும், நாகரட்ணம்மா, காலஞ்சென்ற பேரின்ப நாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் விமலாதேவி, அருணாதேவி (வவுனியா மெடிக்கல்ஸ் வவுனியா), தர்மபூபதி, சிறிஸ்கந்தராசா, Dr.சிறிபவானந்தராசா (பிரதிப் பணிப்பாளர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பா ணம்), சிறிபாஸ்கரராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பத்மராசா, பத்மா ஆகியோரின் பாசமிகு மாமனும், அருளீசன், தராணி ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் 23/ 27, குளக்கட்டு வீதி, வைரவப்புளிங்குளம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வவுனியா தட்சநாதன் குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 23/ 27, குளக்கட்டு வீதி,**
**வைரவப்புளியங்குளம்,**
**வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்.**

---

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சுங்கத்திணைக்களத்துக்கு முன்பாகவும் யூனியன் கல்லூரி சந்தியிலிருந்து K.K.S றோட் பக்கமாக K.K.S வீதியில் இண்டு பரப்பும் அத்துடன் 15 அடி X 80 அடி நீளத் துண்டு கடைக்காணியுடன் கூடிய துண்டுகள் 10 உம் விற்பனைக்குண்டு.
(K.K.S றோட் முன்பக்கம் 200 அடி நீளமுள்ள காணி)

071 220 3568, 001 258 7570

---

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1988 இல் பிறந்த அத்தம் நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற France குடியுரிமையுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

Viber - 077 656 6109

---



## ஊறணி புனித அந்தோனியார் ஆலய பெருவிழா அழைப்பு

காங்கேசன்துறை ஊறணியில் குடிகொண்டிருக்கும் புனித அந்தோனியாரின் பெருவிழா மீள் குடியேற்றச் சூழலில் சொந்த இடத்தில் சிறப்பான முறையில் கொண்டாடத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

**➤ நற்கருணைப் பெருவிழா**

12.06.2018 பிற்பகல் 4.00 மணிக்கு புனிதரின் ஊரைச் சுற்றிய திருச் சொரூபப் பவனி இடம் பெற்று நிறைவில் நற்கருணைப் பெருவிழா நடை பெறும்.

**➤ புனிதரின் பெருவிழா**

13.06.2018 காலை 8.00 மணிக்கு திருவிழாத் திருப்பலி இடம்பெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
**பங்குத் தந்தையும்,**
**பங்கு மக்களும்,**
**ஊறணி புனித அந்தோனியார் ஆலயம்.**

(68629) (3.17)

---

## மரண அறிவித்தல்

### சிங்கராசா பாலசுப்பிரமணியம் (மணியம்)



**தோற்றம் 29.01.1949 — மறைவு 10.06.2018**

புத்தூர் மேற்கு புத்தூரை பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா பாலசுப்பிரமணியம் (மணியம்) நேற்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் சிங்கராசா இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், இராசதுரை நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரமலரின் (வதனி) பாசமிகு கணவரும், சதீஸ்குமார் (இத்தாலி), ராஜ்குமார் (லண்டன்), தாரணி (இலங்கை வங்கி உள்ள கணக்காய்வாளர்), கிருஸ்ணகுமார் (பேராதனை தேசிய கல்வியியல் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருணோதயன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்), சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2018) திங்கட்கிழமை மதியம் 11.00 மணிக்கு அவரின் "இராசபதி" இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடுவில் தெற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(cs.17384)

---

## மரண அறிவித்தல்



மண்ணில் 20 . 11 . 1958 — விண்ணில் 08 . 06 . 2018

### அருமைத்துரை பாலசுப்பிரமணியம் (மணியம்)

மயிலிட்டி தெற்கு, கட்டுவன் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா ஓயா சின்னக் குளத்தில் வசித்து வந்தவருமான அருமைத்துரை பாலசுப்பிரமணியம் (மணியம்) 08.06 2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருமைத்துரை அன்னலட்சுமி தம்பதியரின் அன்புபுதல்வனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், மகாராணி (ராசத்தி) யின் அன்புக் கணவரும், புவனபூபதி, இராசபூபதி, காலஞ்சென்ற பாலச்சந்திரன், புஸ்பராணி, இந்திராணி (ஜேர்மன்), பவளராணி, ரஜனி, (ஜேர்மன்), பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மயூரி, மயூரதன், சுமதி, சுகந்தி ஆகியோரின் அன்பு தந்தையும், பாலசிங்கம், சதீஸ்குமார், அருள்தாஸ், யாழினி ஆகியோரின் அன்பு மாமனும், திவாகரன், திவிஷன், திவ்வியா, அஜந்தன், அபிஷன், அக் ஷயன், அக் ஷயா, நிசாந்தினி, தீசானன் ஆகியோரின் அன்புப் பேரனும், தங்கராணி, செல்வராசா, தங்கராசா, செல்வராணி, சண்முகவடிவேல், ஆனந்தராசா, குகதாசன், கண்ணதாசன், காலஞ்சென்ற வசந்தி, கவிதாஸ் ஆகியோ ரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (11.06.2018) திங்கட்கிழமை மு.ப.11.00 - பி.ப. 2 .00 மணியளவில் அவரது இல்லத்தில் (இணுவில்) நடைபெற்று பூதவுடல் மருதனார்மடம் பூவோடை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ஜெயராசா ரஜனி**

0766973529

---

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு பஸ் டிப்போவுக்கு அருகில் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 305 8782, 076 697 2287

---

## விற்பனைக்கு

யாழ். பஸ் தரிப்பிடத்திற்கு பின்பக்கமாக மின்சாரநிலையவீதியில்(HNB) வங்கிக்கு அருகில் 10′ அகலம் 100′ நீளம் கொண்ட கடை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 723 2535

---

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

# உறங்கு நிலையில் இருக்கும் உடற்கல்வி கற்கைநெறியினை மீளவும் ஆரம்பியுங்கள்

பெருமதிப்பிற்குரிய கௌரவ தமிழ் பாராளுமன்ற உறுபினர்கள்
அனைவருக்கும் சிரம் தாழ்த் திய வணக்கங்கள்.

தமிழ் இனத்தின் பிரதிநிதிகளாக இலங்கை பாராளுமன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் தாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து யாழ் பல்கலைக்கழகத்தில் கடந்த ஐந்து வருடமாக உறங்கு நிலையில் இருக்கும் உடற்கல்வி கற்கைநெறியினை மீளவும் ஆரம்பிப்பதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் தமிழ் மாணவர்கள் வேகமாக முன்னேறிவரும் இன்றைய ஆரோக்கியமான நிலையினை தொடர்ச்சியாக தக்கவைப்பதற்கும், தமிழ் இனத்தின் தேசிய அடையாளத்திற்கு அடித்தளமான மொழி, கலை, கலாச்சார, விளையாட்டு விழுமியங்களை அழிய விடாது பாதுகாக்கும் உன்னத செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பும் தங்களிடமே உள்ளது.

இந்நிலையில் கடந்த ஐந்து வருடத்திற்கு மேலாக யாழ் பல்கலைக்கழகத்தில் தீர்க்கப்படாமல் இருக்கின்ற விடயம் ஒன்றினை தங்கள் அனைவரினதும் கவனத்திற்கு முன்வைக்க விரும்புகின்றோம். தமிழ் இனத்தின் பிரதிநிதிகளாக இலங்கை பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற நீங்கள் தமிழ் மாணவர்களின் நலன் கருதி இவ் விடயத்திற்கு உரிய தீர்வினை பெற்றுத்தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தொடர்கின்றோம்.

இடையறாத கல்வியும் தவறவிடப்படக்கூடாத பரீட்சைச்சித்தியுமே என்று விளங்குகின்ற யாழ்ப்பாண கல்விச்சூழலில் விளையாட்டின் ஊடாகவும் மாணவர்கள் உயர்கல்வியினை பெற்றுக்கொள்ளக் கூடியவாறு யாழ். பல்கலைக்கழகத்தில் 1998ம் ஆண்டு உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியினை முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆரம்பித்து வைத்திருந்தார்கள். அனைத்து மாணவர்களிற்கும் ஏதோ ஒருவகையில் பல்கலைக்கழகக் கல்வி சென்றடையவேண்டும் என்ற கொள்கையில் முன்னைநாள் துணைவேந்தர் பொன் பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இக்கற்கைநெறியானது இலங்கையிலேயே விளையாட்டுத்துறை உயர்கல்விக்காக பல்கலைக்கழக மட்டத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்ட முதலாவது கற்கைநெறியாகக் கருதப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தேவரஞ்சனி சிவாஸ்கரன் அவர்களுடைய ஒருங்கிணைப்பிலும் பன்முகப்படுத்தப்பட்ட சிறப்பான திட்டமிடலிலும், மருத்துவ பீட விரிவுரையாளர்கள், முகாமைத்துவபீட விரிவுரையாளர்கள், உடற்கல்வி விளையாட்டுத்துறை விரிவுரையாளர்கள், துறைசார் விளையாட்டு பயிற்றுனர்கள் ஆகியோர் இணைந்தவகையில் இக் கற்கைநெறியினை மிகச்சிறப்பாக முன்நகர்த்தி வந்தார்கள்.

1998ம் ஆண்டு ஆரம்பித்துவைக்கப்பட்ட இக்கற்கைநெறி 2013ம் ஆண்டு வரை பல நூற்றுக்கு மேற்பட்ட விளையாட்டு டிப்ளோமா பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. இவ் டிப்ளோமா பட்டதாரி மாணவர்களில் உயர்கல்வியினை பெற்றுக்கொண்ட பல மாணவர்கள் இலங்கை பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றிருக்கின்றார்கள். 95 விகிதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளில் உடற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றிருக்கின்றார்கள். இந் நியமனத்திற்குப் பின்னரே வடமாகாண விளையாட்டுத்துறையின் வளர்ச்சியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. தேசிய ரீதியாக போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. எதிர்பார்பிற்கு மிஞ்சிய பல புதிய சாதனைகள் தேசிய ரீதியாக பதிவுசெய்யப்பட்டன.

1998ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டிருந்த உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி துர்அதிஷ்டம் காரணமாக கடந்த ஐந்து வருடத்திற்கு மேலாக எவ்வித கற்பித்தல் செயற்பாடுகளும் இல்லாமல் உறங்கு நிலையில் இருக்கின்றது.

இக் கற்கைநெறியின் தொடர்ச்சியாக 2008ம் ஆண்டு ஆரம்பித்துவைக்கப்பட்ட உயர் டிப்ளோமா கற்கைநெறியும் ஒரு வருட செயற்பாட்டின் பின்னர் இடை நிறுத்தப்பட்டிருக்கின்றது.

இக் கற்கைநெறிக்காக உடற்கல்வித்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்ற மூன்று நிரந்தர விரிவுரையாளர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் நியமிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலும் அவர்களுடைய கல்வி அறிவு எம்மாணவர் சமுதாயத்திற்கு கிடைக்கமுடியாமல் இக் கற்கைநெறி தடைப்பட்டிருக்கின்றது.

கடந்த ஐந்து வருடத்திற்கு மேலாக எவ்வித கல்விச்செயற்பாடுகளும் இல்லாமல் உடற்கல்வி கற்கைநெறிக்காக நியமனம் பெற்றிருக்கின்ற இவர்களுடைய செயல்திறனும் பாதிக்கப்படுகின்றது.

ஆரம்பகாலங்களில் மாணவர்கள் செலுத்திய கல்விக்கட்டணங்களின் உதவியுடன் ஆரம்பித்துவைக்கப்பட்ட இக் கற்கைநெறிக்கு தற்போது ஐந்து வருடமாக உறங்கு நிலையில் இருக்கும் போது பெருமளவு அரசநிதி செலவுசெய்யப்படுகின்றது.

இக்கற்கைநெறியினை மீளவும் ஆரம்பிப்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பல தடவைகள் யாழ் பல்கலைக்கழகத்தினரிடம் கேட்கப்பட்டிருந்தும் இன்றுவரை உரிய தீர்வுகள் எவையும் எட்டப்படவில்லை. இக்கற்கைநெறியினை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்பட்டிருக்கின்ற தடைகள் தொடர்பாகவும் பல்கலைக்கழக சமூகத்தினர் தெளிவுபடுத்தவில்லை. உகந்ததான ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் இக் கற்கைநெறியின் பழைய மாணவர்களாகிய வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் சங்கத்தினர் எடுத்த நல்லெண்ண முயற்சிகளும் பலனளிக்கவில்லை.

பெருமதிப்பிற்குரிய கௌரவ தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களே!

யாழ் பல்கலைக்கழகத்தில் உடற்கல்விக்கான உயர்கல்வி தடைப்பட்டிருப்பதால் வடமாகாணத்தில் வியைாட்டுத்துறையில் சாதனைகள் படைத்த பல தமிழ் மாணவர்கள் தென் இலங்கைப் பல்கலைக் கழகங்களிற்கு உயர்கல்விக்காக செல்கின்றார்கள். இதனூடாக வடமாகாணத்தின் வளம் தென் இலங்கைக்கு கடத்தப்படுகின்றது. யாழ். பல்கலைக்கழகத்தினை பிரதிநிதித்துவப்படவேண்டிய பல விளையாட்டு வீரர்கள் தென் இலங்கைப் பல்கலைக்கழகத்தினை பிரதிநிதத்துவப்படுத்துகிறார்கள். இவ்வாறான நிலையினை மாற்றியமையுங்கள். விளையாட்டுத் துறைக்கான உயர்கல்வி முதல் தடவையாக யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே தென் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தென் இலங்கைப் பல்கலைக்கழங்களில் இக் கற்கைநெறி மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்படும் போது யாழ் பல்கலைக்கழகத்தில் இக் கற்கைநெறியினை முன்னெடுத்துச்செல்ல முடியாமல் இருப்பதற்கான காரணங்கள் என்ன? இக் கற்கைநெறியினை இயக்க முடியவில்லையாயின் எதற்க்ாக நிரந்தர நியமனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. உயிரற்ற உடலிற்கு அறுவைச்சிகிச்சைகள் எதற்கு?

அண்மையில் நடைபெற்று முடிந்த யாழ் பல்கலைக்கழகத்தின் 33வது பட்டமளிப்பு விழாவில் முதல் தடவையாக தமிழ்மண்ணில் இருந்து பொறியியலாளருக்கான பட்டத்தினை யாழ் பல்கலைக்கழகம் வழங்கியிருந்தமை பெருமைக்குரிய விடயமாக இருக்கின்ற போதிலும் கடந்த ஐந்து வருடமாக உடற்கல்விக்கான பட்டதாரிகள் எவரையும் யாழ் பல்கலைக்கழக சமூகத்தினர் உருவாக்க தவறிவிட்டார்கள் என்பதும் வருத்தமளிக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கையின் ஜனாதிபதியையோ அல்லது கல்வி அமைச்சரையோ அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரையோ சந்திப்பதில் தங்கள் அனைவருக்கும் பெரும் சிரமங்களோ அல்லது இடர்பாடுகள் எவையும் இருப்பதாகவோ தெரியவில்லை. உண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் இவ்வாறான பிரச்சனை ஒன்று இருப்பது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களாகிய உங்களுக்கோ அல்லது பொறுப்புவாய்ந்த உயர் அதிகாரிகளுக்கோ தெரியுமோ என்பது கூட எமக்குத் தெரியாது. தயவு செய்து இவ்விடயத்தினை இலங்கையின் கௌரவ ஜனாதிபதி, கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரின் கவனத்திற்கு எடுத்துச்செல்லுங்கள்.

தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு இருக்கின்ற தடையாக இவ் விடயத்தினை தாங்கள் அனைவரும் கவனமெடுத்து உறங்கு நிலையில் இருக்கும் உடற்கல்வி கற்கைநெறியினை யாழ் பல்கலைக்கழகத்தில் மீளவும் ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எவர் மனதையும் புண்படுத்துவதோ குற்றம் காண்பதோ எனது நோக்கமல்ல. அவ்வாறு எவர் மனதையாவது இவ் எழுத்துக்கள் புண்படுத்தியிருந்தால் அதற்காக மனம் வருந்துகின்றேன்.

நீண்டதொரு சமச்சீரான ஓட்டத்தில் பயணித்த உடற்கல்வி கற்கைநெறி கடந்த ஐந்து வருடமாக மாற்றுத்திசையினூடாக பயணிப்பதில் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக நான் தரித்துப்போய் விட்டேனேயல்லாமல் யார் மீதானதொரு காழ்ப்புணர்வும் என்னிடத்தில் இல்லை.

தங்கள் புரிந்துணர்விற்கு நன்றி

**நாகராஜா விஜயகுமார் - சுவிற்சர்லாந்து**
**உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி முதலாம் அணி மாணவர் மன்ற தலைவர்**
**மாணவர் பதிவு இலக்கம்** - 98 PE 39

(cs.15094)(13.17)

## மரண அறிவித்தல்



பிறப்பு
28
.
08
.
1991

இறப்பு
04
.
06
.
2018

# வைகுந்தநாதன் கௌசிகன்

*(பஸ் உரிமையாளர் WPND1003,*
*பழையமாணவர் - பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி A/L - 2010)*

யாழ். மாவிட்டபுரம் மேற்கு கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வைகுந்தநாதன் கௌசிகன் 04.06.2018 திங்கட்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் கந்தசாமி வைகுந்தநாதன் தவரஞ்சிதம் (சந்திரா) தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான குமாரபுரம் பரந்தனை சேர்ந்த கந்தசாமி சிவபூபதி தம்பதிகளினதும் காலஞ்சென்றவர்களான மாவிட்டபுரம் மேற்கு கொல்லங்கலட்டியைச் சேர்ந்த தனபாலசிங்கம் தையல்நாயகி தம்பதிகளின் அன்புப் பேரனும் வசிகரன்(ஆஸ்திரேலியா), பிரதீபன்(லண்டன்) காலஞ்சென்ற கௌரிதாசன் மற்றும் சிவகௌரி(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கயனி, ஜனனி, தயாநந்தன் ஆகியோரின் அருமை மைத்துனனும் தர்ஷிகன், மேனுயன் ஆகியோரின் அன்பு சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தேவிவாசம், துரைவீதி சந்தி, K.K.S வீதி, இணுவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (11.06.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**வைகுந்தநாதன்(தந்தை) - 021 205 3384/ 0077 301 9943/ 077 791 5677**

(CS 17358) (14,17)

## மரண அறிவித்தல்



பிறப்பு
14
.
06
.
1941

இறப்பு
10
.
06
.
2018

# சரவணை சுப்பையா

(ஓய்வு நிலை கோட்டக்கல்வி அதிகாரி - ஓமந்தை கோட்டம், ஓய்வு நிலை அதிபர் - ஓமந்தை மத்திய கல்லூரி, நொச்சிமோட்டை கனிஷ்ட உயர் தர வித்தியாலயம்)

யாழ்ப்பாணம் சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா தேக்கவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை சுப்பையா (ஓய்வு நிலை கோட்டக்கல்வி அதிகாரி - ஓமந்தை கோட்டம், ஓய்வு நிலை அதிபர் - ஓமந்தை மத்திய கல்லூரி, நொச்சிமோட்டை கனிஷ்ட உயர் தர வித்தியாலயம்) நேற்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - பொன்னு தம்பதியரின் மகனும், வைத்தியர் சோமசுந்தரம் - தவமணி தம்பதியரின் மருமகனும் ரஞ்சித சற்குணதேவி அம்மா (ஓய்வு நிலை அதிபர் - நொச்சிமோட்டை கனிஷ்ட உயர் தர வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும், அருளம்பலம், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் இராமலிங்கம் (ஓய்வு நிலை அதிபர் - யா /வட்டு இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மருக்கொழுந்து மற்றும் குகபூசணி (ஓய்வு நிலை முகாமையாளர் -இலங்கை வங்கி, மானிப்பாய் கிளை), மீனாட்சி, ஸ்கந்தமலர், விமலதர்மா ஐயா (ஓய்வு நிலை உத்தியோகத்தர் - இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), கவுரிதேவி அம்மா (ஓய்வு நிலை ஆசிரியர் - வ / தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும், சுதாகர் (தொழிநுட்ப உத்தியோகத்தர் நகரசபை - வவுனியா) சுதாமதி (ஆசிரியை - வ /ஓமந்தை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காந்தினி (ஆசிரியை - வ / இறம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலயம்), தவேந்திரன் (விஞ்ஞான தொழிநுட்பவியல் உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், வெங்கலச்செட்டிக்குளம்) ஆகியோரின் மாமனாரும், அக்சயா, ஹரிஷயா, அக் ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல.15 / 16, 5 ஆம், ஒழுங்கை மன்னார் வீதி, வேப்பங்குளம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ச. சு. சுதாகர் (மகன் - 077 232 7006)**
**ம.தவேந்திரன் (மருமகன் - 077 604 7770)**

(cs14355)(13,17)



# ‘வெல்வெட் நகரம்’ சுவரொட்டியை வெளியிட்டார் விஜய் சேதுபதி

கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதாபாத்திரத்தில், வரலட்சுமி சரத்குமார் நடிக்கும் ‘வெல்வெட் நகரம்’ படத்தின் முதல் சுவரொட்டியை நடிகர் விஜய் சேதுபதி வெளியிட்டிருக்கிறார்.

இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் மனோஜ் இயக்குகிறார். கதாநாயகியை மையப்படுத்திய படமாக இதை உருவாக்க இருக்கிறார்கள். சிலவருடங்களுக்குமுன் நடந்த ஒருஉண்மைச் சம்பவத்தை மையமாகவைத்து இந்தப்படத்தின்கதைஉருவாக்கப்பட்டுள்ளது. இதில்வரலட்சுமிசரத்குமார்ஊடகவியலாளராகநடித்துள்ளார்.

## ‘எல்லா புகழும் உபயகாரருக்கே...’

நிம்மதியா சாமி கும்பிட கோயிலுக்குப் போனா, சாமியே அரை இருட்டுல உட்கார்ந்து வேர்வை தாங்காம வேதனையில் இருந்தாரு..... பாராளும் பகவானுக்கு “பவர் கட்” இருக்காதெண்டு நம்பி லைட்டப் பார்த்தா, பாதி டியூப் லைட்டுக்கு



“உபயம்: ராமசாமி, வடக்குபட்டி”ன்னு இருக்கு. சரி, பானைப் போடுவோம்னு போனா, அதிலயும் “உபயம்: கந்தசாமி, கிழக்குபட்டி”ன்னு இருக்கு. சாமிக்கு பின்னாடி இருந்த கண்ணாடியிலயும் “உபயம்: முனுசாமி, மேற்குபட்டி”. உண்டியல்ல “உபயம்: கண்ணுசாமி, தெற்குப்பட்டி”. சூடம் கொளுத்தற தட்டுல இருந்து தேங்காய் உடை[illegible]ட்டு வரை எல்லாத்திலயும் இவிங்க பே[illegible]பாட்டுக்கிட்டு எப்படிடா [illegible]றீங்க,

**‘‘எல்லா புகழும் இறைவனுக்கே’’ன்னு?**




## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | 3 | | | 9 | |
| | | 7 | | 9 | 5 | 1 | 2 | |
| | | | | | 8 | | | 4 |
| 8 | | | 4 | | 2 | | 7 | |
| | | | | 6 | | | | |
| | 9 | | 7 | | 3 | | | 6 |
| 6 | | | 9 | | | | | |
| | 5 | 4 | 3 | 2 | | 8 | | |
| | 1 | | | 4 | | 2 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 1 | 8 | 7 | 5 | 9 | 4 | 2 |
| 4 | 2 | 8 | 9 | 6 | 3 | 5 | 7 | 1 |
| 5 | 9 | 7 | 2 | 4 | 1 | 8 | 3 | 6 |
| 8 | 1 | 2 | 6 | 9 | 4 | 3 | 5 | 7 |
| 9 | 3 | 5 | 1 | 8 | 7 | 6 | 2 | 4 |
| 7 | 4 | 6 | 5 | 3 | 2 | 1 | 9 | 8 |
| 1 | 5 | 3 | 7 | 2 | 8 | 4 | 6 | 9 |
| 2 | 8 | 9 | 4 | 5 | 6 | 7 | 1 | 3 |
| 6 | 7 | 4 | 3 | 1 | 9 | 2 | 8 | 5 |

நேற்றைய விடை

## உயிரெழுத்துக்களில் வடிவேலு







**மேடம்:** சுற்றுப்புறச் சூழலின் தாக்கம் உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாராக இருக்கும்.

**இடபம்:** மனதில் உருவான திட்டம், செயல் வடிவம் பெறும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம்.தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** தனித்திறமையுடன் செயற்படுவீர்கள். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** பேச்சில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிபுரிவதால் மட்டுமே, எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். பணவரவு குறைந்த அளவில் இருக்கும்.

**சிங்கம்:** கடந்தகால உழைப்பின் பயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் நன்மை காண்பீர்கள்.

**கன்னி:** இனிய அணுகுமுறையால் நற்பலன் பெறுவீர்கள். விலகி சென்ற உறவினர், விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**துலாம்:** திட்டமிட்ட பணி தாமதமாகலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கைக்கு வழிவகுக்கும்.வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். கருணை மனதுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும்.

**தனுசு:** குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகலாம். இலாபம் சுமாராக இருக்கும்.

**மகரம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

**கும்பம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழித்து ஆதாய பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி பற்றிய பேச்சு நடக்கும்.

**மீனம்:** சூழ்நிலை அறிந்து சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். பணியாளர்கள் நிலுவைப் பணியை முடிக்க விரைந்து செயற்படுவர்.

## twitter

**ஏழை இளவரசன்@Shezad_**

தண்ணீரைப்போல
கண்ணீரையும்
சிக்கனப்படுத்தி வையுங்கள்.
அடக்க முடியாத தாகம்
தோன்றுவதைப்போல்
அடக்காக முடியாத சோகமும்
தோன்றலாம்...

**இயந்திர இதயம்VegaMcHrt91**

பள்ளியில் சேரும் போது
பயத்தால் அழுகின்றோம்!
பள்ளியை நீங்கும் போது
பாசத்தால் அழுகின்றோம்!
**கனாகண்ட காலங்கள்**

**கடைநிலை ஊழியன் @**

சிலரை மேலே ஏற்றியும்
சிலரை கீழே இறக்கியும்
விட்டுவிடுகிறது **‘லிப்ட்’**

எவ்வளவு எதிர்ப்புகள்
எவ்வளவு உள்குத்தல்கள்
எவ்வளவு அரசியல்
எவ்வளவு வெறுப்பு
எவ்வளவு கிண்டல்
எவ்வளவு நக்கல்
எவ்வளவு நய்யாண்டி
எவ்வளவு பொய்ப் பரப்புரைகள்
எவ்வளவு விரோதிகள்
எவ்வளவு மீம்கள்
எல்லாவற்றையும் தாண்டி
ஜெயிக்கிறார் என்றால்

**அது ரஜினி**




26 வயதில் பார்க்க லட்சணமா அழகா வசதியான நல்லா படிச்ச வேலைக்குப் போற பொண்ணு வேணும்
27 வயதில் பார்க்க லட்சணமா அழகா நல்லா படிச்ச வேலைக்குப் போற பொண்ணு வேணும்
28 வயதில் பார்க்க லட்சணமா நல்லா படிச்ச வேலைக்குப் போற பொண்ணு வேணும்
29 வயதில் பார்க்க லட்சணமா நல்லா படிச்ச பொண்ணு வேணும்
30 வயதில் பார்க்க லட்சணமா படிச்ச பொண்ணு வேணும்
31 வயதில் பார்க்க லட்சணமா பெண்ணு வேணும்
32 வயதில் பொண்ணு வேணும்
33க்கு மேல் வேணும்!

**பெண் பார்க்கும் ஆணின் பரிணாம தளர்ச்சி..**



# குழந்தைகள் நல்லவர்கள்



அன்று தீபாவளிப் பண்டிகை நாள். மழை பெய்து கொண்டிருக்கிறது. சலசல என்று தண்ணீர் தெருக்களிலே ஓடிக் கொண்டிருந்தது. மாலா எதிர் வீட்டு அல்லியுடன் விளையாட வந்து சேர்ந்தாள். இருவரும் புத்தாடைகள் அணிந்திருந்தனர். தமது ஆடைகளை இருவரும் ஒருவருக்கொருவர் காட்டி மகிழ்ந்தனர். பின்னர் விளையாடத் தொடங்கினர். ஒருவர் ஒருவராக தெருவில் ஓடிக்கொண்டிருந்த வெள்ளத்தில் இறங்கி தமது நீளமான பாவாடைகளைத் தூக்கிப் பிடித்த படி நடக்கத் தொடங்கினர். முன்னதாகவே மழை நின்று விட்டிருந்ததால் சிறுமிகள் வெள்ளத்தில் நடப்பது இலகுவாக இருந்தது. "மாலா மெல்ல நட. வெள்ளம் நமது பாவாடையை நனைத்து விடும்" என்றாள் அல்லி. ஆனால் அதற்கு மாறாக மாலா காலால் நீரைஅடித்து அடித்து நடந்தாள். அதுமட்டுமல்ல சட்டென்று சேறு நிறைந்த குழியிலும் காலை வைத்தாள். இப்போது சேறு அல்லியின் முகத்திலும் ஆடையிலும் சிதறியடித்தது. மாலாவின் ஆடையிலும் சேறுகள் பட்டது. புதுப்பாவாடையில் மண்படவே அல்லி கோபங்கொண்டு அடிப்பதற்கு மாலாவைத் துரத்தினாள். அப்பொழுது தற்செயலாக அல்லியின் தாய் அந்தப் பக்கம் வந்தாள். தன்னுடைய மகளின் பட்டுப் பாவாடையில் சேறு பட்டிப்பதைக் கண்டு 'அசடே..என்ன இது. தீபாவளி நாளில் சேற்றைப் பூசியுள்ளாயே"என்று கத்தினாள். "நான் என்னம்மா செய்வேன். மாலா என் பாவாடையில் வேண்டுமென்றே சேற்றை அடித்து விட்டாள்"என்று கூறி அல்லி அழுதாள்.

இதைக் கேட்ட அல்லியின் தாய் மாலாவை எட்டிப் பிடித்து அவள் பிடரியிலே ஓர் அடிகொடுத்தாள். அடிவாங்கிய மாலா தெருவெங்கும் கேட்கும்படி 'ஓ'என்று கதறி அழத்தொடங்கினாள். அழுகுரல் கேட்டு அழுவது தன் மகளோ என்று மாலாவின் தாய் அங்கு ஓடிவந்தாள். "மாலா அழுவது ஏன் என்று விசாரித்ததாறிந்தாள். உடனே 'என் மகளை நீ ஏன் அடித்தாய்? என்று கத்தினாள். பதிலுக்கு அல்லியின் தாய் உனது மகள் செய்ததுமட்டும் சரியோ. எனது மகளின் பாவாடையில் சேற்றை வாரியடித்துள்ளாளே!"என்று பதிலுக்கு உரத்த குரலில் கத்தினாள்.

இப்போது பதிலுக்குப் பதில் என்று வாய்ச் சண்டை வளர்ந்தது" ஒரே கூச்சல். கூச்சல் அதிகரிக்கவே வீட்டிலுள்ள ஆடவர்கள் வெளியே தெருவுக்கு ஓடி வந்தனர். தெருவில் பெருங்கூட்டம் சேர்ந்து விட்டது. அன்று தீபாவளி என்பதையும் மறந்து கோபத்துடன் கத்திக்கொண்டிருந்தார்கள். இப்போது தெருவிலே இருகட்சி பிரிந்தது. ஒன்று மாலாவுக்காக மற்றது அல்லிக்காக. இப்படியே ஏன் எதற்கு இப்படி சண்டை போடுகிறோமென்றில்லாது ஆண்கள், பெண்கள் என்று எல்லோரும் கருமமே(சண்டையில்)கண்ணாயினர்.

இப்போது இந்த நிலைமையைப் பார்த்த பாட்டி ஒருவர் அவர்களைசமாதனப்படுத்த முனைந்தாள். முடியவில்லை. எட்டி நின்று நடப்பதை அவதானித்துக்கொண்டிருந்தாள். ஏன் சண்டை வந்தது என்பதை மட்டும் அவர்கள் பேச்சுக்களில் இருந்து ஊகித்துக் கொண்டாள். வாய்ப் பேச்சுக்கள் கைகலப்பு நிலைக்கு வந்துவிடும் நிலையில் உச்சக்கட்டத்தை அடைந்த அப்போது.

அல்லி தன் பாவாடையில் பட்ட மண்ணக்கொஞ்சம் தட்டி கழுவ ஆயத்தமானாள். தெருவில் பள்ளமான இடத்தில் தேங்கி நின்ற நீரில் கப்பல் விட்டு விளையாட வேண்டுமென்ற ஆசையில் வீட்டுக்குள் சென்று சில கடதாசிகளை எடுத்து வந்தாள். இப்போது அல்லியை அணுகிய மாலா "அல்லி பாவாடையில் இன்னும் கொஞ்சம் மண் உள்ளது"என்று கூறி அவள் அனுமதியின்றியே அவள் பாவாடையைத் தொட்டு சுத்தம்செய்தாள். இப்போது இவரும் கப்பல் செய்து நீரில் விடுவதில் மும்முர மாகினர். இருவரும் கப்பல்கள் மிதந்ததோடு வதைப் பார்த்து கைதட்டி மகிழ்ந்தனர். இப்போது அங்கு உலாவிக்கொண்டு பெரியவர்களின் சண்டையைப் பார்த்து நின்ற சிலர் சிறுவர் சிறுமியரும் அவர்களுடன் (மாலா, அல்லி) சேர்ந்து கொண்டனர்.

இவற்றையெல்லாம் கவனித்த பாட்டி இப்போது பெரியவர்களின் கூட்டத்தில் புகுந்து தன் பலம்கொண்டு கத்தினாள். "அங்கே பாருங்கள்" என்று சிறுவர்கள் விளை யாடிக் கொண்டிருந்த பக்கமாக சுட்டிக்காட்டினாள். "சீ...உங்களுக்கு வெட்கமில்லையா? குழந்தைகளால் தானே நீங்கள் சண்டைபோடுகிறீர்கள். இவர்களே உடனேயே சண்டையை மறந்து கூடி விளையாடுகிறார்கள். இந்த அதிசயத்தைப் பாருங்கள். குழந்தைகள் நல்லவர்கள். கள்ளம் கபடமற்றவர்கள். பெரியவர்களாகிய நீங்கள் இவர்களிடம் பலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பாட்டி இடித்துரைத்தாள்.

பெரியவர்கள் தலைகுனிந்தபடி தம்வீடுகளை அடைந்தனர். குழந்தைகளோ இவை ஒன்றையும் கவனியாது அந்தக் கப்பலோட்டத்தில் இணைந்திருந்தனர்.

# கொரில்லாக்கள்



வேகமாக அழிந்து வரும் இனமாக கொரில்லாக் குரங்குகள் இன்று கருதப்படுகின்றன. இவை மனித குணாம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளன. இவை அதிகமாக ஆபிரிக்கக் காடுகளிலேயே வாழ்கின்றன. இந்தக் கொரில்லாக் குரங்குகள் ஒரு தடவையில் ஒரு குட்டியை ஈனுபவை. ஒரு குட்டியை வளர்ப்பதில் நீண்ட காலத்தை செலவிட்டபின்பே அடுத்த குட்டியை ஈனும் அனேகமாக நான்கு அல்லது ஐந்து வருடத்துக்கு ஒரு தடவையே குட்டியை ஈன்றெடுக்கும். அதாவது மற்றைய மிருகங்கள் போன்று இவை அதிகமாக இனப் பெருக்கம் செய்வதில்லை.


கொரில்லாக் குரங்கில் உறவினராக மனிதர்களையும் வாலில்ல மனிதக் குரங்கான சிம்பன்சியைக் கூறலாம். நன்கு வளர்ந்த ஆண் கொரில்லாவின் எடை 135 முதல் 195 கிலோவுக்கு இடைப்பட்டதாக இருக்கும். இவற்றின் உயரம் 1.5 மீற்றர் முதல் 1.6 மீற்றர் வரையில் இருக்கும். ஆணிண் எடையை விட பெண்ணின் எடை பாதியளவானதாக இருக்கும். சில வகைக் கொரில்லாக்கள் கறுப்பு நிற முடையவை. சில அதிக கறுப்பு நிறமுடையவை. குறிப்பாக மலைப்பகுதிகளில் வாழ்பவை கூடுதல் கறுப்பு நிறம் கொண்டவை. மிகத் தடித்த உரோமம் இருக்கும். மலையில் வாழ்பவை உடல் பருத்தவையாக இருக்கும். தாழ் தரைப்பகுதியில் வாழ்பவவை மெலிந்த உடல் வாகுடன் இருக்கும் இவை சுறு சுறுப்பாகவும் வேகமாகவும் இயங்கக் கூடியவை.


மலை வாழ் கொரில்லாக்கள் இலை குழைகளை அதிகமாகவும் பழங்களைக் குறைவாகவும் உண்ணும் சுபாவம் உடையவை. தரையில் வாழ்பவை தமது உணவில் 25 வீதமாக பழங்களை உண்ணும் பூச்சி, எறும்புகளையும் தேடி உண்கின்றன. நீர்த்தன்மையான இலை குழைகளை உண்பதால் இவை நீரை அதிகம் பருகுவதில்லை.

இவை தமக்குள் தொடர்புகளை வைத்திருக்கும் 25 வேறுபட்ட குரங்குகளைக் கொண்டுள்ளன. அடர்ந்த காடுகளில் ஒரு வகைக் குரலை எழுப்பி தாம் நிற்கும் இடம் பற்றித் தெரிவிக்கின்றன. குரைப்பது போலவும் அலறுதல் போலவும் கர்ஜனை போலும் இவைகளின் குரல்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப மாறுபடும். இவற்றுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டால் மிரட்டல்களும் இடம்பெறும். மரங்களின் கிளைகளை முறித்தெறிதல் தமது நெஞ்சில் இரு கைகளாலும் மாறி மாறி அடித்தில் ஒரு காலால் எட்டி உதைத்தல் இப்படி பல வழிகளில் தமது ஆக்ரோஷத்தை வெளிப்படுத்துகின்றன. இவை வாழும் காலம் 35, 40 வருடங்களாகும்.

இவை காடுகள் வெட்டப்படுவதாலும் எண்ணெய் அகழ்வு சுரங்கங்கள் வெட்டுவதாலும் வேகமாக அழிந்து வருகின்றன. இவற்றைக் கொன்று ஆபிரிக்கர்கள் உண்கின்றனர். இவற்றின் குருதியில் உள்ள எபோலா' என்ற பயங்கரக்கிருமி மனித உடலில் சென்றடைந்ததும் மனிதர் குருதி கக்கி உயிரிழக்கின்றனர். இந்த நோய்க்கு மனிதர் மட்டுமல்ல கொரில்லாக்களும் உயிரிழக்கின்றன.

கொரில்லா போர் முறை என்பது ஒரு ஒழுங்கற்ற மறைந்திருந்து தாக்கும் முறையாகும். 1809 ஆம் ஆண்டு முதல் இப்போர் முறை மனிதர்களால் பயன்படுத்தப்பட்டது என்று கூறப்படுகிறது. பதுங்கித்தாக்குதல், திடீர் தாக்குதல் நாசமாக்கல் போன்றவையே இந்தப்போர் முறையில் கையாளப்படுகிறது. கொரில்லாக்கள் இம் முறைகளாலேயே தமக்குள்ளேயோ எதிரிகளோடோ தாக்குதல் நடத்துகின்றன. இதனாலேயே மிருகத்தைப் பின்பற்றி மனிதனும் இப்போர் முறையைக் கையாண்டான். ஆதலாலேயே மிருகங்களின் பெயரால் மறைந்து தாக்குதல் கொரில்லாத் தாக்குதல் எனப்படுகிறது.





## வழிகாட்டுவோம்

# கறுவா



கறுவா என்பது கறுவா மரத்தின் பட்டை ஆகும். இம்மரம் இலங்கை, இந்தியாவின் மலையாளக் கரை, மேற்கிந்தியத் தீவுகள், பிரேசில் கூடர்க்கு முதலிய நாடுகளில் பயிரிடப் படுகிறது. இது காட்டு மரமாக வளரும் பொழுது 20 முதல் 30 அடிவரை உயரும். பட்டைக் கறுவா பயிரிடும் போது இதனைப் 10 அடிக்கு மேல் வளரவிடுவதில்லை. இம் மரத்தின் குருத்து மஞ்சளாக மாறி இருண்ட பச்சை நிறமடையும். ஒன்பது ஆண்டுகளின் பின் மரத்தின் பட்டை உரித்தெடுக்கப்படுகிறது. பின்னர் தாய் மரம் வெட்டப்படும். இதன்பின் தாய்மரத்தின் அடியிலிருந்து கூட்டமாக முளைத்தெழும் செடிகளிலிருந்து உரித்தெடுக்கப்படும் பட்டை உயர்தர கறுவா ஆகும். இம்முனை கள் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நில மட்டத்துக்கு வெட்டப்படும். இலவங்கம் பட்டையின் மணமும் கறவாப்பட்டையின் மணத்தை ஒத்தது. கறுவாவிலிருந்து தைலம் எடுக்கப்படும். அது மருந்தாகப் பயன்படுகிறது. கறுவா ஜீரணத்துக்கு நல்ல மருந்தென்று சொல்லப் படுகிறது. கறுவாப்பட்டையைத் தண்ணீரில் ஊற விட்டு அந்தத் தண்ணீரை வடித்து கறுவாத்தைலம் எடுக்கப்படுகிறது.



# இது புதுசு

ஆண்களுக்கான ரீசேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

நல் ஆரோக்கியத்துக்கு
**றோயல்**
சுத்தமான தேன்
உங்கள் நலன் ஆரோக்கியம் கருதி " ஆய்வுகூடத்தில்" தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.
Packed By:- Royal Industries
Marketed By:- சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2567
குறிப்பு:- யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பார்மசிகளிலும் பலசரக்குக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 10.06.2018 | வெற்றி வாரம் 2310 | வர்ணம் ஊதா
தனுசு
வெற்றி இலக்கங்கள் 03 08 45 49
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 644, 960/=
2018.06.12 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை சமாராதனை அழைப்பு



அன்புடையீர்
கடந்த 31.05.2018 இறைபத
மெய்திய எமது
அன்புத்தெய்வம்
**ஸ்ரீமதி மகேஸ்வரி**
**ஞானசம்பந்தக்குருக்கள்**

அவர்களது ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் சமாராதனையும் எதிர்வரும் புதன்கிழமை 13.06.2018 மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலய "மகேஸ்வரன் தருமசுரபி" அன்னதான மண்டபத்தில் மு.ப. 11 மணிக்கு நடைபெறும். அனைவரையும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் சமாராதனையில் பங்குபற்றுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

**மணற்காடு காரைநகர்.**

**நா. ஞானசம்பந்தக்குருக்கள்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வராணி (ராணி) விநாசித்தம்பி



தோற்றம் 13.02.1954 மறைவு 09.06.2018

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி (ராணி) விநாசித்தம்பி கடந்த (09.06.2018) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான நல்லையா - செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் விநாசித்தம்பியின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மனோன்மணி, இராசமலர் (கனடா), சரஸ்வதி (பிரான்ஸ்), கனகேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுமன், ஜென்சி, அருண், லக்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும் துளசி, விபுலன், நிரோசா, நிஷாந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெபிக்கா, ஜெஸ்வினி, சந்தோஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.06.2018) திங்கட் கிழமை மு.ப. 10.00மணி வரை மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அவரது வசிப்பிடமான புலோலிக்கு கொண்டு செல்லப்பட்டு நாளை (12.06.2018) செவ்வாய்க்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**- 077 717 3691** **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### கதிரவேலு தணிகாசலம்




தாவடியைப் பிறப்பிடமாகவும், தையிட்டி மற்றும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தணிகாசலம் நேற்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு பாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக்கணவரும் சிவபாக்கியம் (சொர்ணம்மா), வேலையா, முத்துலிங்கம், கமலா ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் செல்வராணி ஆகியோரின்அன்புமைத்துனரும்சிவாஜினி, சிறீகரன் (சுவிஸ்), தயாகரன் (சுவிஸ்), சிவலோஜினி (சுவிஸ்), மாலினி (கனடா), சுதாஜினி, சுதர்ஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் மோகனராஜா (காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை), அனுசியா (சுவிஸ்), கிசா (சுவிஸ்), அருள்மோகன் (சுவிஸ்), ஜீவா (கனடா), ஜெயாகரன் (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்), சிறீகரன் (பிரான்ஸ்) ஆகியோரின அன்புமாமனாரும் மகிலா, பிரசாத், கிரிசாத், நரேஷ், ஹரனி, சுயன், ரிஷிஹா, சாருணி, ரிஷாணி, மயூரசாரங்கன், மதுஷா, சௌமியா, ஜீவன், சிவசாத், நிதுஷாயினி, அபிநயன், அபிராம், அக்ஷரா, அகஸ்திகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2018) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நந்தாவில் லேன்,**
**தாவடி கிழக்கு, கொக்குவில்.**
**077 6100049**

**தகவல்: குடும்பத்தினர்.**



### கந்தையா யோகநாதன்

திக்கரை, களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும், புதுவீதி கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா யோகநாதன் (நாதன்) நேற்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி தங்கம்மா தம்பதியரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை மகேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும் கனகேஸ்வரியின் அன்புக்கணவரும் விஜிதா, புவிதா, கஜலக்ஷன், பகீரதன், கீர்த்தனா ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும்அன்னலட்சுமி தம்பதியரின் அன்புப்பெறாமகனும் பரராசசிங்கம் (கிளிநொச்சி), பாலசுப்ரமணியம் (கொழும்பு), அம்பிகைபாகன், செல்வராசா (காரைநகர்) ஆகியோரின் அன்புமருமகனும் கனகேஸ்வரன் (ஜேர்மனி), கணேஸ்வரி (வவுனியா), சிவனேஸ்வரன் (ஜேர்மனி), சிவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2018) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணிக்கு துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 404 5004**


**தகவல்: குடும்பத்தினர்**

# கிரமமான முதலீட்டுத் திட்டம்

தமிழ்கோ

பொருளாதார நிலமைகளை முதலீட்டுக்குச் சாதகமாக மாற்றியமைக்கும் திறன் கொண்ட முதலீட்டாளன் விவேகமுடையவனாகக் கருதப்படுகிறான். அந்தவகையிலே விவேகமான முதலீட்டாளனாக எவ்வாறு மாற்றமடைவது, அதற்கான சாத்தியப்பாடுகளை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். பொதுவாகவே நீண்டகால அனுபவம், உலகத் தரமுடைய பகுப்பாய்வுத்திறன் மற்றும் விரைவான தகவல்களை அறிந்துகொள்ளும் வசதியுடையோர் தொடர்ந்து முதலீடுகளில் தேர்ச்சியானவர்களாக இருக்க வாய்ப்பு உண்டு.

மேலும், இவர்கள் சந்தைக்கால அசைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் அவற்றை மிகவும் கூர்ந்து அவதானித்து வழமைக்கு மாறாக அதிக இலாபத்தினை ஈட்டுவர். அதேபோன்று சிறிய முதலீட்டாளன் இவ்வாறான வசதிகள் இன்றி இலாபத்தை பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் நம்பிக்கையுடன் கூடிய பொறுமையான, கிரமமான முதலீட்டுத் திட்டத்தினைப் (Systematic Investment Plan) பின்பற்ற வேண்டும்.



## வருமான விளைவைப் பெறுவதற்கான செயலுறுதி

**கிரமமான முதலீடு**

கிரமமான முதலீட்டுத் திட்டம் முதலீட்டாளர்களின் பண முதலீடுகளை தன்னிச்சையான முறையில் பெருக்கிக் கொள்வதற்கான ஓர் சிறந்த வாய்ப்பாக அமைகிறது. முதலீட்டாளன் நேரத்தினை வாழ்க்கையின் முன்னுரிமை அடிப்படையில் செலவு செய்யவும் வழிப்படுத்துகிறது. மேலும் சந்தைக் கால அசைவுகளுடன் வினைத்திறன் குன்றிய தீர்மானங்களை இழிவுபடுத்தும் முக்கிய தகுதியினையும் கிரமமான முதலீட்டுத் திட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது.

இங்கு, சந்தைக்கால வரையறைக்குள் பல எதிர்மறையான விளைவுகளை சந்தை வெளிப்படுத்துகிறதே தவிர, மிகச்சிறந்த தீர்மானங்களுக்கான வாய்ப்புக்களை அரிதாகவே கொண்டிருப்பதனை அவதானிக்கலாம். நீண்டகால அடிப்படையில் கிரம்மான முதலீட்டுத் திட்டத்தின் வருமான விளைவை எடுத்து நோக்கின் அது மிகவும் காத்திரமானதாக அமைகின்றது.

கிரமமான சேமிப்புத் தந்திரோபாயமே இந்தத் திட்டத்தின் அடிப்படையாக அமைகின்றது. குறிப்பாக, முதலீட்டாளன் உத்தேசித்து முதலீட்டுத் தொகையினை அல்லது தீர்மானித்த கம்பனியின் பங்குகளை வாராந்தம் அல்லது மாதம் தோறும் திட்டத்துக்கு அமைவான முதலீடாக மாற்றி, தனது முதலீட்டுத் தேக்கத்துடன் அதனை இணைத்துக்கொள்ள வேண்டும். இந்தச் செயலொழுங்கு தொடர்ச்சியானதாக குறிப்பிட்ட கால வரையறைக்கு உட்பட்டதாக அமைந்திருக்கும்.

நிலுவைப் பணமானது மிகவும் திரவத் தன்மை வாய்ந்த பணச்சந்தை சார் முதலீட்டுக் கருவிகளில் அதாவது, சேமிப்புக்கணக்கு அல்லது தவணையிட்ட வங்கி வைப்புக்களில் பேணிப் பாதுகாத்துக் கொண்டால் அதனை தேவைக்கு ஏற்ப பயன்படுத்திக்கொள்ள முடியும். முதலீட்டுத் தேக்கம் தொடர்ந்து காலத்துடன் இணைந்தவகையில் தன்னிச்சையாக வளர்ச்சியடைந்து செல்வதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

சராசரிக் கிரயம் மற்றும் உணர்வு போன்றன இந்தத் திட்டத்தின் முதன்மையான பயன்படு தன்மையாக அமைந்திருக்கின்றன.

போன்ற எதிரிகளை வெற்றிகொள்வதற்கு, அதாவது உணர்ச்சிவசப்பட்ட (Emotion) தீர்மானங்களை குறைப்பதற்கு கிரமமான முதலீட்டுத் திட்டம் உதவி புரிகின்றது. முதலீட்டுத் தெரிவினைக் காட்டிலும் முதலீட்டுத் தேக்கத்தின் செயற்றிறன் மீது அதிக தாக்கத்தை முதலீட்டாளர் நடத்தை ஏற்படுத்துகின்றது.


**திட்டமிடல்' வேண்டும்**

முதலீட்டாளர்கள் மிக மோசமான முடிவுகளை தீவிர உணர்வின் வெளிப்பாடாக கொண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக, பங்குகளின் விலைகள் தொடர்ச்சியாக உயர்வடைந்து செல்லும் போது பங்குச் சந்தைச் சுட்டிகளின் வரலாற்று அடைவுகளை கோடிட்டுக்காட்டும்; பத்திரிகைச் செய்திகள் மற்றும் மாறுபட்ட சூழ்நிலையிலும் இலாபமீட்டலுக்கான ஓர் வெளித்தோற்றப்பாடு போன்றன முதலீட்டாளர்கள் அதிக இடர்நேர்வுடைய சொத்துக்களை நோக்கி நகர்த்துகிறது. அதாவது, பிணையங்களை பாதகமான சூழ்நிலையிலும் வாங்குவதற்கு உந்துகிறது.

> கிரமமான முதலீட்டுச் செயலொழுங்களில் முதலீடுகளின் சராசரிக் கிரயமானது தொடர்ந்து குறைவடைந்து செல்கின்றது. அதவாது, முதலீட்டுச் சராசரிக் கிரயத்தின் முக்கிய தோற்றப்பாடாக கிரமமான முதலீட்டுத் திட்டம் அமைகின்றது. மேலும் இந்த முதலீட்டுத் தந்திரோபாயம்; முதலீட்டாளர்களை தொடர்ச்சியாக பங்குகள் மற்றும் நம்பிக்கை அலகுகளை காலக்கிரமமாகக் கொள்வனவு செய்யத்தூண்டுகின்றது.

**கிரமமான முதலீடும் சராசரிக் கிரயமும்**

கிரமமான முதலீட்டுச் செயலொழுங்களில் முதலீடுகளின் சராசரிக் கிரயமானது தொடர்ந்து குறைவடைந்து செல்கின்றது. அதவாது, முதலீட்டுச் சராசரிக் கிரயத்தின் முக்கிய தோற்றப்பாடாக கிரமமான முதலீட்டுத் திட்டம் அமைகின்றது. மேலும் இந்த முதலீட்டுத் தந்திரோபாயம்; முதலீட்டாளர்களைத் தொடர்ச்சியாக பங்குகள் மற்றும் நம்பிக்கை அலகுகளை காலக்கிரமமாக கொள்வனவு செய்யத்தூண்டுகின்றது. முதலீட்டுத் தேக்கத்தில் உள்ள பங்குகளின் சராசரிச் செலவை தொடர்ச்சியாகக் குறைவடையச் செய்கின்றது.



**முதலீடும் முதலீட்டாளன் நடத்தையும்**

முதலீட்டாளர்களின் 'நடத்தை நிதியில்' (Behavioral Finance ) பாதிப்பினை ஏற்படுத்தவல்ல 'பயம்', 'பேராசை' மற்றும் 'தன்னிறைவு'

உண்மையில் எதிர்மறையான விளைவுகளே நிகழ்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமானால், பங்குகளின் அதிகரித்த விலைகள் ஆச்சரியப்படும் விதமாக தொடர்ச்சியாக விழ்ச்சியடைகின்றன. இந்தச் சூழ்நிலை தொடரும் சந்தர்ப்பத்திலே பல முதலீட்டாளர்கள் தங்கள் பங்குகளை விற்பனை செய்கின்றனர். இங்கு அவர்கள் அதிக விலைக்கு வாங்கி குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய இடர்நேர்வு ஏற்படுகிறது. ஆக, இவ்வாறான சூழ்நிலைகளைத் தவிர்க்க, விலைத் தளம்பல்களை பொருட்படுத்தாது, அடிப்படையற்ற கருத்தூட்டமாக வருகின்ற செய்திகளை கருத்தில் கொள்ளாது கிரமமாக முதலீட்டுத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்க வேண்டும். அதனூடே எமக்குரிய தனித்துவமான முதலீட்டுத்; தந்திரோபாயத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். இதுவே பொருத்தமான செயல் நடவடிக்கையாகவும் அமைந்திருக்கும். உணர்ந்துகொண்டு செயலாற்றுவோம்.

## இன்று...

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறும். அதன் பின்னர் மாவட்டச் செயலரிடம் மனுக் கையளிக்கப்படும். (5,71)

## உடுப்பிட்டி...

உடுப்பிட்டி வீரபத்திரர் கோவில் வீதியைச் சேர்ந்த எ.ஜீவ சங்கரி (வயது26) என்ற இளைஞனே இவ்வாறு மீட்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

இளைஞன் கடந்த 29ஆம் திகதி வீட்டிலிருந்து இரவு மகிழுந்தில் அழைத்துச் செல்லப்பட்டார். அதன் பின்னர் அவரைக் காணவில்லை என்று தெரிவித்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

வல்வை வீதியின் அருகே நேற்று அதிகாலை இளைஞனை இராணுவத்தினர் மீட்டுள்ளனர். கைகள் கட்டப்பட்டும், சத்தம் எழுப்பாதவாறு வாயில் பிளாஸ்ரர் ஒட்டப்பட்டும் உடம்பில் அடிகாயங்களுடனும் மீட்கப்பட்ட இளைஞன் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (5,726)

## மாங்குளத்தில்...

அமைச்சர் ரணில் விக்கிமசிங்க தெரிவித்தார்.

கலேவல பிரதேச செயலகக் கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போதைய நிலமையில் பிரதேச மற்றும் மாவட்ட மட்ட நிர்வாகச் செயற்பாடுகள் சிறந்த முறையில் இடம்பெற்றுவருகின்றன. ஒரு சில திட்டங்களை முன்னெடுப்பதிலும் தாமதம் நிலவுகின்றது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாச காலத்தில் இவ்வாறான தாமதங்கள் இருக்கவில்லை. தற்போது நிலவுகின்ற தாமதங்களை நீக்கிக்கொள்வது அமைச்சின் கடமையாகும்.

தம்புள்ளை பிரதேசத்தில் பெரிய புதிய களஞ்சிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு எனது அமைச்சினூடாக இராஜாங்க அமைச்சர் ஹர்ச டி சில்வா நடவடிக்கை எடுத்து வருகின்றார். தம்புள்ளை பொருளாதார மைய நிலையத்துக்கு அருகிலேயே இதற்கான காணி எமக்கு கிடைத்துள்ளது. 5 ஆயிரம் மெற்றிக்தொன் மரக்கறி மற்றும் பழங்கள் களஞ்சியப்படுத்தும் களஞ்சிய சாலையை அமைப்போம். நிர்மாணிப்போம். மரக்கறி மற்றும் பழங்களை குப்பைகளில் போடவேண்டிய அவசியமில்லை.

இந்திய அரசு எமக்காக உதவுகின்றது. இலங்கையில் களஞ்சியசாலை கட்டுப்பாடு தொடர்பான அனுபவமுள்ள நிறுவனம் இல்லாததால் இதன் முகாமைத்துவத்தை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கவிருக்கின்றோம். இது தொடர்பில் முதற்கட்டமாக எதிர்வரும் வாரத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினரைச் சந்திக்கவும் நகர அதிகார சபையுடன் பேச்சு நடத்தவும் காணியைப் பெற்றுக்கொள்ளவும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இது நாம் முன்னெடுத்த ஒரு முக்கிய மான வேலைத்திட்டமாகும்.

சமுர்த்தி பெறும் பயனாளிகளை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சமுர்த்திப் பயனாளர்களைத் தெரிவு செய்யும் போது இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பில் எமக்குத் தகவல்கள் கிடைக்கின்றன. இந்த விடயத்தில் பொறுப்புடன் செயற்படுமாறு அமைச்சருக்கு கூறியுள்ளேன். இந்தச் செயற்பாடுகளை மிக விரைவாக முன்னெடுக்கவுள்ளதால் தேவையான அதிகாரிகளை அதிகரிக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அதிகாரிகளைக் கொண்ட குழுவை நியமித்திருக்கின்றேன். அந்தக் குழுவினூடாக சமுர்த்தி வங்கியை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்குச் சிலர் எதிர்ப்பு வெளியிடுகின்றனர். எனினும் கிராமத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் கடனை மேலும் அதிகரிப்பதற்கான வங்கியாக சமுர்த்தி வங்கியை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ரஜரட்டை மற்றும் வடக்குப் பகுதியில் 15 ஆயிரம் ஏக்கர் தெங்கு செய்கையை முன்னெடுப்பதற்கு பேச்சு இடம்பெறுகின்றது. முல்லைத்தீவு மாங்குளம் பிரதேசத்தில் இதற்காக 10 ஆயிரம் ஏக்கர் பெறப்படவுள்ளது. இந்த நடவடிக்கையை அமைச்சர் நவீன் திசாநாயக்க முன்னெடுத்து வருகின்றார் - என்றார். (5,31)

## நாளை முதல்...

மண்ணெண்ணெய் உதவி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நீர்கொழும்பு மீனவர் அமைப்புக்கள் உள்ளிட்ட பல மீனவ அமைப்புகள் கடந்த சில தினங்களாகப் போராட்டம் நடத்தி வந்தன. போராட்டம் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது. இன்றைய தினம் நாட்டின் சகல மீனவ அமைப்பு களையும் இணைத்துக் கொண்டு மீண்டும் போராட்டத்தை நடத்தத் தயாராகி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மண்ணெண்ணெய் குறைந்த விலையில் வழங்கப்படும் என்று அரசு வாக்குறுதி கொடுத்த போதிலும் இன்று வரையில் தமக்கான மண்ணெண்ணெய் உதவி கிடைக்கவில்லை என்று கூறியே மேற்படி போராட்டத்தை நடத்தினர்.

இது குறித்து கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா கூறுகையில், அவர்களின் கோரிக்கைகளை முன்வைத்து மீனவ அமைப்புகள் என்னுடன் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை. நானும் இந்தப் பேச்சுக்களில் இருந்து விலகிக்கொண்டுள்ளேன் - என்றார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள இராஜாங்க அமைச்சர் திலீப் வெத ஆராச்சி ஊடக அறிக்கையை நேற்று வெளியிட்டுள்ளார். அதில், நாளை செவ்வாய்க் கிழமை முதல் மண்ணெண்ணெய் விலை குறைக்கப்படும். 101 ரூபாவாக தற்போது உள்ள ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யின் விலை 70 ரூபா வரையில் குறைக்கப்படும் என்றார். (5,31)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09.05.1962

மறைவு 24.05.2017

அமரர்

**வடிவேலு அன்பழகன்**

(சின்னக்கிளி)

திதி: திரயோதசி 11.06.2018

அன்பின் திருவுருவே பாசமிகு அப்பாவே
எமைவிட்டு பிரிந்து நீங்கள்
ஆண்டு ஒன்று கழிந்ததுவோ
ஆறாது எம் துயரம் ஆனாலும்
வாழ்கின்றீர் எம் நெஞ்சில் உமை
மறவோமே நெஞ்சிருக்கும்வரை
உங்கள் ஆத்மா சாந்திபெற
என்றென்றும் இறையடி துதிக்கின்றோம்.

12, பாரதி வீதி, நாயன்மார்கட்டு
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு



தோற்றம் 04 . 05 . 1948

மறைவு 23 . 05 . 2017

**திருமதி சரஸ்வதி இலகுநாதர்**

ஆண்டு ஒன்று சென்றது அம்மா
எங்களின் அம்மா எம் இதயத்தில்
என்றும் குடிகொண்டுள்ளார்
உங்கள் நினைவுகள் என்றும் மறைந்து போகாது
நாளும் பொழுதும் உங்கள் ஞாபகங்கள்
கண்முன்னேவந்து போகிறது
எங்களுடன் உங்கள் ஞாபகங்கள்.

இன்று (11.06.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு
கைதடி. 077 045 5909

என்றும் நினைவில்
இ.விசிதரன் (மகன்)

## மரண அறிவித்தல்

### சண்முகரத்தின குருக்கள் சிவகடாஷ்ஷ குருக்கள்



தாவடி தெற்கு, ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட சண்முகரத்தின குருக்கள் சிவகடாஷ்ஷ குருக்கள் நேற்று (10.06.2018) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 06.30 மணிக்கு இறைபதம் அடைந்தார்.

அன்னார் மீனாஷ்ஷிஅம்மாவின் கணவரும் விசாகேஸ்வர குருக்கள், விவஸ்வதமூர்த்தி குருக்கள், பிரபாகரக் குருக்கள், பகீரதக்குருக்கள் விரூபாட்ஷி, விஜிதா, வித்தியா, விஜிகலா, காலஞ்சென்றவர்களான விஸ்ரவசு சர்மா, விஜிசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் நித்தியானந்த குருக்கள், சுதாகரக்குருக்கள், தீபதர்சன குருக்கள், லக்சிகா, அம்பிகாதேவி, தர்சினி, காலஞ்சென்ற குகனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வெங்கடேஸ்வர குருக்கள், கிரிஜா, காயத்திரி, திவாசர்மா, நிஷாசர்மா, சாருஜன் சர்மா, சாகாம்பரி, நிஷேவிதசர்மா, மானஷா, லாவன்ஜன் சர்மா, திவ்வியா, ஜானு, ஹரிசர்மா, அக்ஷயா, அம்சிகா, ஆயுஷ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் நிகிதசர்மா, புகழ்வீரசர்மா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2018) திங்கட்கிழமை பி.ப. 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
**மீனாஷ்ஷி அம்மா (மனைவி)**

(CS 17393/15/17)

## மரண அறிவித்தல்

### காசிநாதர் சதாசிவம் அருளானந்தம்

(நியூ மஞ்சுளா ரெக்ஸ், அருளானந்தம் பவுனிங்)



காரைநகர் வேதர்அடைப்பைப் பிறப்பிடமாகவும், 71, கடற்கரை வீதி, நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் சதாசிவம் அருளானந்தம் (நியூ மஞ்சுளா ரெக்ஸ், அருளானந்தம் பவுனிங்) நேற்று (10.06.2018) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் மஞ்சுளாவின் அன்புத்தந்தையும் சக்திவேலின் அன்புமாமனாரும் வேந்தனின் அன்புபேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.06.2018) செவ்வாய்க் கிழமை பி.ப. 4 மணிக்கு 68, மெயின் வீதி நீர்கொழும்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்கொழும்பு பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 3559 974 தகவல் த. சக்திவேல்

# நீலங்களின் போர் துடுப்பாட்டம் கிளிநொச்சி இந்துவுக்கு வெற்றி



யாழ்ப்பாணம், ஜீன் 11

நீலங்களின் போர் என வர்ணிக்கப்படும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணிக்கும் கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 6 இலக்குகளால் வெற்றிபெற்றது.

**முதலாவது இன்னிங்ஸ்**

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 148 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சயந்தன் 87 ஓட்டங்களையும், பிரதீக்சன் 18 ஓட்டங்களையும், பகலவன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியின் சார்பில் அனுக்சன், பேபிசன் இருவரும் தலா 3 இலக்குகளையும், பார்த்தீபன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி 9 இலக்குகளை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக பிரதீசன் 98 ஓட்டங்களையும், அனுக்சன் 38 ஓட்டங்களையும், பார்த்தீபன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிருசாந் 3 இலக்குகளையும், லக்சன், அருள் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

**இரண்டாவது இன்னிங்ஸ்**

இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி சகல இலக்குகளையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. பிரதீக்சன் 89 ஓட்டங்களையும், யுகேந்திரன் 36 ஓட்டங்களையும், சுபிகரன் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தமிழினியன் 3 இலக்குகளையும், பார்த்தீபன், பேபிசன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழத்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 4 இலக்குகளை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியின் பிரதீசன், சிறந்த பந்து வீச்சாளராகவும், சிறந்த களத்தடுப்பாளராகவும் அதே அணியின் பேபிசன், அகிலன் இருவரும் தெரிவாகினர். சிறந்த துடுப்பாட்ட வீரராக கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணியின் பிரதீக்சன் தெரிவானார். சிறந்த சகலதுறை வீரராக கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியின் அனுக்சன் தெரிவானார். (ம-23)

## சங்கானை சம்பியனானது




யாழ்ப்பாணம், ஜீன் 11

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலக இளைஞர் சம்மேளனங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் சங்கானை பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர் சம்மேளன அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக இளைஞர் சம்மேளன அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக இளைஞர்சம்மேளன அணி 12:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக இளைஞர் சம்மேளன அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த ஆட்ட நேர முடிவில் சங்கானை பிரதேச செயலக இளைஞர் சம்மேளன அணி 29:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-422)

## கரப்பந்தாட்டத் தொடரில்
# வீரகத்திப்பிள்ளை ம.வி கிண்ணத்தை வென்றது




யாழ்ப்பாணம், ஜீன் 11

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில், 15 வயதுக்குட்பட்ட ஆண்கள்பிரிவில் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயமும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் 25:17, 25:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிருசெற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி. (ம-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜீன் 11

வடக்கு கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றிங்கோ ரைட்ரெய்ஸ் அணியை எதிர்த்து முல்லை பீனிக்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் மாவட்டச் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜீன் 11

யாழ்ப்பாண மாவட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி மாவட்டச் சம்பியனாக மகுடம் சூடியது.




கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயமும் பலப்பரீட்சை நடத்தின.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 21:13, 21:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி. (ம-108)

# தென்கிழக்கு பல்கலையை வீழ்த்தியது யாழ். பல்கலை

யாழ்ப்பாணம், ஜீன் 11

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 162 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

கிழக்குப் பல்கலைக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து தென்கிழக்குப் பல்கலைக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக ஜனந்தன் ஆட்டம் இழக்காமல் 35, கபில் 34, டனுஸ் 28 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ராஜபக்ச, தேனுவரா ஆகியோர் 2 இலக்குகளையும் பதிர்னா, பண்டார. நுவான் பெல்வதா ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்கிழக்குப் பல்கலைக் கழகம் 27.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 50 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதிகபட்சமாக அம்ஜத் 12, நுவான் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் குருகுலசூரிய 3, துவாரகசீலன் 2, சுபேந்திரன் 2 இலக்குகளையும் ஜனந்தன், லோகதீஸ்வர், செந்தூரன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம-422)





# சுழல்பந்துவீச்சில் இந்தியாவை விட ஆப்கானிஸ்தான் பலமான அணியே


## ஸ்ரானிக்ஸை சொல்கிறார்

சுழற்பந்து வீச்சைப் பொறுத்த வரையில் இந்தியாவை விடவும் ஆப்கானிஸ்தான் வலுவான அணி என்று தெரிவித்தார் ஆப்கானிஸ்தான் அணியின் தலைவர் ஸ்ரானிக்ஸை.

பன்னாட்டு கிரிக்கெட் சபை ஆப்கானிஸ்தான் அணிக்கு அண்மையில் டெஸ்ட் அந்தஸ்தைவழங்கியதையடுத்து ஆப்கானிஸ்தான் அணிதனது முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியாவை எதிர்த்து எதிர்வரும் 14ஆம் திகதி மோதுகிறது. இந்த ஆட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஸ்ரானிக்ஸை இவ்வாறு தெரிவித்தார்.

"நாங்கள் ரசிட் கான், முஜீப் உர் ரஹ்மான், மொகமது நபி, ரஹ்மத் சா, ஜகிர் கான் போன்ற தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர்களைக் கொண்டுள்ளோம் என்பதை உலகமே அறியும். இவர்களைப் பின்பற்றி ஏராளமான சுழற்பந்து வீச்சாளர்கள் உருவாகி வருகிறார்கள். இது சிறப்பான விடயம். என்னுடைய கருத்தின்படி, இந்தியாவை விட நாங்கள் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களை வைத்துள்ளோம். நாங்கள் இந்தியாவில் விளையாட இருக்கிறோம். இந்தியாவில் சுழற்பந்து வீச்சு சிறப்பானதாக இருக்கும். நாங்கள் இந்தியாவிற்கு நெருக்கடி கொடுப்போம். அதேபோல் எங்களுக்கும் நெருக்கடி இருக்கும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# மகுடம் சூடினார் சிமோனா கேலப்



பிரென்ஞ் பகிரங்கத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப்.


நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான கேலப்பை எதிர்த்து தரப்படுத்தலில் 10ஆவது இடத்தில் உள்ளவரான அமெரிக்க வீராங்கனை ஸ்ரீபன்ஸ் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 4:6 என்ற அடிப்படையில் இழந்தார் கேலப். இதனால் அடுத்த இரண்டு செற்களிலும் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி கேலப்புக்கு ஏற்பட்டது. இரண்டாவது செற்றை கடும் போராட்டத்துக்கு மத்தியில் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கேலப். மூன்றாவது செற் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கேலப்பின் வசமாக அவர் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான கேலப் கைப்பற்றிய முதலாவது பகிரங்கத் தொடர் இதுவாகும். இதையடுத்து அவருக்குப் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. அத்துடன் அடுத்த சில மாதங்களுக்கு முதலிடத்தில் தொடரக்கூடிய வாய்ப்பையும் இந்த பிரென்ஞ் கிண்ணம் கேலப்புக்கு வழங்கியுள்ளது. (ம)

## உலகக்கிண்ணம்

# மெய்ப்படுமா உருகுவேக்கு?



உருகுவே அணி உலகக் கிண்ணத் தொடருக்கு 13ஆவது முறையாகத் தகுதி பெற்றுள்ளது. 1930ஆம் ஆண்டில் உலகக் கிண்ணத்தை வென்ற முதல் அணி என்ற சாதனையைப் படைத்த உருகுவே, 1950ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாகக் கிண்ணம் வென்றிருந்தது. அதன் பின்னர் கிண்ணத்தை வெல்ல 68 ஆண்டுகளாகப் போராடி வருகிறது. எனினும் அந்த அணி கடந்த 10 ஆண்டுகளில் பயிற்சியாளர் ஆஸ்கார் தபரேஸ் வழிகாட்டுதலில் ஒரு நிலையான மற்றும் வளமான காலக்கட்டத்துக்குள் நுழைந்துள்ளது.




**நான் அவுட் சுற்றுக்குச் செல்ல மிக இலகுவான வாய்ப்புள்ளது**

ரஷ்ய உலகக் கிண்ணத் தொடரில் உருகுவே அணி எளிதான 'ஏ' பிரிவில் இடம்பிடித்துள்ளது. இதே பிரிவில் தொடரை நடத்தும் ரஷ்யா, எகிப்து, சவூதி அரேபியா ஆகிய அணிகளும் உள்ளன. நாக் அவுட் சுற்றுக்கு நுழைவதில் உருகுவே அணிக்கு எந்தவித சிரமமும் இருக்காது. நட்சத்திர வீரர்களான லூயிஸ் சுவாரஸ், எடிசன் கவானி, டிகோ காட்வின், பெர்னாண்டோ முஸ்லெரா ஆகியோர் அணியின் தூண்களாக உள்ளனர். தகுதிச் சுற்றில் உருகுவே அணி 9 வெற்றி, 4 சமநிலை, 5 தோல்விகளை பதிவுசெய்திருந்தது. உருகுவே அணி எப்போதும் களத்தில் 4-4-2 என்ற வடிவத்திலேயே வீரர்களை களமிறக்கும். இதில் சுவாரெஸ், கவானி சரியான கலவையாக இடம்பெறுவார்கள். அந்த அணிக்கு நடுகளம்தான் சற்று பின்னடைவாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. எனினும் பந்தை விரைவாக கடத்திச் செல்லும் திறன், சிறந்த தடுப்பாட்டம் ஆகியவற்றால் மற்ற விட யங்களைச் சரி செய்துகொள்ள முடியும் என நம்பிக்கையைக் கொண்டுள்ளது உருகுவே அணி.

**கவானி, லூயிஸ் சுவாரஸ் கூட்டணியில் நம்பிக்கை**

அந்த அணியின் கோல் அடிக்கும் இயந்திரமாக வர்ணிக்கப்படுபவர் கவானி. தொழில்முறை ஆட்டங்களில் பரிஸ் செயின்ட் ஜெர்மன் அணிக்காக விளையாடி வரும் க்வானி, உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிச்சுற்று ஆட்டங்களில் 10 கோல்கள் அடித்திருந்தார். மற்றொரு நட்சத்திர வீரரான சுவாரெஸ் கோல்கள் அடிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுப்பதில் வல்லவர். பார்சிலோனா அணியில் மெஸ்ஸிக்கு உறுதுணையாக இருந்து வரும் சுவாரெஸ் உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்றில் 7 கோல்கள் அடிக்க உதவிபுரிந்துள்ளார்.

உலகின் தலை சிறந்த வீரர்களாக கருப்படும் கவானியும், சுவாரெஸ்ும் வலுவான திறனை களத்தில் வெளிப்படுத்தும் பட்சத்தில் எதிரணியின் தடுப்பு வியூகங்கள் குறித்து உருகுவே அணி அதிகம் பயம் கொள்ளத்தேவை இருக்காது. உருகுவே அணிக்காக சுவாரெஸ் 97 ஆட்டங்களில் 50 கோல்களும், கவானி 100 ஆட்டங்களில் 42 கோல்களும் அடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் சுவாரெஸ் உலகக் கிண்ணத் தொடரில் 5 கோல்கள் அடித்துள்ளார்.

ஷாம்சனின் SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
ஆசிரியர்கள், அரச தனியார் அலுவலர்கள்
பட்டதாரிகள், உயர்கல்வி மாணவர்கள்
வெளிநாடுசெல்வோர், இளைஞர் யுவதிகள்
சனி, ஞாயிறு பிரிவுகள் - 16. 06. 2018
சனி, ஞாயிறு 3 மாத பயிற்சி
பிரிவு1: 08-10 பிரிவு2: 03-05
செவ், வியாழன் பிரிவுகள் - 12. 06. 2018
செவ், வியாழன் 3 மாத பயிற்சி
பிரிவு1: 08-10 பிரிவு2: 10-12
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
SAAMSON 279, வெலிங்டன் சந்தி, யாழ்நகர். 077 1570 486

விரைவு
பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• வல்வெட்டித்துறை
0768228240
V2 TRAVELS

# ரஷ்ய உலகக் கிண்ணத் தொடர் மறக்க முடியாததாக அமையும்

## வரவேற்புரையில் புடின்




உலகக்கிண்ணத் தொடரில் விளையாடவுள்ள அணிகள், அணிகளின் நிர்வாகிகள், ரசிகர்கள் என அனைவரையும் ரஷ்யா அன்புடன் வரவேற்கிறது. இந்த உலகக்கிண்ணத் தொடர் உங்களுக்கு இனிமையான தொடராக அமையும் என்று தெரிவித்தார் ரஷ்ய அதிபர் புடின்.




உலகக்கிண்ணத் தொடர் இம்முறை ரஷ்யாவில் நடைபெறுகிறது. எதிர்வரும் 14ஆம் திகதி தொடர் ஆரம்பமாகிறது. இதையடுத்து தொடரை நடத்தும் நாட்டின் அதிபர் என்கிற வகையில், ரஷ்யத் தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அனைத்து கால்பந்து ரசிகர்களையும், சிறப்பு வாய்ந்த அணிகளையும் வரவேற்கிறேன். சிறந்த கால்பந்து குடும்பத்தின் பிரதிநிதிகளாக உங்களை வரவேற்பதில் மிகுந்த மிகிழ்ச்சியாகவும், மதிப்பாகவும் உள்ளது. பேசன், எமோசனுடன் இந்த நிகழ்வை கொண்டாட நாங்கள் விரும்புகிறோம். உங்களுக்கு ரஷ்யப் பயணம் மறக்க முடியாத அனுபவமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று புடின் மேலும் தெரிவித்தார். (ம)

## காணவில்லை

இந்த மாதம் 6 ஆம் திகதி சுன்னாகம்
அரச மருத்துவமனைக்கு கொண்டு சென்ற
சாம்பல் நிறக் கடுவன்
பூனையைக் காணவில்லை
கு.டேவிற் - உடுவில்
077 191 8526, 077 865 8897
பிடித்துத்தருபவருக்கு சன்மானம் தரப்படும்
(cs.13061) (13.17)

## காணி விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில்
எருவன் பிள்ளையார் ஆலயத்திற்கு
அருகில் காணிகள் விற்பனைக்கு
உண்டு.
(9263) (14.17) தொடர்பு: 077 501 0196

"A" என்ற அருங்கனியைப் பெற்றிட
வணிகக்கல்வி தொடர்பரீட்சை - 2018 A/L
பரீட்சை - 07
மாவட்டரீதியில் 75 புள்ளிகளிற்கு மேல் பெற்றவர்களை
பாராட்டி வாழ்த்துதல்

| எண் | பெயர் | மாவட்ட நிலை | புள்ளி | பாடசாலை |
|---|---|---|---|---|
| 01 | துவாரகேசன் | 01 | 94 | யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி |
| 02 | டிலக்ஷனா | 02 | 92 | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 03 | டிஷானி | 03 | 91 | யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| 04 | அபிஷாயினி | 03 | 91 | யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி |
| 05 | இலக்கியா | 05 | 89 | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 06 | சாம்பவி | 06 | 88 | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 07 | தர்மிலன் | 06 | 88 | யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| 08 | வினுஜா | 08 | 87 | யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி |
| 09 | கஜவரன் | 08 | 87 | யா/ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி |
| 10 | றொமின்சியா | 08 | 87 | யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி |
| 11 | மகிழரசி | 11 | 85 | யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி |
| 12 | மதுரிகா | 11 | 85 | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 13 | குகவதனி | 13 | 84 | கிளி/ பளை மத்திய கல்லூரி |
| 14 | வினித்தா | 14 | 83 | கிளி/ பூநகரி மத்திய கல்லூரி |
| 15 | துவாரகன் | 15 | 82 | யா/ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி |
| 16 | N.F.நஸ்மா | 15 | 82 | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 17 | ஹரிஸ்பாபு | 17 | 80 | யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 18 | நிதுஷனா | 17 | 80 | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 19 | கோபிகா | 19 | 79 | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி |
| 20 | டினோஜன் | 20 | 78 | கிளி/ மத்திய மகா வித்தியாலயம் |
| 21 | றொனால்ட் | 21 | 77 | வெளி மாவட்டம் |
| 22 | ஹிந்துயா | 21 | 77 | கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம் |
| 23 | விதுஷனா | 23 | 75 | யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை |

வளவாளர்
S.K. பாலசபேஷ்
B.com (HN Dip in Acc) PG Dip in Edu. (OUSL)

| NEC | HAC | பாரதி | BPI | SKB Business Hall |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம். ஆனைப்பந்தி | மீசாலை | சித்தங்கேணி | யாழ்ப்பாணம் | கொழும்புத்துறை. |

Aa International College Vaddukodai

பயிற்சிப் பரீட்சை கடினமாக அமைந்தால் இறுதி பரீட்சை இலகுவாக அமையும்.
"ஆயிரம் கைகள் ஓங்கினாலும் தடுத்தாலும் சூரியன் மறைவதில்லை,
அதேபோல் யார் ஆணையிட்டு தடுத்தாலும் என்பணி ஓயப்போவதில்லை."
"Doing things rights"

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்,
பொதிகள் விநியோக சேவை
- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

நெஞ்சை விட்டகலாத
14 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 08 . 04 . 1972
விண்ணில் 11 . 06 . 2004

அமரர் அம்புரோஸ் அலெக்ஸ்புறுஸ்ரன் [ஜெனி]

மலர்முகம் கண்டே உள்ளம் களிந்தோம் - அப்பா
உம் நிழலில் இருந்து வாழ்ந்ததை மறவோம் - அப்பா
நீர் எம் வாழ்வின் வழிகாட்டி
பாசம் ஒன்றைத்தவிர வேறென்ன நாம் தந்தோம் - அப்பா
வந்தவர் எல்லாம் போவது உண்மை
விதியென ஒன்று உண்டென அறிந்தோம் - அப்பா
சிந்தனை எமக்குத் தோன்றிய போதும்
நெஞ்சில் செப்பிட முடியாத துயரே மோசம் !
உந்தனை இழந்த உணர்வே மிஞ்சும் - என்றும்
உள்ளத்தில் உமது நினைவே துஞ்சும்
வந்தனை செய்வோம் வாழும் வரையில் - எம்
சோகம் சொல்லவும் வார்த்தை இல்லை - அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எந்நாளும் வேண்டுகின்றோம் இறைவனிடம்

வெற்றிலைக்கேணி,
முள்ளியான்.

நீங்கா நினைவுகளுடன் :
மனைவி, பிள்ளைகள்

## வவுனியா சதுரங்க சம்மேளனத்தின் பரிசளிப்பு நிகழ்வு

வவுனியா, ஜூன் 11

வவுனியா சதுரங்க சம்மேளனத்தினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட திறந்த வயதுப்பிரிவு சதுரங்கத் தொடரின் பரிசளிப்பு நிகழ்வு நெல்லி ஸ்டார் விடுதியில் வவுனியா சதுரங்க சம்மேளனத்தின் செயலாளர் பிரபாகரன் ஜானுஜன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், பன்னாட்டு இந்து இளைஞர் பேரவையின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் சிவ.கஜேந்திரகுமார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-110)



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத
நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.